2. கோவிந்தையார் இலம்பகம்

ஆர்வ வேரிந்து அச்ச மாந்திபோய்
வீரன் தாளிழல் விளங்க தோற்றபின்
வார் மொக்குளின் மாய்ந்து விண்தொழச்
சோர்வில் கொள்கையான் தோற்ற நீக்கினான் 409

(ஆர்வம் - ஆசை; மொக்குள் - நீர்க்குமிழி; மாய்தல் - மறைதல்; விண் - விண்ணுலகத்திலுள்ள தேவர்; ஆகுபெயர். கொள்கை - நயம்; தோற்றம் - பிறவி)

நம்ப வித்தலை நாக நன்னகர்ப்
பைம்பொ னோடைசூழ் பரும யானையும்
செம்பொ னின்கொடித் தேரும் வாசியும்
வெம்ப ஊர்ந்துலாம் வேளி வாணிரோ 410

(நம்பன் - நமக்குச் சிறந்தவன்; நாகம் - பன்னகலோகம்; நாம்புகளின் உலகம்; ஓடை - யானையின் நெற்றிப் பட்டம்; வெம்புதல் - விரும்புதல்; வேளியான் - மன்மதன்; வாசி - குதிரை)

(வேறு)

கலையினை நகையாறும் காட்சிக் கின்பமும்
சிலையினை நகையாறும் வினைச் செல்வமும்
மலையினி ளகலிய மார்ப னல்லதில்
உலகினி லிலையென வொருவ னாயினான் 411

(காட்சி - காணுதல்; அகலிய - அகன்ற; இலை - இல்லை; ஒருவனாயினான் - ஒப்பற்றவன் ஆனான்)

சீவகனை விட்டுப் பிரிந்து இராசமாபுரத்தை விட்டுச் சென்ற நல்லாசிரியன், பாசவேரினை அறுத்துப் பற்றினை எல்லாம் விட்டு, ஸ்ரீவர்த்தமானரின் திருவடிப் பேற்றினை அடைய நோன்புடன் இருந்து, தளராத நலமியற்றி, நீர்க்குமிழி போன்ற பொய்யுடம்பை விட்டு விண்ணவர் போற்ற மண்ணகம் துறந்தான். சீவகன் நாகலோகம் போல எழில் கொண்டு விளங்கும் அந்நகரின் கண்ணே புதிய பொன்னுருக்கிச் செய்த முகபடாம் அணிந்த யானையும் பொன் பூட்டிய நீண்ட கொடியுடைய தேரும், குதிரையும் செலுத்தி காமனைப் போல் மகளிர் காதல் துயர் நிறைந்து வாட உலாவருவான் ஆயினான். இன்னும் கலை அறியும் காண மகிழ்வூட்டும் அழகுருவும் படைக்கலப் பயிற்சியும், வினைப் பாட்டினைத் தேர்ச்சியும் ஒருங்கே பெற்றவன்; மலை போன்ற மார்புடைய சீவகனே அல்லாது வேறுயாரும் இவ்வுலகில் இல்லை என்னும்படி ஒப்பற்று விளங்கினான்.

வேறு

நாமம் வெற்றிவேல் நகைகொள் மார்பனைக்
காமனெனக் கன்னி மங்கையர்
தாம ரைக்கணுற் பருகத் தாழ்ந்துலாம்
சேம கந்திறத் துற்ற கூறுவாம் 412

(நாம் - அச்சம்; நகை - முத்துமாலை; மார்பன் - சீவகன்)

சில்லம் போதின்மேல் நிரைந்து தேனுலாம்
முல்லை கார்எனப் பூப்ப மொய்த்திலை
புல்லு மன்றுளிப் பொழிந்து பாய்படும்
கல்லென் கம்மையோர் காடதின் மிக்கதே 413

(சில் அம் போது எனப்பிரிக்க. போது - மலரும் பருவத்து அரும்பு; கார் என - கார்காலமே என்றெண்ணி; முல்லை

[illegible] மலரைப்போல் பூக்கும்; நிரை - பசுக்கூட்டம்; கன்று உள்ள - கன்றை நினைத்து; கம்மை - ஒலி; நிறைந்து - சாய்ந்து.)

மிக்க நாளினால் வேழ முழக்கமும்
உக்க தேனினோ டூறி வார்கனை
ஒக்க வாயநிறைந் தொழுகு குன்றின்மேல்
மக்க ளீண்டினார் மடங்கல் மொய்ம்பினார் 414

(உக்க - சிந்திய; வார் - ஒழுகுதலால்; ஒக்க - ஒன்றுசேர; மக்கள் - இங்கே வேடர்களைக் குறித்தது; மடங்கல் - சிங்கம்; ஈண்டினார் - கூடினார்)

இப்படிப் பல வகையிலும் சிறந்து, பகைவர் மனத்தில் அச்சத்தை மட்டும் வெற்றி வேலையும் முத்து மாலைகளையும் அணிந்த சீவகனை, இன்பக் கடவுளான மன்மதனே [illegible] கன்னிப் பெண்கள் தாமரை மலர் போன்ற தம் கண்களால் அவன் அழகை அள்ளிப்பருக வாழும் நாளிலே; அவன் வீரம் விளைந்த நிகழ்ச்சி பற்றிக் கூறுவோம். பூத்த சில மரங்களிலே சாய்ந்து வண்டுகள் மொய்க்க முல்லைப் பூக்கள் [illegible] எனப் பூத்து மலர அப்படிப் பூத்து நிறைந்த பூக்களை பசுக் கூட்டங்கள் தங்களை அணைய வரும் கன்றுகள் என நினைத்து மடி சுரந்து பால்பொழிய உண்டாகும் 'கல்' என்னும் ஓசை கடலோசையிலும் மிக்குடையதாகும். இவ்வித ஒலி நிறைந்து ஒரு புறமிருக்க, யானையின் மும்மதமும், மலர்கள் சிந்திய தேனோடு சேர்ந்து வழிவது போல; பெரிய நீர்க் கனைகள் போய் நிறைந்து வழியும் மலையின் மேல், சிங்கம் போன்ற வலிமை மிக்க வேடரெல்லாம் ஒன்று கூடினர்.

ஆநிரை கவர அனைவரும் கூடினர்

மன்னன் வெள்ளிநிரை வந்து கன்றுளும்
இன்ன நாளினாற் கோடு நாமெனச்
சொன்ன வாயுளே யொருவன் புட்குரல்
முன்னங் கூறினான் முழுது ணர்வினான் 415

(கன்றுளும் - சேரும்; ஒருவன் - ஒரு வேடன்; புள் - இங்கே பறவை; சொன்னவாயுள் - சொன்ன உடனேயே)

அடைது நாநிரை யடைந்த கலையே
குடையும் பிச்சமு மொழியக் கோல்பட
உடையும் பின்னரே யொருவன் தேரினால்
உடைதுஞ் சுடுவில் தேன் உடைந்த வண்ணமே 416

(குடையும் பிச்சமும் - வெண்கொற்றக் கொடி; உடைதும் - தோற்றுப் போவோம்; சுடுவில் - சுடுதலால்; சுடுதலால் தேனினம் வெருண்டோடுவதைப் போல)

என்று கூறலும் ஏழை வேட்டுவீர்
ஒன்று தேரினோ டொருவன் கூற்றமே
என்று கூறினு மொருவ னென்செயும்
இன்று கோடுநா மெழுகென் றேகினார் 417

(என்று கூறலும் - என்று நிமித்திகன் கூறுதலும்; ஏழை - அறிவின்மை; கோடும் - பற்றுவோம்)

மன்னனுடைய ஆநிரைகள் வந்து சேரும் இந்த இளவேனில் பருவத்திலே நாம் அவற்றைக் கைப்பற்றுவோம், என்று கூடிய வேடர் தலைவன் ஒருவன் கூறவும்; அவன் அப்படிச் சொன்ன உடனேயே முன் கூவிய பறவையின் ஒலிக்குறிப்பின் பயனை முழுதாய்ந்து உணர்ந்த முதியோனாகிய நிமித்திகன் ஒருவன், "நாம் வேந்தனின் ஆநிரையைக் கவர்வோம்; கவர்ந்த உடனேயே அரசனது படைகள் வந்து போரிட்டு வெண்கொற்றக் குடையும், படையும் சிதறிக் கிடக்கத் தோற்று ஓடும். பின்னர் தேரேறி ஒருவன் வருவான். அவனிடம், தீப்பந்தம் பற்றிய தேன்கூட்டில் உள்ள தேனீக்கள் போல் நம் படைகள் தோற்று ஓடும்" - என்று கூற; பின்னொருவன் சொல்லுவான் "ஏழை வேடர்களே ஒருவன் கொலைவல்ல எமனே என்றாலும் அவன் தனியாக வந்து நம்மை என்ன செய்ய இயலும், எனவே நாம்

"ஆநிரை கவரப் போவோம் வருக" - எனவும் அனைவரும் உடன் போயினர்.

வண்டு மூசறா நறவ மார்ந்தவர்
தொண்ட கப்பறை துடியொ டார்த்தெழ
விண்டு தெய்வதம் வணங்கி வெல்கென
மண்டி னார்நிரை மணந்த காலையே 418

(மூசு அறா - மொய்த்தல் நீங்காத. நறவம் - கள்; தொண்டகப் பறை குறிஞ்சி நிலத்துக்குரியது. தெய்வதம்: இங்கே முருகக்கடவுள். மண்டினார் - மிக்குச் சென்றார்; நிரை மணந்த காலை - பசு நிரைகள் கூடிய சமயத்தில்)

பூத்த கோங்குபோற் பொன்சு மந்துளார்
ஆய்த்தி யர்நலக்கு ஆசெல் தூணனான்
கோத்த நித்திலக் கோதை மார்பினான்
வாய்த்த அந்நிரை வள்ளு வன்சொனான் 419

(கோங்கு - ஒருவகை மரம்; அதன் பூக்கள் பொன்னிற முடையன. ஆய்த்தியர் - ஆய்ச்சியர்; நலக்கு - நலத்துக்கு; வாய்த்த - நிமித்தம் கூறுதல் தப்பாத; வள்ளுவன் - வருங்காரியம் உரைப்பவனாகிய நிமித்திகன்; ஆசெல் - பசுக்கள் சென்று உராயும்)

பிள்ளை யுள்புகுந் தழித்த தாதலால்
எள்ளன் மின்னிரை யின்று நீரெனா
வெள்ளி வள்ளியின் விளங்கு தோளலார்
முள்கு மாயரும் மொய்ம்பொ டேகினார் 420

(பிள்ளை - காரியென்னும் பறவை; காரிப்புள். வள்ளி - வளை; முள்குதல் - முயங்குதல்; ஆயர் - இடையர்; மொய்ம்பு - வன்மை)

வண்டுகள் நீங்காது மொய்க்கின்ற தேன்மதுவை நிறையப் பருகி தொண்டகப் பறையும் உடுக்கையும் சேர்ந்து ஆரவா

ரத்துடன் ஒலிக்க, வெற்றி கிடைப்பதாக என்று தெய்வத்தை வணங்கி; பசுக்கூட்டங்கள் வந்தவுடன் அவற்றைக் கவர வேடர்களும் சென்றனர். பூத்து மலர்ந்த கோங்குமரம் போல் பொன்னணி சுமந்த, ஆய்ச்சியர்க்கு நலம் செய்யும் பசுக்கள் உராயும் தூண் போன்ற வலிவுடையவனும், கோத்துத் தொடுத்த முத்துமாலை அணிந்த மார்புடையவனுமாகிய நந்தகோனின் ஆநிரையிலிருந்த குறிகூறும் நிமித்திகன்; காரிப்புள் என்னும் பறவை பசுக் கூட்டத்திலே புகுந்து அழிவுக்குறி காட்டியது ஆகவே இன்று நீர் நிரை காவலை இகழாது செம்மையுறச் செய்க என்று கூற, வெள்ளை வளை அணிந்த தோளுடை மகளிர் காதல் தூய்க்கும் இளைஞரும் மிக்க வலியோடு அன்று காவல் காக்கப் புறப்பட்டனர்.

காய மீனெனக் கலந்து கானின்
மேய வெந்தொழில் வேட ரார்த்துடன்
பாய மாரிபோற் பகழி சிந்தினார்
ஆயர் மத்தெறி தயிரி னாயினார் 421

(காயம் - ஆகாயம்; மீன் - விண்மீன்; நிரை - பசுக்கூட்டம் ஆர்த்து - ஆரவாரித்து; ஆயர் - இடையர்)

குழலு நவியமும் ஒழியக் கோவலர்
கழலக் காடுபோய்க் கன்று தாம்பரிந்து
உழலை பாய்ந்துலா முன்றிற் பள்ளியுள்
மழலைத் தீஞ்சொலார் மறுக வாய்விட்டார் 422

(நவியம் - கோடரி; கோவலர் - இடையர்; கழல - நீங்க. கன்று தாம்பு அரிந்து - கன்றுகள் கயிற்றை அறுத்து; உழலை - தடைமரம், உலாம் - உலாவும்; பள்ளி - இடைச்சேரி; மழலைத் தீஞ்சொலார் - ஆய்ச்சியர்; மறுக - மயங்கும்படி; முன்றில் வாயில்)

மத்தம் புல்லிய கயிற்றின் மற்றவர்
அத்த லைவிடின் இத்த லைவிடார்
உய்த்த ஏரென வுடைத யிர்ப்புளி
மொய்த்த தோளவர் முழுது மீண்டினார் 423

(மத்தம் - மத்து; இத்தலையென்றது இடையரிருக்கும் இடத்தை. புளி - புள்ளி; நலார் - மகளிர்; புல்லிய - பிணித்த)

(வேறு)

வலைப்படு மானென மஞ்ஞையெ னத்தம்
முலைப்படு முத்தொடு மொய்குழல் வேய்ந்த
தலைப்படு தண்மலர் மாலைபி ணங்க
அலைத்த வயிற்றின ராயழு திட்டார் 424

(பிணங்க - பின்னிக் கொள்ளும்படி; வேய்ந்த - அணிந்த; அலைத்த - அடித்த)

வானம் போன்று இருண்ட காட்டில் விண்மீன் போன்ற வெள்ளை நிறப் பசுக்கள் மேய்ந்திருக்கையில், கொலைத் தொழில் மிக்க வேடுவர்கள், ஆரவாரித்துப் பொழிகின்ற மழை போல் அம்புகளை விடுக்க இடையர்கள் மத்திடைப்பட்ட தயிர்போல் நிலை குலைந்து சிதறி ஓடினர். தம் கைக் குழலும், கோடரியும் நழுவி விழச் சிதறி ஓடிய இடையர்கள், காட்டை விட்டுப் போய்; கன்றுகள் கயிற்றை அறுத்துக் கொண்டு தடைமரத்தில் பாய்ந்து துள்ளும் வாயிலுடைய இடைச்சேரியில் புகுந்து குழந்தை மழலை போல் இனியசொல் உதிர்க்கும் ஆய்ச்சியர் மனம் வருந்த தம் ஆநிரைக்கு நேர்ந்த தனைக்கூறி வாய்விட்டுக் கதறினர். மத்தினை ஊன்றி தயிரைக் கடையும்போது ஒரு பக்கம் கயிற்றை ஒருபக்கம் நெகிழவிட்டாலும் மறுபக்கம் நெகிழாமல் சேர்த்து இழுப்பதைப் போல் வேடர்கள் இருபக்கமும் சூழ்ந்து ஆநிரையைக் கவர்ந்து சென்றனர் என்று அவர்கள் கதறிக் கூறியதைக் கேட்டு, தயிரைக் கடையும் போது தெறித்து விழுந்த

மோர்ப் புள்ளிகள் மொய்த்திருக்கும் தோளுடைய ஆய்ச்சியர்கள் எல்லாம் ஒன்று கூடி; வலையில் சிக்கிய மான்போலவும் மயில்போலவும், முலை மீது அணிந்த முத்துமாலையும், தலையில் சூட்டிய குளிர்ந்த முல்லைமலர் ஆரமும் கலந்து சிக்குற கூந்தல் கலைய வயிற்றி லடித்துக் கொண்டு அழுதனர்.

எம்மனை மார்இனி யெங்ஙனம் வாழ்குவிர்
நும்மனை மார்களை நோவ அதுக்கி
வெம்முனை வேட்டுவ ரும்த்தன ரோவெனத்
தம்மனைக் கன்றொடு தாம்புலம் புற்றார் 425

(எம் அனைமார் என்றது கன்றுகளை நோக்கி. நோவ வருந்தும்படி; அதுக்கி - அடித்து; நும் அனைமார் என்றது தாய்ப் பசுக்களை)

பாறை படுதயிர் பாலொடு நெய்பொருது
ஆறு படப்பள்ளி ஆகுல மாக
மாறு படமலைந் தாய்ப்படை நெக்கது
சேறு படுமலர் சிந்த விரைந்தே 426

(பாறை - கல்; ஆகுலம் - வருத்தம்; ஆய் - இடைச்சாதி; நெக்கது - கெட்டது; சேறு - தேன்)

புறவணி பூவிரி புன்புலம் போகி
நறவணி தாமரை நாட்டகம் நீந்திச்
சுறவணி சூழ்கிடங்கு ஆரெயில் மூதூர்
இறையணிக் கேட்கஉய்த் திட்டனர் பூசல் 427

(புறவு - சிறுகாடு; புன்புலம் - முல்லை நிலம்; சுறவு - சுறாமீன்; கிடங்கு - அகழி; இறை - அரசன்; கட்டியங்காரன். ஆரெயில் - பெரிய மதில்)

எம் அன்னையரே நீர் இனி எங்ஙனம் வாழ்வீர்? உம் அன்னையரை வருந்த அடித்துக் கவர்ந்து கொண்டு போயினரே கொடிய வேடர்கள் என்று தம் வீட்டில் இருந்த கன்றுகளைக்

Scanned by TapScanner

கட்டிக் கொண்டு ஆய்ச்சியர்கள் புலம்பி அழ; பாறை போல் தோய்ந்த கெட்டித் தயிரும் பாலும் நெய்யும் கலந்து ஆறென ஓட, இடைச்சேரி துன்புற்று வருந்த, வேடருடன் போரிட்டு அழிவுற்றபடை; முல்லைமலர்த் தேன் சிந்தத் தரைமண் சேறாகும்படி விரைந்து சென்று; பூவிரிக்கும் காடுடைய அழகிய முல்லை நிலத்தைக் கடந்து, தேன் சொரியும் தாமரை மலர் பூத்துக் கிடக்கும் மருத நிலத்தையும் தாண்டி, சுறாமீன்கள் நிறைந்து கிடக்கின்ற அகழி சூழ் மதிலை உடைய மூதுரை அடைந்து அரசன் அறிய தங்களுக்குற்ற துயரினை எடுத்துக் கூறினர்.

(வேறு)

கொடுமர எயினர் ரீண்டிக் கோட்டிமி லேறு சூழ்ந்த
படுமணி நிரையை வாரிப் பைந்துகி லருவி நெற்றி
நெடுமலை அத்தஞ் சென்றா ரென்றுநெய் பொதிந்த பித்தை
வடிமலை ராயர் பூசல் வளநகர் பரப்பி னாரே 428

(கொடுமரம் - வில்; எயினர் - வேட்டுவர்; கோடு - கொம்பு; இமில் - ஏற்றின் முசுப்பு; வாரி - கைக்கொண்டு; அத்தம் - வழி; பித்தை - தலை மயிர்; பூசல்: வேட்டுவர் நிரை கொண்டா ரென்பது பற்றிச் சண்டை)

(வேறு)

காசில் மாமணிச் சாமரை கன்னியர்
வீச மாமக ரக்குழை வில்லிட
வாச வான்கழு நீர்பிடித் தாங்குஅரி
ஆச னத்திருந் தான்அடல் மொய்ம்பினான் 429

(காசுஇல்-குற்றமற்ற; சாமரை- வெண்சாமரம்; வில்லிட - ஒளி வீச; அடல்-வலிமை.)

கொண்ட வாளொடுங் கோலொடுங் கூப்புபு
சண்ட மன்னனைத் தாள்தொழு தாயிடை
உண்டொர் பூசலென் றாற்குரை யாயெனக்
கொண்ட னர்நிரை போற்றெனக் கூறினான் 430

(கூப்புபு - கைகுவித்து; சண்டம் - கொடுமை; ஆயிடை - அக்காட்டில்; பூசல் - பெரும்போர்; என - என்று கூற)

வில்லேந்திய வேடர்கள் ஒன்றுகூடி, திமிலை உடைய ஏறுகள் சூழ்ந்த, ஒலிக்கும் மணி பூட்டிய பசுக் கூட்டத்தைக் கவர்ந்து கொண்டு; புத்தாடை பொலிவது போல் வெள்ளருவி வீழுகின்ற மலை உச்சியை நோக்கிச் செல்கின்ற காட்டு வழியிலே சென்றார் என்று, நறுநெய் பூசிய தலைமயிரிலே மணமலர் சூடிய இடையர்கள் அம்மூதூராகிய வளநகர் எங்கும் கேட்க இச்செய்தியினைச் சொல்ல; குற்றமற்ற வெண்கவரி அழகிய மகளிர்வீச காதிலணிந்த மகரமீன் குண்டலம் ஒளிவிட, மணம் மிகுந்த உயர்ந்த செழுங் கழுநீர்ப் பூவினைக் கையிலேந்தி; அரண்மனையில் அரியாசனத்தில் வீற்றிருந்த வலிமைமிக்க, ஆற்றலுடைய கட்டியங்காரனிடம்; கையிலேந்திய வாளோடும் தண்டக் கோலோடும் சென்று கைகுவித்து கொடிய அவனின் தாள் தொட்டு வணங்கி காட்டிடைச் சிறு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்று வாயிலோன் கூறவும், அவ்வாயில் காவலனை நோக்கி அதனைச் சொல் என்று வேந்தன் பணிக்க, அவனும் பசுத்திரளை வேடர்கள் கவர்ந்து கொண்டு சென்றனர் என்ற செய்தியினை அரசன் திருவுளம் அறிய எடுத்துச் சொன்னான்.

ஆநிரை மீட்கக் கிளம்பின படைகள்

செங்கட் புன்மயிர்த் தோல்திரை செம்முக
வெங்க ணோக்கிற்குப் பாயமி லேச்சனைச்
செங்கட் தீவிழி யாத்தெழித் தாள்கையுள்
அங்கட் போதுபி சைந்தடு கூற்றனான் 431

(தோல் திரை செம்முகம் - தோல் சுருங்கிய சிவந்த முகம்; குப்பாயம் - சட்டை; மிலேச்சர்கள் பண்டைக் காலத்தில் வாயில் காவலர்களாக இருந்ததுண்டென்று தெரிகின்றது. தெழித்தல் - கோபித்தல்; மிலேச்சர்கள் - பண்பற்ற பிறநாட்டினர்)

(வேறு)

கூற்றின விடிக்குங் கொலைவேலவன் கோவ லர்வாய்
மாற்றம் முணர்ந்து மறங்கூர்கடற் றானை நோக்கிக்
காற்றின் விரைந்து தொறுமீட்கெனக் காவல் மன்னன்
ஏற்றை யரிமா னிடிபோல இயம்பி னானே 432

(வேலவன் - கட்டியங்காரன்; கோவலர் - இடையர்; மறம் - வீரம்; கடற்றானை - கடல் போன்ற சேனை; தொறு - பசுக்கூட்டம்; அரிமானேற்றை - ஆண் சிங்கம்)

(வேறு)

கார்விளை மேக மன்ன கவுளழி கடாத்த வேழம்
போர்விளை யிவுளித் திண்டேர் புனைமயிர்ப் புரவி காலாள்
வார்விளை முரசம் விம்ம வானுலாப் போந்த தேபோல்
நீர்விளை சரிசங் கார்ப்ப நிலநெளி பரந்த வன்றே 433

(கவுள் - கன்னம்; அழிதல் - மறைதல்; கடாத்தவேழம் - மதமுடைய யானை; வார் - முரசத்திற் கட்டிய தோற்கயிறு; வான் - மேகம்; உலா - பவனி; சரிசங்கு - முகம் சுழித்த சங்கு)

சிவந்த கண்களையும், நெருங்கிய மயிர் நிறைந்த தோல் சுருங்கி முதுமை அடைந்த சிவந்த முகத்தையும், கொடிய பார்வையும் உடைய குப்பாயம் அணிந்த வாயில் காவலனைத், தன் சிவந்த கண்ணில் தீஉமிழ கோபித்து நோக்கி தன்கையில் இருந்த செழுங்கழுநீர்ப் பூவைச் சினத்தால் பிய்த்தெறிந்தான் கொல்லும் கூற்றைப் போன்ற கட்டியங்காரன். கொல்லுகின்ற யமனைப் போல் முழங்கும் கொலை வேலேந்திய கட்டியங் காரன் இடையர்கள் சொன்ன குறையைக் கேட்டுணர்ந்து, வீரம் விளைக்கும் கடல் போன்ற வலிவுடைய தன்படையை நோக்கி, காற்றிலும் கடிது சென்று வேடர் கவர்ந்து சென்ற பசுக்கூட்டத்தை மீட்டு வருக என்று ஆண்சிங்கம் போலும் இடிபோலும் முழங்கிச் சொன்னான். கார்காலத்துக் கருமுகில் போன்ற கன்னக் கதுப்புகளில் இருந்து பெருகும் மதம் உடைய களிறுகளும்,

போரிடத் தக்க குதிரை பூட்டிய தேர்களும் அழகிய பிடரி மயிருடைய குதிரைகளும், காலாட் படையும், ஆகிய நான்கு வகைப் படைகளும்; தோல்வாரால் கட்டப்பட்ட முரசு முழங்கவும், சரிந்த சங்குகள் ஒலிக்கவும், வான்முகில் வரிசையுற வந்ததேபோல் நிலம் நடுங்கி நெளியப் புறப்பட்டன.

காலகம் புடைப்ப முந்நீர்க் கடல்கிளர்ந் தெழுந்த தேபோல்
வேலக மிடைந்த தானை வெஞ்சின எயினர் தாக்க
வால்வளை யலற வாய்விட் டிரலையுந் துடியு மார்ப்பப்
பால்வளைந் திரவு செற்றுப் பகலொடு மலைவ தொத்தார் 434

(கால் - காற்று; கிளர்ந்து - வளர்ந்து; வளை - சங்கு; இரலை - துத்தரிக் கொம்பு; ஒருவகை ஊதுகொம்பு. துடி - ஒருவகைப் பறை; பால் வளைந்து - ஒரு பக்கம் வளைத்து)

விற்பழுத் துமிழ்ந்த வெய்ய வெந்நுனைப் பகழி மைந்தர்
மற்பழுத் தகன்ற மார்பத் திடங்கொண்டு வைகச் செந்நாச்
சொற்பழுத் தவர்க்கும் ஆண்மை சொல்லலாந் தன்மைத் தன்றிக்
கொள்பழுத் தெரியும் வேலார் கொடுஞ்சிலை குழைவித் தாரே 435

(நுனை - கூர்மை; பகழி - வேடருடைய அம்பு; செந்நாச் சொற்பழுத்தவர் - கவிஞர்; மற்பழுத்த - மற்போரிலே தேர்ந்த)

வாட்படை யனுங்க வேடர் வன்சிலை வளைய வாங்கிக்
கோட்டலி யினத்தின் மொய்த்தார் கொதிநுனைப் பகழி தம்மால்
வீட்டினார் மைந்தர் தம்மை விளிந்துமா கவிழ்ந்த திண்டேர்
பாட்டரும் பகடு வீழ்ந்த பனிவரை குனிவ தொத்தே 436

(அனுங்க - கெடும்படி; கோள் - கொலை; வீட்டினார் - கொன்றார்; மா - குதிரை; பகடு - யானை; விளிந்த - இறந்த)

காற்று உட்புகுந்து மோதக் கடல் பொங்கி எழுவதைப் போல் வேலேந்திய, மிகுந்த அரசனது படையை வேடர்கள் தாக்க வெண் சங்கம் முழங்கவும், ஊதுகொம்பும் துடிப்பறையும் ஒலிக்கவும் ஒருபக்கமாக வளைத்துக் கொண்டு, கோபித்து

இரவும் பகலும் ஒன்றோடு ஒன்று போரிட்டுக் கொள்வது போலப் போரிட்டனர். வில்லை வளைத்து வேடர்கள் எய்த கூரிய நுனியுடைய அம்புகள், அரசனது படையில், மற்போரிலே தேர்ந்த வீரர்களின் விரிந்த மார்பிலே சென்று தைக்க, சொற் செல்வம் பெற்ற கவிகளாலும் வர்ணிக்க முடியாதபடி; கொலைத் தொழில் தேர்ந்த ஒளி வேலேந்திய வேடர்களின் வளைந்த வில்லை வாளால் உடைத்தெறிந்தனர். தம் கையில் அறுபட வந்த வாள்வீரர்கள் அழியுமாறு வேடர்களும் மேலும் வில்லை வளைத்து, வேங்கைப் புலியைப் போலச் சீறி, நஞ்சிட்டுக் காய்ச்சிய நுனி உடைய அம்புகளால் அரசன் படையினைச் சூழ்ந்து கொள்ள, குதிரைகள் வெருண்டோடின பொற்றேர்கள் கவிழ்ந்து விழுந்தன; பயனுடைய வலிய யானைகள் பனி மலைகள் சாய்வது போல் தாழ்ந்து விழுந்து அழிந்தன.

வென்றி நாங் கோடு மின்னே வெள்ளிடைப் படுத்தென்
றெண்ணி
ஒன்றியுள் வாங்கு கென்ன ஒலிகட லுடைந்த தேபோற்
பொன்றவழ் களிறு பாய்மா புனைமயிற் குஞ்சி பிச்சம்
மின்றவழ் கொடியொ டிட்டு வேற்படை யுடைந்த வன்றே 437

(கோடும் - கொள்வோம்; குஞ்சி - மயிலிறகாலான விருது; பிச்சம் - வெண்குடை; வெள்ளிடைப் படுத்தல் - வெளிப் படுத்தல்)

பல்லினாற் சுகிர்ந்த நாரிற் பனிமலர் பயிலப் பெய்த
முல்லையங் கண்ணி சிந்தக் கால்விசை முறுக்கி ஆயர்
ஒல்லென வொலிப்ப வோடிப் படையுடைந் திட்ட தென்ன
அல்லலுற் றழுங்கி நெஞ்சிற் கட்டியங் கார னாழ்ந்தான் 438

(சுகிர்தல் - கிழித்தல்; விசை முறுக்கி - வேகம் மிக்கு; ஒல் - ஆரவார ஓசை; அழுங்கி - இரங்கி; கண்ணி - தலையில் சூடும் மாலை)

வம்புகொண் டிருந்த மாதர் வனமுலை மாலைத் தேன்சோர்
கொம்புகொண் டன்ன நல்லார் கொழுங்கயல் தடங்கண் போலும்
அம்புகொண் டரசர் மீண்டார் ஆக்கொண்டு மறவர் போனார்
செம்புகொண் டன்ன இஞ்சித் திருநகர்ச் செல்வ என்றான் 439

(வம்பு - கச்சு; மாதர் - காதல்; சோர் - சொரியும்; ஆக்கொண்டு - பசுக்களைக் கொண்டு; மறவர் - வேடர்; செம்பு கொண்டு - கலசம் அமைத்து)

மன்னிரை பெயர்த்து மைந்தர் வந்தனர் கொள்க வாள்கண்
பொன்னிழை சுடரு மேனிப் பூங்கொடி அனைய பொற்பின்
கன்னியைத் தருது மென்று கடிமுர சியம்பக் கொட்டி
நன்னகர் வீதி தோறு நந்தகோ னறைவித் தானே 440

(மன் - பெரிய; இழை - ஆபரணம்; கன்னி - நந்த கோனுடைய மகளான கோவிந்தை; இயம்ப - முழங்கும்படி; நந்தகோன் - பசுக்கூட்டத் தலைவன்)

எஞ்சியவர்கள் நாம் இப்போதே வேடரை வெளிப்படுத்திப் போரிட்டு வெற்றி கொள்வோம் என்றெண்ணி, ஒன்று சேர்ந்து போரிட்டு அப்படையினை வெல்வீர் என்று தம் படைக்கு ஊக்க மூட்டிப் போரிட்டும்; அலை ஒலிமிக்க கடல் கரை புரண்டு ஓடுவதைப் போல, பொன்முகபடாம் அணிந்த யானையையும், பாயும் குதிரையையும், மயிற்பீலியையும், வெண்குடையையும் விட்டு விட்டு அரசனது வேற் படைகள் புறமுதுகிட்டு ஓடின. பல்லினால் கிழித்தெடுத்த நாரிலே சேர்த்துத் தொடுத்த அழகிய முல்லை மலர்க்கண்ணி சிதறவும், ஆயர்கள் 'ஒல்' என்று உண்டாக வேகமாக ஓடி நம்படை தோற்றதெனக் கட்டியங் காரனிடம் கூறவும் அவன் அல்லலுற்று வருந்தி துன்பநிலை யிலே கிடந்தான். கச்சணிந்த காதல் சுவையூட்டும் மார்பினைத் தேன்சொரியும் மலர்க்கொடி, ஒன்று தனக்கு உறுப்பாகக் கொண்டது போல் விளங்கும், பெண்களின் அகன்ற பெரிய அழகிய கண்களைப் போன்ற அம்புகள் முதுகிலே தைக்க நம்

வீரர்கள் ஓடி வந்திருக்கின்றனர்; வேடர்களோ பசுக்கூட்டத்தோடு போய் விட்டார்கள் என்று ஆயர்கள் மேலும் சொல்லவும்; பசுக் கூட்டத்தை மீட்டு வந்து தருகின்ற வீரர்கள் கொள்ள வாள்போல் நீண்டு வளைந்த கண்களையும், பொன்னவிர் மேனிப் பொலிவும் உடைய பூங்கொடி போன்ற என் மகளைப் பரிசாகத் தருகிறேன் என்று முரசறைந்து அப்பெருநகரின் வீதிதோறும் அம்முழக்கம் கேட்கும்படி நந்தகோன் அறிவித்தான்.

வெதிர்ங்குதைச் சாபங் கான்ற வெம்நுனைப் பகழி மூழ்க
உதிர்ந்தது சேனை மீட்டங் கூற்றொடு பொருது கொள்ளும்
கருத்துடங் கண்ணி அன்றிக் கயம் ஆறுஆக ஏகும்
அரும்பெற லவளு மாக என்றுஅவர் தொழுது விட்டார் 441

(வெதிர் - மூங்கில்; குதை - நாணைக் கட்டுதற்கு வில்லின் இருபக்கத்தும் அமைந்துள்ள பள்ளம்; சாபம் - வில்; கான்ற - உமிழ்ந்த; ஆறுஆக - வழியாக; ஏகும் - செல்லும்)

கார்விரி மின்னை யார்மேற் காமுகர் நெஞ்சி னோடும்
தேர்பரி கடாவித் தேத்தார்ச் சீவக னருளிற் போகித்
தார்பொலி புரவி வட்டம் தான்புகக் காட்டு கின்றாற்கு
ஊர்பரி வுற்ற தெல்லா மொருமக னுணர்த்தி னானே 442

(கார் - மேகம்; பரி - செலவு; கடாவி - செலுத்தி; காட்டுகின்றாற்கு - சீவகனுக்கு; பரிவுற்றது - துன்பமுற்றது)

(வேறு)

தன்பால் மனையாள் அயலான் தலைக் கண்டு பின்னும்
இன்பா லடிசிற் கிவர்கின்றவைப் பேடி போலாம்
நன்பால் பசுவே துறந்தார்பெண்டிர் பாலர் பார்ப்பார்
என்பாரை யோம்பே னெனின்யான் அவ னாக வென்றான் 443

(மனையாள் - வீரமகள்; பாலடிசில் - பாற்சோறு; ஓம்புதல் - பாதுகாத்தல்; அவன் - கட்டியங்காரன்; தன்பால் - தன்னிடம்)

மூங்கிலால் செய்த நாண் பூட்டக் குழியுடைய வில் உமிழ்கின்ற கூரிய நுனை உடைய அம்புகளிடைச் சிக்கி அரசனது பெரிய சேனையே சிதறிப் போயிற்று எனவே எமனைப் போன்ற வேடர்களுடன் போரிடத் தகுந்தவன்; கரிய பெரிய விழிகளை உடைய நந்தகோன் மகளான கோவிந்தையே அல்லாமல், வானமே வழியாக இயங்கும் அருந்திறல் மிக்க அவளை அடைய அக்காரியத்தைச் (வேடருடன் போரிடுவது) செய்ய நாங்கள் இல்லை என்று வீரர்கள் வாளாயிருக்க; கருமுகலில் படரும் மின்னலைப் போன்ற பெண்களின் மேல் நினைவைப் பாயவிடும் காமுகர் உள்ளம்போல் விரைந்து ஓடுகின்ற தேரை அதன் வழியிலே செலுத்திச் சென்ற, தேன் சிந்தும் மலர்மாலை அணிந்த சீவகன் அனுப்பப் போய்ச் செய்தி உணர்ந்து வந்த ஒருவன், பிடரிமயிர் செறிந்த குதிரைகளை அதன் வட்டத்திலே செல்லப் பழக்கிக் கொண்டிருந்த சீவகனிடம் ஊர்படும் துன்பத்தை எடுத்தியம்பினான் அதனைக் கேட்ட சீவகன் தன்னுடைய புகழ் வீரம் இவை அயலான்வசம் ஆகக் கண்டும், சாகாது உயிர்வாழ இனிய பால்சோற்றை விரும்பி உண்ணும் பேடியாகிய கட்டியங்காரனைப் போலாவேன்; நல் ஒழுக்கத்தையும், பசுக்களையும், துறவிகளையும், பெண்களையும், குழந்தைகளையும், பார்ப்பாரையும் உற்ற துன்பத்தினின்றும் நான் காப்பாற்றவில்லை என்றால்; எனவே அவற்றை - பசுக்கூட்டத்தைக் - காப்பாற்றல் என் கடமை என்று தேர்ந்து.

போர்ப்பன்ன ணமைத்து நுகம்பூட்டிப் புரவி பண்ணித்
தேர்ப்பன்ன ணமைத்துச் சிலைகோலிப் பகழி யாய்ந்து
கார்க்கொண்மூ மின்னி திமிர்ந்தான்கலி மான்கு ளம்பின்
பார்க்கண் ணெழுந்த துகளாற்பகல் மாய்ந்த தன்றே 444

(பண்ணி - ஆயத்தம் செய்து; சிலைகோலி - வில்லை வளைத்து; கொண்மூ - மேகம்; கலி - முழக்கம்; நுகம் - நுகத்தடி; பார்க்கண் - பூமியின் மேல்; துகள் - தூள், இங்கே புழுதி)

Scanned by TapScanner

இழுதொன்று வாட்க ணிளையாரிளை யார்க ணோக்கிற்
பழுதின்றி மூழ்கும் பகழித்தொழில் வல்ல காளை
முழுதொன்று திண்டேர் முகஞ்செய்தவன் தன்னொ டேற்கும்
பொழுதன்று போதுமெனப் புள்மொழிந்தான் மொழிந்தான் 445

(இழுது - நெய்; இளையார் - மகளிர்; பழுதின்றி - தப்புதலில்லாமல்; காளை என்றது சீவகனை. புள்மொழிந்தான் - புள்ளின் நிமித்தம் கூறியவன்; ஏற்கும் - எதிர்க்கும்)

மோட்டும் முதுநீர் முதலைக்கு வலிய துண்டேல்
காட்டுள் நமக்கு வலியாரையுங் காண்டு நாமென்று
ஏட்டைப் பூசியி னிரைகவ்விய நாக மேபோல்
வேட்டந் நிரையை விடலின்றி விரைந்த தன்றே 446

(மோடு - பெருமை; காண்டும் - காண்போம்; ஏட்டை - இளைப்பு; வேட்டு - வேட்டுவச்சாதி)

வேட்டுடன் போர் புரிய ஆயத்தம் ஆகிக், குதிரைகளைத் தேர் நுகத்திலே பூட்டி, தேரினைச் சரிசெய்து, வில்லை வளைத்து, கணைகளைத் தேர்ந்தெடுத்து, கருமுகிலிடைப் பாய்ந்தோடும் மின்னலைப் போலத் தேரைச் செலுத்திச் செல்ல, அப்படிச் செல்லுகின்ற தேரில் பூட்டிய குதிரைகளின் குளம்படி பட்டுப் பூமியில் எழுந்த புழுதித் தூளால் சூரியனும் மறைந்தது. நெய் பூசிய வாள்போலும் கண்ணுடைய மகளிர் காதலரைப் பார்க்கும் பார்வை போல வைத்த குறி தப்பாது சென்று தைக்கின்ற அம்பினை எய்வதில் வல்லவனும் எத்திக்கிலும் தேரைச் செலுத்திப் போரிடும் திறமை உடையவனுமான இவனோடு போரிடத் தகுந்த சமயம் இதுவல்ல எனவே இப்போதே இவ்விடத்தை விட்டுப் போவோம் என்று முன்னர் பறவைக்குரல் கேட்டுக் குறி சொன்ன நிமித்திகன் கூறவும்; ஆழமான நீரில் முதலையையும் வெல்லக் கூடிய வலிமை உடையது இருக்கு மானால்; காட்டில் நமக்கு வலியார் யார் என்று பார்ப்போம் என்று, பசியால் இளைத்த பாம்பு கவ்விய இரையை விடாது

பற்றியிருப்பது போல வேடர்களும் பசுக் கூட்டத்தை விடாது கைக்கொண்டு சென்றனர்.

ஆநிரை மீட்டது சீவகன் ஆற்றல்

கடற்படை யனுங்க வென்ற காளவ ரென்னுங் கூற்றந்
திடைப்படா தோடிப்போமி னுய்யவென்று இரலைவாய்வைத்
தெடுத்தனர் விளியுஞ் சங்கும் விண்ணிம் பறையுங் கோடும்
கடத்திடை முழங்கக் காருங் கடலுமொத் தெழுந்தவன்றே 447

(படாது - அகப்படாது; உய்ய - பிழைக்க. இரலை - ஊதுகொம்பு; விளி - கொக்கரிப்பு; விளை - நாவினது நுனியை மடித்துச் செய்யும் ஒலி; கடம் - காடு)

கைவின்ச முறுக்கி வீசுங் கொள்ளியுங் கறங்கும் ஏய்ப்பச்
செய்கழற் குருசில் திண்டேர் விசையொடு திசைக ளெல்லாம்
ஐயென வளைப்ப வீர ராத்தனா ரவரு மார்த்தார்
மொய்யமர் நாட்செய்து நுயன் முதல்வினை யாடி னானே 448

(கறங்கு - காற்றாடி; குருசில் வீரர் - சீவகனுடைய படை வீரர்; அவர் - வேடர்; நாட்செய்து - நாள்கொண்டு; மொய்த்தல் - நெருங்குதல்)

ஆழியா லூர்திப் புள்ளி வாஞ்சிற கொலியி னாகம்
மாழ்கிப்பை அவிந்த வண்ணம் வள்ளதேர் முழக்கி னானும்
சூழ்துகள் மயக்கத் தானும் புளிஞருள் சுருங்கிச் சேக்கைக்
கோழிபோற் குறைந்து நெஞ்சி னறமென மறமும் விட்டார் 449

(ஆழி - சக்கரம்; பை - படம்; வள்ளல் - சீவகன்; புளிஞர் - வேடருள் ஒருவகையார்; உள் - மனம்; சேக்கை - வலை; மாழ்கி - வருந்தி)

கடல் போன்ற உங்கள் படை அழிய, வேடர் என்னும் இந்த எமனிடம் அகப்படாமல் தப்பி ஓடிப் போங்கள் என்று ஊதுகொம்பை ஊதி, கொக்கரித்துச் சீழ்க்கை ஒலியெழுப்ப; காட்டிடை

[illegible]

[illegible] 450

([illegible])

[illegible] 451

([illegible])

[illegible] 452

([illegible])

[illegible]

(வேறு)

[illegible] 453

(நூறும் அழிக்கும்; மாய்தல் - மறைதல்; மைந்நூறு - அஞ்சன மை தீட்டிய)

வாள்வாயு மின்றி வடிவெங்கணை வாயு மின்றிக்
கோள்வாய் மதிய நெடியான்விடுத் தாங்கு மைந்தன்
தோள்வாய் சிலையி னொலியா ல்தொறு மீட்டு மீள்வான்
நாள்வாய் நிறைந்த நகைவெண்மதி செல்வ தொத்தான் 454

(வாள்வாய் - வாளாலுண்டாகிய வடு; கோள் - இராகு வென்னும் பாம்பு; தொறு - ஆனிரை, பசுக்கூட்டம்)

ஆளற்றம் இன்றி அலர்தாரவன் தோழ ரோடும்
கோளுற்ற கோவ நிரைமீட்டன னென்று கூற
வாளுற்ற புண்ணுள் வடிவேலெறிந் துஇற்ற தேபோல்
நாளுற்று லந்தான் வெருண்டான்நக ரார்த்த தன்றே 455

(ஆள் - வீரர்; அற்றம் - அறுதல்; குறைபாடு. தோழர் - சீதத்தன் முதலிய ஐந்நூற்று நால்வர்; நாளுற்று - முடிவுநாள் வந்து; உலத்தல் - அழிதல்)

ஐயாயிரத்தை முன்னுடைய ஆறாயிரவர், அதாவது ஐம்பத்தாராயிரம் வேடர்களின் உடலை நூறு கூறாக்குகின்ற கூர் நுனி உடைய கணைகளைச் சொரிந்து, அவர்களின் கையில் இருந்த நூற்றுக்கணக்கான வில்லையும் அம்புகளையும் சீவகன் உடைத்தெறிய மைஉண்ட வேல் போல் நீண்ட கண்களை உடைய விலை மகளிரின் மனம் போல வேடர்கள் ஒரு நொடியில் மறைந்து ஓடினர். வாளால் உண்டான காயமும் இன்றி, கூரிய அம்பு பட்டு உண்டான புண்ணும் இன்றி, இராகு என்னும் கோள் வாயிலிருந்து நிலவைத் திருமால் விடு வித்ததைப் போல், தோளில் தொங்குகின்ற வில்லின் ஒலி கொண்டே பசுக் கூட்டத்தை மீட்டு வந்த வலிமையுடைய சீவகன் நாள்தோறும் நிறைவெய்தி வளரும் முழுமதி போல் திகழ்ந்தான். இவ்விதமாக இருதரப்பிலும் ஒருவருக்கும் துன்பமில்லாமல், வேடரால் கவரப்பட்ட அரசனின்

ஆநிரையை சீவகன் தன் தோழருடன் சென்று மீட்டு வந்தான் என்று கூற, வாள் பட்டு உண்டான புண்ணில் வேல் தைத்து முறிந்ததைப் போல், தன் முடிவு நாள் வந்துற்றதை எண்ணிக் கட்டியங்காரன் சினங்கொண்டு சீறினான் - நகரமக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் திளைத்தனர்.

வெற்றி வீரனுக்கு வரவேற்பு

இரவி தோய்கொடி கொள்மாடத் திடுபுகை தவழச்சுண்ணம்
விரவிப்பூந் தாமம் நாற்றி விரைதெளித் தாரந் தாங்கி
அரவுயர் கொடியி னான்தன் அகன்படை அனுங்க வென்ற
புரவித்தேர்க் காளை யன்ன காளையைப் பொலிக வென்றார் 456

(சுண்ணம் - வாசனைப் பொடி; தாமம் - மாலை; நாற்றி - தொங்க விட்டு; விரை - வாசனை; தேர்க்காளை - அருச்சுனன். காளை - சீவகன்; புரவி - குதிரை)

இன்னமு தனைய செவ்வா யிளங்கிளி மழலை அஞ்சொல்
பொன்னவிர் சுணங்கு பூத்த பொங்கிள முலையி னார்தம்
மின்னிவர் நுசுப்பு நோவ விடலையைக் காண வோடி
அன்னமு மயிலும் போல அணிநகர் வீதி கொண்டார் 457

(பொன் அவிர் - பொன்னைப் போல் விளங்குகின்ற; மின் இவர் நுசுப்பு - மின்னலின் தன்மை பொருந்திய இடை; விடலை - ஆண்பாற் பருவப் பெயர்)

சில்லரிச் சிலம்பின் வள்வார்ச் சிறுபறை கறங்கச் செம்பொன்
அல்குல்தே ரணிந்து கொம்மை முலையெனும் புரவி பூட்டி
நல்லெழி லொடுங்க ணம்பாப் புருவவில் உருவக் கோலிச்
செல்வப்போர்க் காமன்சேனை செம்மல்மே லெழுந்த தன்றே 458

(சில அரி - சிலவாகிய பரல்; வள்வார் - சிறிய வார் அணிந்து - சமைத்து; கொம்மை - பெருமை; கோலி - வளைத்து; செம்மல் - சீவகன்)

(நூறும் அழிக்கும்; மாய்தல் - மறைதல்; மைந்நூறு - அஞ்சன மை தீட்டிய)

வாள்வாயு மின்றி வடிவெங்கணை வாயு மின்றிக்
கோள்வாய் மதிய நெடியாள்விடுத் தாங்கு மைந்தன்
தோள்வாய் சிலையி னொலியா ல்தொறு'மீட்டு மீள்வான்
நாள்வாய் நிறைந்த நகைவெண்மதி செல்வ தொத்தான் 454

(வாள்வாய் - வாளாலுண்டாகிய வடு; கோள் - இராகு வென்னும் பாம்பு; தொறு - ஆனிரை, பசுக்கூட்டம்)

ஆளற்றம் இன்றி அலர்தாரவன் தோழ ரோடும்
கோளுற்ற கோவ னிரைமீட்டன னென்று கூற
வாளுற்ற புண்ணுள் வடிவேலெறிந் துஇற்ற தேபோல்
நாளுற்று லந்தான் வெகுண்டான்நக ரார்த்த தன்றே 455

(ஆள் - வீரர்; அற்றம் - அறுதல்; குறைபாடு. தோழர் - சீதத்தன் முதலிய ஐந்நூற்று நால்வர்; நாளுற்று - முடிவுநாள் வந்து; உலத்தல் - அழிதல்)

ஐயாயிரத்தை முன்னுடைய ஆறாயிரவர், அதாவது ஐம்பத்தாராயிரம் வேடர்களின் உடலை நூறு கூறாக்குகின்ற கூர் நுனி உடைய கணைகளைச் சொரிந்து, அவர்களின் கையில் இருந்த நூற்றுக்கணக்கான வில்லையும் அம்புகளையும் சீவகன் உடைத்தெறிய மைஉண்ட வேல் போல் நீண்ட கண்களை உடைய விலை மகளிரின் மனம் போல வேடர்கள் ஒரு நொடியில் மறைந்து ஓடினர். வாளால் உண்டான காயமும் இன்றி, கூரிய அம்பு பட்டு உண்டான புண்ணும் இன்றி, இராகு என்னும் கோள் வாயிலிருந்து நிலவைத் திருமால் விடு வித்ததைப் போல், தோளில் தொங்குகின்ற வில்லின் ஒலி கொண்டே பசுக் கூட்டத்தை மீட்டு வந்த வலிமையுடைய சீவகன் நாள்தோறும் நிறைவெய்தி வளரும் முழுமதி போல் திகழ்ந்தான். இவ்விதமாக இருதரப்பிலும் ஒருவருக்கும் துன்பமில்லாமல், வேடரால் கவரப்பட்ட அரசனின்

ஆநிரையை சீவகன் தன் தோழருடன் சென்று மீட்டு வந்தான் என்று கூற, வாள் பட்டு உண்டான புண்ணில் வேல் தைத்து முறிந்ததைப் போல், தன் முடிவு நாள் வந்துற்றதை எண்ணிக் கட்டியங்காரன் சினங்கொண்டு சீறினான் - நகரமக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் திளைத்தனர்.

வெற்றி வீரனுக்கு வரவேற்பு

இரவி தோய்கொடி கொள்மாடத் திடுபுகை தவழ்சுண்ணம்
விரவிப்பூந் தாமம் நாற்றி விரைதெளித் தாரந் தாங்கி
அரவுயர் கொடியி னான்தன் அகன்படை அனுங்க வென்ற
புரவித்தேர்க் காளை யன்ன காளையைப் பொலிக வென்றார் 456

(சுண்ணம் - வாசனைப் பொடி; தாமம் - மாலை; நாற்றி - தொங்க விட்டு; விரை - வாசனை; தேர்க்காளை - அருச்சனன்; காளை - சீவகன்; புரவி - குதிரை)

இன்னமு தனைய செவ்வா யிளங்கிளி மழலை அஞ்சொல்
பொன்னவிர் சுணங்கு பூத்த பொங்கிள முலையி னார்தம்
மின்னிவர் நுசுப்பு நோவ விடலையைக் காண வோடி
அன்னமு மயிலும் போல அணிநகர் வீதி கொண்டார் 457

(பொன் அவிர் - பொன்னைப் போல் விளங்குகின்ற; மின் இவர் நுசுப்பு - மின்னலின் தன்மை பொருந்திய இடை; விடலை - ஆண்பாற் பருவப் பெயர்)

சில்லரிச் சிலம்பின் வள்வார்ச் சிறுபறை கறங்கச் செம்பொன்
அல்குல்தே ரணிந்து கொம்மை முலையெனும் புரவி பூட்டி
நல்லெழி னெடுங்க ணம்பாப் புருவவில் உருவக் கோலிச்
செல்வப்போர்க் காமன்சேனை செம்மல்மே லெழுந்த தன்றே 458

(சில அரி - சிலவாகிய பரல்; வள்வார் - சிறிய வார அணிந்து - சமைத்து; கொம்மை - பெருமை; கோலி - வளைத்து; செம்மல் - சீவகன்)

ஞாயிறு தோயும் கொடிகள் நிறைந்த மாடத்தில் மகளிர் எல்லாம் நறுமணப் புகையும் சுண்ணப் பொடியும் கலந்து தவழ இட்டும், மலர் மாலைகளைத் தொங்க விட்டும், நறுமணப் பொடிகளை எங்கும் தெளித்தும், முத்து மாலைகள் அணிந்து; பாம்புக் கொடி உடைய துரியோதனின் பெரும் படையை அழித்து வென்ற, புரவி பூட்டிய தேர் ஊர்ந்து சென்ற காளையாகிய அருச்சுனனைப் போல் வெற்றி கொண்டு வரும் சீவகனை வாழ்க என்று வாழ்த்தி வரவேற்றனர். இனிக்கும் அமுதூறும் செவ்வாயும் இளங் கிளிவாய் மழலை மொழியும் உதிர்க்கும்; பொன் - அள்ளித் தெளித்தது போல் தேமல் படர்ந்து பூரிக்கும் முலை உடைய இளமகளிர் மின் போன்ற தம் இடைவருந்த சீவகனைக் காண ஓடிவந்து அன்னமும் மயிலும் போல அந்நகரின் அவ்வழகிய தெருக்களை அடைத்துக் கொண்டு நின்றனர். சில பரல்களை உடைய சிலம்புகளாகிய சிறுவாரால் கட்டப் பெற்ற பறை முழங்கவும், மேகலையால் அல்குலாகிய தேர்த் தட்டை அணிசெய்தும், பருத்த மார்புகளாகிய குதிரைகளைப் பூட்டியும் மிக்க அழகுடைய நீண்ட கண்ணை அம்பாகக் கொண்டு, புருவமாகிய வில்லை வளைத்தும் இதுபோன்ற செல்வத்தே நின்று போரிடும் காமன் படை போன்ற மகளிர் பட்டாளம் சீவகனுடன் போரிடப் புறப்பட்டது போல் தெருக்களை மொய்த்தது.

நூல்பொர அரிய நுண்மை நுசுப்பினை ஒசிய வீங்கிக்
கால்பரந் திருந்த வெங்கண் கதிர்முலை கச்சின் வீக்கிக்
கோல்பொரச் சிவந்த கோல மணிவிரல் கோதை தாங்கி
மேல்வரல் கருதி நின்றார் விண்ணவர் மகளி ரொத்தார் 459

(நுசுப்பினை ஒசிய - இடை ஒடியும்படி; வீக்கி - கட்டி; கோல் - வீணையின் நரம்பு; பொர - தாக்க; மேல்வரல் - மேலான வரவு)

ஆகமும் இடையு மஃக அடிபரந் தெழுந்து வீங்கிப்
போகமும் பொருளுமீன்ற புணர்முலைத் தடங்கள் தோன்றப்
பாகமே மறைய நின்ற படைமலர்த் தடங்க ணல்லார்
நாகம்விட் டெழுந்து போந்த நாகர்தம் மகளி ரொத்தார் 460

(ஆகம் - மார்பு; வீங்கி - பெருத்து; தடம் - உயர்ந்த இடம்; படை - இங்கே வேல்; கண்ணுக்கு உவமை; அஃக - சுருங்க)

வாளரந் துடைத்த வைவே லிரண்டுடன் மலைந்த வேபோல்
ஆள்வழக் கொழிய நீண்ட அணிமலர்த் தடங்க ணெல்லாம்
நீள்சுடர் நெறியை நோக்கு நிரையிதழ் நெருஞ்சிப் பூப்போல்
காளைதன் தேர்செல் வீதி கலந்துடன் றொக்க வன்றே 461

(வாளரம் துடைத்த - அரத்தினால் அராவப்பட்ட; மலைந்த போல் - மாறுபட்டன போல; ஆள் வழக்கு ஒழிய - ஆடவர் களின் நடைகெடும் படி; சுடர் - சூரியன்; நிரை - வரிசை; தொக்க - கூடின)

நூலைக் கூட உவமை கூற முடியாத மெல்லிய இடை ஒடிந்து விழும் படி விம்மிப் புடைபருத்த சுவையூட்டும் அழகிய முலைகளை கச்சில் இறுக்கிக் கட்டி; யாழ்நரம்பு தாக்கச் சிவந்த கை விரல்களால் கூந்தலைத் தாங்கியபடி சீவகன் வரவை எதிர் நோக்கி நின்ற அம்மகளிர் விண்ணுலக மங்கையரைப் போன்றிருந்தனர். உடலும் இடையும் சுருங்கப் புடை பரந்து விம்மிப் பெருத்த; இன்பத்தையும் வாழ்வையும் தருகின்ற இரு மார்புகள் வெளியே தெரிய, உடலின் அடிப்பாகம் மட்டுமே துணியில் மறையநின்ற காமன் படையாகிய மலர் போன்ற பெரிய கண்ணுடைய பெண்கள், நாகலோகத்தை விட்டு வெளிவந்த நாக கன்னியரைப் போன்றும் இருந்தனர். வாளரத் தால் அராவிய கூரிய வேல்கள் இரண்டு தமக்குள் போரிட்டுக் கொள்வதைப் போல், ஆடவர் நலம் அழிய நோக்குகின்ற நீண்ட அழகிய மலரனைய மகளிரின் பெரிய கண்கள் எல்லாம்; ஞாயிறு செல்லும் வழியையே பார்த்திருக்கும் பெரிய நெருஞ்சிப் பூக்களைப் போல், சீவகனுடைய தேர் செல்லும் வழியெல்லாம் சென்று சேர்ந்து கூடின.

Scanned by TapScanner

வடகமுந் துகிலுந் தோடு மாலையு மணியும் முத்தும்
கடகமுங் குழையும் பூணுங் கதிரொளி கலந்துமூதூர்
இடவகை எல்லை மின்நிரைத் திட்ட தேபோற்
படஅர வல்கு லாரைப் புயந்தன மாட மெல்லாம் 462

(வடகம் - மேற்போர்வை; தோடு - காதணி; பூண் - மற்றைய ஆபரணங்கள்; மூதூர் - இராசமாபுரம்; மின் நிரைத்திட்டதே போல் - மின்னலை வரிசையாக வைத்ததைப்போல)

மாதுகு மயிலி னல்லார் மங்கல மரபு கூறிப்
போதக நம்பி யென்பார் பூமியும் புணர்க என்பார்
தோதக மாகளங் கும்சுண்ணமேற் சொரிந்து தண்ணென்
தாதுகு பிணையல்வீசிச் சாந்து கொண்டெறிந்து நிற்பார் 463

(போதக - புகுக. தோதகம் - வருத்தம்; சுண்ணம் - வாசனைப்பொடி; தாது - மகரந்தப்பொடி; பிணையல் - மாலை; மது - காதல்; உகும் - ஒழுகும்)

கொடையுளு மொருவன் கொல்லுங் கூற்றினுங் கொடிய
வாட்போர்ப்
படையுளு மொருவனென்று பயங்கெழு பனுவல் நுண்ணூல்
நடையுளார் சொல்லிற் றெல்லா நம்பிசீவகன்கட் கண்டாம்
தொடையலங் கோதை யென்று சொல்லுபு தொழுது நிற்பார் 464

(பயம்கெழு - பயனுடைய; பனுவல் - சான்றோர் ஆக்கிய பெருநூல்; நுண்ணூல் - சிறந்த நூல்; அறிவு நூலுமாம். சொல்லுபு - சொல்லி)

மேலாடையும், பட்டுத்துணியும், தோடும், மாலையும், மணியும், முத்துக்கள் பதித்த கை வளையும், காதுக் குழையும் பூணும் ஆகிய அணிமணிகளின் ஒளி, திங்களின் ஒளியையும் ஞாயிற்றின் ஒளியையும் போல நிறைந்து விளங்க; புகழ்மிக்க பேரூராகிய இராசமாபுரத்தில் காணும் இடம் எல்லாம், மின்னலை அழகுற நிறுத்தி வைத்ததைப் போல் வீடுகளின் மாடங்களில் எல்லாம் பாம்பின் படம் போன்ற அல்குலுடைய பெண்கள் நிறைந்திருந்தனர். காதலைச் சொரிகின்ற மயில்போன்ற பாத்தையர்கள் முறைப்படி மங்கல வாழ்த்துக் கூறி, ஆண்மகனே வருக என்பார்; புகழ்வாழ்வு உன்னைச் சேர்க என்பார். மெய்வருந்த எங்கும் சுண்ணப் பொடியை அள்ளிவீசி, குளிர்ந்த மகரந்தம் சிந்தும் மலர்மாலைகளை அவன்மேல் தூவி, சந்தனத்தையும் வழித்தெடுத்து எறிவார். கொடை அளிப்பதில் ஒருவனே சிறந்து நிற்பான்; கொன்றழிக்கும் எமனிலும் கொடிய வாட்போரிலும் ஒருவனே சிறந்து விளங்குவான் - என்று பயன் தரும் பழைய நீதி நெறி நூல்கள் ஆய்ந்த பெரியோர் சொல்லியவற்றை எல்லாம் சீவகனிடம் ஒன்று சேர்ந்திருக்க (படைத்திறமும், கொடை வளமும் ஒருவனிடத்திலேயே) கண்டோம் என்று சில மங்கையர் அவனை வணங்கி நிற்பர்.

வீரனைக் கண்களால் களவு செய்யும் பெண்கள்

செம்மலைப் பயந்த நற்றாய் செய்தவ முடைய ளென்பார்
எம்மலைத் தவஞ்செய்தாள்கொ லெய்துவம் யாமுமென்பார்
அம்முலை வருத மன்னா ரகம்புலர்ந் தமர்ந்து நோக்கித்
தம்முறுவிழும வெந்நோய்தரும் துணைக்குரைத்து நிற்பார் 465

(அமர்ந்து நோக்கி - விரும்பிப் பார்த்து; விழுமவெந்நோய் - துன்பத்தைத் தரும் கொடிய காமநோய்; துணை - தோழி. அகம்புலர - மனம் உருக; எம்மலை - எத்தகைய)

சினவுநர்க் கடந்த செல்வன் செம்மலர் அகலம் நாளைக்
கனவினி லருளி வந்து காட்டியாங் காண என்பார்
மனவிரி யல்கு லார்தம் மனத்தொடு மயங்கி ஒன்றும்
வினவுந ரின்றி நின்று வேண்டுவ கூறு வாரும் 466

(சினவுநர் - கோபிப்பவர், பகைவர். கடந்த - வஞ்சியாது எதிர் நின்று வென்ற; அகலம் - மார்பை; காட்டி - காட்டுக. வினவுநர் - கேட்பவர்; மனவு - மேகலை)

467

...காமலே நின்றிருந்த படியே
...ர்கள். விண்ணுலகத்தில்
... இவ்வீர இளைஞனைப்
...ான்ற இவனை ஒப்பார்
...ணைப் பண்போலும்
...ர் நல்லழகைப் பருக
...ற அருள் மங்கை

...ட போழ்தே

...மக்

468

...ன -

...மை

வாள்முகத் தலர்ந்...
தோள்முதல் பசலை...
நாண்முதம் பாசந்...
கோண்முகப் புலி...

(வாள் - ஒளி; ...
தோளினிடத்திலுள்ள...
குணங்கள் நான்க...
கொல்லுதல்; புரிசை...

முழந்தாளளவு க...
சீவகனைக் கண்ட...
மேகலை கழன்று கா...
அரக்கைப் போல் கி...
பெருநெருப்பு சூழ்ந்...
இறுக்கிக் கட்டக்கட்...
உடைய பெண்கள் ...
மெலியக் கை கூப்பி...
அணிந்திருந்த அணி...
சீவகனுடைய தேர் ...
பெண்களின் உடலி...

ஒளி நிறைந்த முகத்திலே மலர்ந்து குளிர் மலர் போன்ற பெரிய கண்களை வளைத்து தோளிலே படர்ந்த பசலை அகல சீவகனை அள்ளிப் பருகுவார் போல் ஆசையோடு பார்க்க அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கில் முதலாவதான நாணம் தடையாக வருந்தி நிற்க; தான்நில்லாது; - கொல் புலியைப் போன்ற வலிவுடைய சீவகன் வளமிகு செல்வமுடைய தன் மாளிகை மதிலுள் புகுந்தான்.

பொன்னுகம் புரவி பூட்டு விட்டுடன் பந்தி புக்க
மன்னுக வென்றி யென்று மணிவள்ள நிறைய வாக்கி
இன்மதுப் பலியும் பூவுஞ் சாந்தமும் விளக்கு மேந்தி
மின்னுகு செம்பொற்கொட்டில் விளங்குதேர் புக்கதன்றே 471

(நுகம் - நுகத்தடி; பூட்டுவிட்டு - அவிழ்த்துவிட்டு; பந்தி - குதிரை கட்டும் சாலை; வாக்கி - வார்த்து; மின்உகும் - ஒளிவிடும்; மன்னுக - பொருந்துக)

இட்டவுத் தரிய மெல்லென் றிடைசவல் வருத்த வொல்கி
அட்டமங் கலமு மேந்தி யாயிரத் தெண்ம ரீண்டிப்
பட்டமுங் குழையு மின்னப் பல்கல னொலிப்பச் சூழ்ந்து
மட்டவிழ் கோதை மாதர் மைந்தனைக் கொண்டு புக்கார் 472

(உத்தரியம் - மேலாடை; சவல் - பிடர்; பட்டம் - நெற்றிப் பட்டம்; மட்டு - மணம்; அட்டமங்கலம் - எட்டு வகை மங்கலம்; ஒல்கி - நடந்து)

தாயுயர் மிக்க தந்தை வந்தெதிர் கொண்டு புக்குக்
காய்கதிர் மணிசெய் வெள்வேல் காளையைக் காவ லோம்பி
ஆய்கதி ருமிழும் பைம்பூ ணாயிரச் செங்க ணான்றன்
சேயுய ருலக மெய்தி யன்னதோர் செல்வ முற்றார் 473

(தாய் உயர் மிக்க - தாயைக் காட்டிலும் உயர்ச்சி மிக்க; காளை - சீவகன்; ஆயிரச் செங்கணான் - இந்திரன்; சேய் உயர் உலகம் - மிக உயர்ந்த தேவருலகம்)

பொன் நுகத்தடியின் தளை அவிழ்த்துக் குதிரைகளை அதற்குரிய சாலையத்திலே புகவிட்டபின், வெற்றிகள் வளர்க என்று பொன் மணிக் கிண்ணம் நிறைய இனிய மதுவை விட்டு, அம்மதுவாகிய பலியும் பூவும் சந்தனமும் விளக்கும் ஏந்த ஒளிவிடும் தேர் செம்பொற் கொட்டிலிலே புகுந்தது. மேலே அணிந்த ஆடையும் பிடரிக் கூந்தலும் மெல்லிய இடையை வருத்த நடந்து சென்று எட்டுவித மங்கலப் பொருள்களையும் ஏந்திய, தேன் ஒழுகும் மலர்மாலை அணிந்த ஆயிரத்தெட்டு பெண்கள் ஒன்றுகூடி நெற்றிப் பட்டமும் காதுக் குழையும் ஒளிவிட, வீரக்கழல் ஒலிக்க சீவகனை எதிர் கொண்டழைத்துச் சென்றனர். தாயும், உயர்மிகு தந்தையும் வந்தெதிர் கொள்ள, ஒளி வீசித் திகழும் மணிகள் அணிந்த சீவகனை ஆலத்தி எடுத்துப் பரிகரித்து, மிக்கொளி வீசும் புத்தணி புனைந்த சிவந்த ஆயிரம் கண்ணுடைய இந்திரனது வானுலகச் செல்வத்தை அடைந்த மனநிறைவு கொண்டனர்.

தகைமதி யெழிலை வாட்டுந் தாமரைப் பூவி னங்கண்
புகைநுதி யழல வாள்கண் பொன்னனாள் புல்ல நீண்ட
வகைமலிவரை செய்மார்பின் வள்ளலைக் கண்டு வண்டார்த்
தொகைமலி தொறுவை யாளுந் தோன்றன் மற்றின்ன கூறும் 474

(தகை மதி - பெருமையையுடைய சந்திரன்; பொன்னனாள் - திருமகள்; வரைசெய் மார்பு - மலையைப் போன்ற மார்பு; தொகை - கூட்டம்; தொறு - ஆநிரை)

கேட்டிது மறக்க நம்பி கேள் முதற் கேடு சூழ்ந்த
நாட்டிறை விசயை யென்னு நாறுபூங் கொம்ப னாளை
வேட்டிறைப் பார மெல்லாங் கட்டியங் காரன் தன்னைப்
பூட்டிமற் றவன்ற னாலே பொறிமுத லடர்க்கப் பட்டான் 475

(நம்பி - விளி; கேள்முதற் கேடு சூழ்ந்த - தன் சுற்றத்தாரிடத்திலே அழிவை ஆராய்ந்த; இறை - சச்சந்தன்; வேட்டு - விரும்பி; இறைப்பாரம் - அரசபாரம்; பொறி - இருவினை)

கோலிழுக் குற்ற ஞான்றே கொடுமுடி வரையென் றேறிக்
காலிழுக் குற்று வீழ்ந்தே கருந்தலை களைய லுற்றேன்
மால்வழி யுளதன் றாயின் வாழ்வினை முடிப்ப லென்றே
ஆலம்வித் தனைய துன்னணி யழிவிலு ளகன்று நின்றேன் 476

(கொடுமுடி - சிகரம்; மால்வழி - சச்சந்தனுடைய சந்ததி; ஆலம்வித்து - ஆலம்விதை)

சிறந்த ஒளி உடைய நிலவை வருத்துகின்ற தாமரைப் பூவில் இருக்கும் கூரிய நுனி உடைய தழல்போலும் ஒளி சிந்தும் வாள் போன்ற கண்ணுடைய திருமகள் அருள் சுரக்குமாறு, தவம்பல நிறைந்த அழகிய மலையனைய மார்புடைய சீவகனைக் கண்டு; வளமிக்க மலர்மாலை அணிந்த, ஆநிரை நிறையப் பெற்ற நந்த கோன் சொல்லுவான்; "இளைஞனே, இதனைக் கேட்டு மறப் பாயாக! சுற்றம் மூலமாக அழிவை எண்ணிய சச்சந்தன் விசயை என்னும் மணமலர்க் கொம்பு போன்ற மங்கை நல்லாளை மணந்து, அரச பாரத்தையெல்லாம் கட்டியங்காரன் மேல் சுமத்தி விட்டு பின் அவனாலேயே உயிர் கொள்ளப்பட்டான். இவ்விதமாக அரசன் கொலை செய்யப்பட்ட அன்றே நீண்டுயர்ந்த மலை முகட்டில் ஏறி கால் இடறி வீழ்வதுபோல், மண்டைபிளக்கக் கீழே விழுந்து இறக்க முயன்றேன். ஆனால் இறந்த அரசனுக்கு வழித்தோன்றல்கள் யாரும் இல்லையென்றறிந்த பின்னே இறப்பதே நல்லதென்று எண்ணும், ஆலம்விதை போன்ற துளி நம்பிக்கையை மனத்துக் கொண்டு சாகின்ற எண்ணத்தை விட்டு வாழ்ந்து வருகின்றேன்.

சீவகன் வெற்றிக்குச் சீதனமாய்க் கோவிந்தை?

குலத்தொடு முடிந்த கோன்றன் குடிவழி வாரா நின்றேன்
நலத்தகு தொறுவின் உள்ளேன் நாமங்கோ விந்த னென்பேன்
இலக்கணை மமைந்த கோதா வரியென விசையிற் போந்த
நலத்தகு மனைவி பெற்ற நங்கைகோ விந்தை யென்பாள் 477

(கோன் - சச்சந்தன்; நலத்தகுதொறு - விரும்பத்தக்க பசு; இசையிற் போந்த - புகழால் எங்கும் பரவிய; நலத்தகு மனைவி - விரும்பத்தக்க மனைவி)

வம்புடை முலையி னாளென் மடமகள் மதர்வை நோக்கம்
அம்படி யிருத்தி நெஞ்சத் தழுத்தியிட் டனைய தொப்பக்
கொம்படு நுசுப்பி னாளைக் குறையிரந் துழந்து நின்ற
நம்படை தம்மு ளொல்லா நகைமுக மழிந்து நின்றேன் 478

(வம்பு - கச்சு; மதர்வை நோக்கம் - மயக்கத்தைக் கொடுக்கும் பார்வை; கொம்பு அடு - பூங்கொம்பை வருத்துகின்ற; நம்படை என்றது ஆயர்களை நகைமுகம் - இன்முகம்)

பாடகஞ் சுமந்த செம்பொற் சீறடிப் பரவை யல்குற்
சூடக மணிந்த முன்கைச் சுடர்மணிப் பூணி னாளை
ஆடகச் செம்பொற் பாவை யேழுடன் தருவல் ஐய
வாடலில் வதுவை கூடி மணமக னாக என்றான் 479

(பாடகம் - ஒருவகைக் காலணி; சீறடி - சிறிய அடி; சூடகம் - கைவளை; ஆடகப்பொன் - நால்வகைப் பொன்னுள் ஒன்று)

குலத்தொடு மடிந்த அரசனின் குடிவழி வந்தவன் நான்; பயன் தரும் ஆநிரைகள் நிறைய உடையேன். என் பெயர் கோவிந்தன் என்பதாகும். குல மகளிர் இலக்கணம் குறைவறப் பெற்ற கோதாவரி என்னும் புகழ்ப் பெயரும் பெற்ற என் மனைவி பெற்ற பிள்ளை கோவிந்தை என்பவள் ஆவாள். அத்தகைய, கச்சிறுக்கிய மார்பும், பூங்கொம்பைப் பழிக்கும் இடையும் உடைய என் மகளின் மயலூட்டும் பார்வையால், அம்பு தோளிலே பாய்ந்து நெஞ்சிலே சென்று தைத்ததைப் போல் வருந்திய ஆடவர் பலர் அவளைப் பெற வேண்டி வருந்தி நிற்க நான் யாருக்கும் இன்முகம் காட்டி மறுமொழி கூறாது நின்றேன். பாடகம் அணிந்த சிவந்த பொன் போன்ற சிற்றடியும், பரந்த அல்குலும், வளையணிந்த முன்கையினையும் உடைய ஒளி சிந்தும் அணிமணி பூண்ட கோவிந்தையை ஆடகப் பொன்னால் ஆன பதுமைகள் ஏழுடன் தருவேன்; ஐயனே நீ என் மகளைக் குறைவற மணந்து கொண்டு மணமகன் ஆவாயாக, என்று வேண்டினான்.

(வேறு)

வெண்ணெய் போன்று ஊறினியள் மேம்பால்போற்
நீஞ்சொல்லள்
உண்ண வுருக்கிய ஆநெய்போல் மேனியள்
வண்ண வனமுலை மாதர் மடநோக்கி
கண்ணுங் கருவிளம் போதிரண்டே கண்டாய் 480

(ஊறு - ஸ்பரிசம்; மேம்பால் - மேவும் பால்; நோக்கி - நோக்கத்தை யுடையாள்; கருவிளம் - கருவிளமலர்; உண்ண - வற்ற)

சேதா நறுநெய்யுந் தீம்பால் சுமைத்தயிரும்
பாதால மெல்லா நிறைத்திடுவல் பைந்தாரோய்
போதார் புனைகோதை சூட்டுன் அடித்தியை
யாதாவ தெல்லாம் அறிந்தருளி யென்றான் 481

(சேதா - சிவப்புப் பசு; பாதாலம் - பாதாளம்; சுமைத்தயிர் - ஆடைத்தயிர்; அடித்தி - அடியாள்)

குலநினையல் நம்பி கொழுங்கயற்கண் வள்ளி
நலனுகர்ந்தா னன்றே நறுந்தார் முருகன்
நிலமகட்குக் கேள்வனு நீள்நிரைநப் பின்னை
இலவலர்வா யின்னமிர்தம் மெய்தினா னன்றே 482

(குலம் நினையல் - அரசர்க்குத் தாழ்ந்த இடையர் குலமென்று நினையாதே; நறுந்தார் - மணமுள்ள மாலை; நிலமகட்குக் கேள்வன் - திருமால்; நப்பின்னை - நப்பின்னைப் பிராட்டியார்; இலவலர் - இலவமலர்)

தொட்டுச் சுவைக்க வெண்ணெய் போல் மென்மை உடையவள்; கேட்டு மகிழ விரும்பி உண்ணும் பால்போல் இனிய மொழி பேசுபவள்; பார்த்து மகிழ வற்ற உருக்கிக் காய்ச்சிய பசுநெய் போன்ற பொன்மேனி உடையவள்; எழிலும் அழகும் உடைய மார்பினையும் காதல் போதையூட்டும்

பார்வையும் உடைய என் மகளின் இருபெரிய கண்களும் கருவிள மலர்களே அறிவாய். அல்லாமலும் சிவப்பு நிறப் பசுவின் மணமூட்டும் நறுநெய்யும் இனியபாலும் ஆடைச் தயிரும் பாதாள உலகம் மட்டும் நிறையச் செய்வேன்; புதிய மலர்மாலை அணிந்தவனே, மலரால் தொடுத்த மணமாலை சூட்டிக் கோவிந்தனை உன் அடியாளாக ஏற்றுக் கொள்ள வழி யாதோ அதை "அறிந்தருள்க" - என்றவன் மேலும் சொல்வான் "நம்பியே, குலவேற்றுமையை நினைக்க வேண்டா. வேடர் குலப் பெண்ணாகிய பெரிய மீன் போன்ற கண்ணுடைய வள்ளியை கடம்பமலர்மாலை அணிந்த முருகன் அன்றே மணக்கவில்லையா? நிலமகள் கணவரான திருமாலும் ஆநிரை நிறைய உடைய நப்பின்னையின் இலவமலர் போன்ற வாயின் இன்னமுதச் சுவையை உண்ணவில்லையா" - என்றான்;

(வேறு)

கன்னியர் குலத்தின் மிக்கார் கதிர்முலைக் கன்னி மார்பம்
முன்னினர் முயங்கி னல்லான் முறிமிடை படலை மாலைப்
பொன்னிழை மகளிரொவ்வா தவரைமுன் புணர்தல் செல்லார்
இன்னதால் முறைமை மாந்தர்க் கெனமனத் தெண்ணி னானே 483

(முறி - தளிர்; படலைமாலை - ஒருவகை மாலை)

கோட்டிளங் களிறு போல்வா ன்நந்தகோன முகத்தை நோக்கி
மோட்டிள முலையி னாள்நின் மடமக ளெனக்கு மாமான்
சூட்டொடு கண்ணியன்றே யென்செய்வா னிவைகள் சொல்லி
நீட்டித்தல் குணமோ என்று நெஞ்சகங் குளிர்ப்பச் சொன்னான் 484

(மாமான் - விளி; அம்மானே என்பது பொருள்; சூட்டு பூமாலுக்கும் கண்ணி பூவிற்கும் வழங்கும்)

தேன்சொரி முல்லைக் கண்ணித் தெருதுவ லாடை யாயர்
கோன்பெரி துவந்து போகிக் குடைதயிர் குழுமப் புக்கு
மான்கறி கற்ற கூழை மௌவலுங் மயிலைப் பந்தர்க்
கானசொரி முல்லைத் தாரான் கடிவினை முடிக வென்றான் 485

(குழும - முழங்க; மௌவல் - செம்முல்லை; மயிலை - இருவாட்சி; மான் கறி கற்ற - மான் கடித்துப் பழகிய)

குலத்தில் சிறந்த கன்னியரின் அழகுடைய நிமிர்ந்த என்றும் அழியாத இளைய மார்பை ஆராய்ந்து தழுவுவதே அல்லாமல்; தனிரும் மலருமாகத் தொடுத்த வகை மாலையினையும் பொன்அணியினையும் அணிந்த மகளிரில் தம் குலத்துக் கொள்வாதவரைக் கூட மாட்டார்கள் - இது தான் வாழும் மாந்தர்க்கு உரிய ஒழுக்க நெறி என்று சீவகன் மனத்துள் எண்ணினானாக. நந்தக் கோட்டினை உடைய இளங்களிறு போன்ற சீவகன் நந்தகோனுடைய முகத்தைப் பார்த்து; "மாமா, பயந்த அழகிய இளமுலை உடைய நின் அழகுமகள் எனக்கு சூட்டும் கண்ணியும் அணியும் மாலையும் ஆவாள் அல்லவோ? எனவே இவற்றையெல்லாம் சொல்லிப் பொழுதைக் கழிப்பதில் யாது பயன்" என்று நந்தகோன் உள்ளங் குளிர இனிய மொழி கூறினான். தேன் சிந்தும் முல்லை மலர்க் கண்ணியும் காவி உடையும் அணிந்த இடையர் தலைவன் - மணங்கமழும் முல்லை மலர்மாலை அணிந்தவனாகிய நந்தகோன் பெரிதும் மகிழ்ந்து போய், கடையும் தயிர் முழங்கப் புகுந்து, மான்கள் கடித்துப் பழகியதால் குறைவுற்ற முல்லையும் இருவாட்சியும் சூழ்ந்த பந்தலிலே மண விழா நடைபெறுவதாக என்றான்.

கனிவளர் கிளவி காமர் சிறுநுதல் புருவங் காமன்
குனிவளர் சிலையைக் கொன்ற குவளைக்கண் கயலைக் கொன்ற
இனியுளர் அல்லர் ஆயர் எனச்சிலம் பரற்றத் தந்து
பனிவளர் கோதை மாதர் பாவையைப் பரவி வைத்தார் 486

(கிளவி - கோவிந்தை; நுதலும் புருவமும் குனிவளர் - குனிதல் வளர்கின்ற; பரவி - வாழ்த்தி; அரற்ற - புலம்ப)

நாழியு ளிழுது நாகூன் கன்றுதின் றொழித்த புல்தோய்த்து
ஊழிதொ றாவுந் தோழும் போன்றுடன் மூக்க வென்று
தாழிருங் குழலி னாளை நெய்தலைப் பெய்து வாழ்த்தி
மூழைநீர் சொரிந்து மொய்கொ ளாழுப்புத்திய ஏட்டி லாரே 487

(நாழி - உழக்கு; இழுது - நெய்; நாகு ஆன்கன்று - இளமையுடைய பசுவின் கன்று; புல் - அறுகம்புல்; மூக்க - மூத்திடுக; மூழை - அகப்பை; மொய் - நெருக்கம்; தோள் - தொழு)

நெய்விலைப் பசும்பொன் தோடு நிழல்மணிக் குழையு நீவி
மைவிரி குழலி னாளை மங்கலக் கடிப்புச் சேர்த்திப்
பெய்தனர் பிணையல் மாலை ஓரிலைச் சாந்து பூசிச்
செய்தனர் சிறுபுன் கோலந் தொறுத்தியர் திகைத்து நின்றார் 488

(நிழல் ஒளி; நீவி - நீக்கி; கடிப்பு - கடிப்பிணை: ஒருவகைக் காதணி. தொறுத்தியர் - இடைச்சியர்)

கனிபோல் இனிக்கின்ற மொழி உடையாளின், அழகிய சிறுநெற்றியும் புருவமும், காமனின் வளர்ந்து வளைந்த வில்லினைப் பழித்தன. குவளை மலர்போன்ற கண்கள் புரளும் மீனைப் பழித்தன. எனவே ஆயர்கள் இவளைக் கண்டால் இனி உயிருடன் இருக்கமாட்டார்கள் எனப் பாதச் சிலம்பு வாய் விட்டுப் புலம்ப, குளிர்ச்சி மிகும் மாலையணிந்த மங்கையர்கள் பொற்பாவை அன்ன கோவிந்தையை அழைத்து வந்து வாழ்த்துக்கள் கூறி அப்பந்தலிலே அமரச் செய்து நாழி உழக்கில் இருந்த நெய்யினை பசுவின் இளங்கன்றுகள் மேய்ந்து தின்று ஒழித்த அருகம் புல்லிலே தோய்த்தெடுத்து; ஊழுழிக் காலமும் பசுவும் தொழுவமும் போல மூத்திடுக என்று வாழ்த்தி கோவிந்தையின் நீண்டு வளர்ந்த கரிய கூந்தலிலே தடவி,

அகப்பையிலே நீர் அள்ளிச் சொரிந்து, சூழ்ந்திருந்த ஆய்ச்சியர்கள் நீராட்டினர். நெய்விலைப் போகக் கிடைத்த புதிய பொன் தோட்டையும் ஒளிவிடும் மணிக் குழையையும் நீக்கிவிட்டு மங்கலத்துக்குரிய கடிப்பிணையை அணிவித்து, பிணையலாகிய மாலையைச் சூட்டி, ஓர் இலையிலே எடுத்துவந்த சந்தனத்தைப் பூசிச் செய்த கோவிந்தையின் அழகிய கோலம் கண்டு ஆய்ச்சியர்கள் திகைத்து நின்றனர்.

பதுமுகன் - கோவிந்தை திருமணம்

ஏறங்கோள் முழங்க ஆய ரெடுத்துக்கொண் டேகி மூதூர்ச்
சாறெங்கு மயரப் புக்கு நந்தகோன் றன்கை யேந்தி
வீறுயர் கலச நன்னீர் சொரிந்தனன் வீர னேற்றான்
பாறுகொள் பருதி வைவேற் பதுமுக குமரற் கென்றே 489

(ஏறங்கோள் - ஏறுகளைத் தழுவிக் கொள்ளுதற் பொருட்டு அடிக்கும் வாத்தியம்; முல்லை நிலத்திற்குரிய பறை. மூதூர் - இராசமாபுரம்; சாறு - விழா; அயர - கொண்டாட; பாறு - பருந்து)

நலத்தகை யவட்கு நாகா ளாயிரத் திரட்டி நன்பொன்
இலக்கணப் பாவை யெழுங் கொடுத்தனன் போக விப்பால்
அலைத்தது காமன் சேனை யருநுனை யம்பு மூழ்க
முலைக்குவட் டிடைப்பட் டாற்றான் முத்துக முயங்கி னானே 490

(அலைத்தது - வருத்தியது; குவடு - உச்சி)

கள்வாய் விரிந்த கழுநீர்பிணைந் தன்ன வாகி
வெள்வேல் மிளிர்ந்த நெடுங்கண் விரை நாறு கோதை
முள்வா யெயிற்றூ றமுதம்முனி யாது மாந்திக்
கொள்ளாத வின்பக் கடற்பட்டனன் கோதை வேலான் 491

(பிணைதல் - சேர்தல்; கோதை - கோவிந்தை; முள்வாய் - கூரிய, முனியாது - தெவிட்டாமல்; மாந்தி - உண்டு)

தீம்பாற் கடலைத் திரை பொங்கக் கடைந்து தேவர்
தாம்பாற் படுத்த வமிர்தோட மாலை வேய்த்தோள்
ஆம்பாற் குடவர் மகளோவென் றிவை நயை
ஓம்பா வொழுக்கத் துணர்வொன்றில னாயி னானே 492

(தீம்பால் - இனிய பால்; குடவர் - இடையர், உணர்வு - அறிவு; நைய - வருந்த; ஆம் - பயன்ஆம்)

ஏறுகோட் பறைமுழங்க இடையர்கள் அவனை அழைத்துக் கொண்டு இராசமாபுரம் எங்கும் விழாக் கொண்டாடச் சென்று பின் கந்துக்கடன் வீட்டினுள் புகுந்ததும் நந்தகோன் தன் கையாலே அழகிய உயர்ந்த கலசத்தை ஏந்தி நீரைச் சொரிய, சீவகனும் அதனை பருந்துகள் சூழும் ஞாயிறு போன்ற ஒளி உடைய கூர் வேலேந்திய பதுமுகனுக்கு என்று கூறி ஏற்றுக் கொண்டான். நலமிக்க அழகுடைய அவளுக்கு இளம்பசுக்கள் இரண்டாயிரமும், பசும் பொன்னால் அழகுறச் செய்த பொற் பாவைகள் ஏழும் கொண்டு போகக் கொடுக்க; இப்புறத்தே பதுமுகனைக் காமனின் கூர் அம்புப் படை வருத்தத் துயர் ஆற்றாதவனாகி கோவிந்தையின் முலை முகட்டிடை வீழ்ந்து முத்துக்கள் சிதறச் சிதறுமாறு அவளைத் தழுவினான். வாய் விரித்துத் தேன் சிதறும் செழுங்கழு நீர்ப்பூக்கள் பிணைந்தது போலமைந்து, வெள்ளிய வேல் போன்ற ஒளி உமிழும் நீண்ட கண்களும், மணமிகு மலர்மாலையும் உடையவளாகிய கோதை - கோவிந்தையின் வாரெயிறு சுரக்கும் வாயமுதம் வெறுக்காது நாளும் அள்ளிப்பருகி கரை கொள்ளாத இன்பக் கடலிலே மாலையணிந்த வேலையுடைய மன்னவன் மகிழ்ந்து திளைத்தான். இனிய பாற்கடலை அலைபொங்கக் கடைந்த தேவர்கள் பெற்ற அமுதமோ இல்லை இவள் பெரிய மாலைகள் அணிந்த, மூங்கில் போன்ற தோளும் பயனாகும் பாவையும் உடைய இடையர் மகள் தானோ என்று மயங்கி, கோவிந்தை வருந்த தடை செய்ய முடியாத இன்ப மயக்கத்தால் தானும் உணர்வற்றவனானான்.

கோவிந்தையார் இலம்பகம் முடிவுற்றது.

அன்பற்றவரேயாவர். எனவே பெருமானார் மாறனாரை 'அன்பனே' என அழைத்தார்.

விருந்தோம்பும் வேள்வியில் கணவன் மனைவி ஆகிய இருவர்க்குமே சரிசமமான பங்குண்டு. சிறையில் இருந்த கற்பின் செல்வியாம் சீதை அசோகவனத்தில் துயருரும்போது விருந்து கண்டபோது என் உறுமோ? (கம்.ரா. காட்சிப் படலம் 15) என ஏங்கியதை ஓர்மின். அதனாலன்றோ இறைவனும் 'அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும்' என்றார்.

அணங்கினோடும் - மனைவியோடும். இருநிதிக் கிழவன் - குபேரன்.

27. இப்பரிசு இவர்க்குத் தக்க
வகையினால் இன்பம் நல்கி
முப்புரம் செற்றார் அன்பர்
முன்பு எழுந்தருளிப் போனார்
அப்பெரியவர் தம் தூய
அடிஇணை தலைமேல் கொண்டு
மெய்ப்பொருள் சேதி வேந்தன்
செயலினை விளம்பல் உற்றேன். 466

பொ.ரை

இப்பரிசினால் இவர்க்குத் தகுந்த முறையில் இன்பம் நல்கிய பண்பு முப்புரத்தை எரியுண்ணச் செய்த ஈசனார் அன்பனார் முன்பு தோன்றி வெளிப்பட்டு நின்ற நிலையினின்று புகழ்மிக்க நிலையில் எழுந்தருளினார். அப்பெருமைமிகு இளையான்குடிமாறனாரின் தூய்மையான திருவடிகளை என் சென்னி வைத்து அத்துணையால் மெய்ப்பொருள் எனப் பெயர் கொண்ட சேதிநாட்டு மன்னரின் அருட்பெரும் செயலினைக் கூறப் போகின்றேன்.

பரிசு - தன்மை.

இளையான்குடி மாறநாயனார்

மன்னியவே ளாண்டொன்மை யிளைசை மாறர்
வறுமையா லுணவுமிக மறந்து வைகி
யுன்னருநள் ளிருண்மழையி லுண்டிவேண்டி
யும்பர்பிரா னணைய வயலுழுது வித்துஞ்
செந்நெல்முளை யமுதுமனை யலக்கா லாக்கிச்
சிறுபயிரின் கறியமுது திருந்தச்செய்து
பன்னலரு முணவருந்தற் கெழுந்த சோதிப்
பரலோக முழுதாண்ட பான்மை யாரே

- திருத்தொண்டர் புராணசாரம்

6. மெய்ப்பொருள் நாயனார் புராணம்

வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
- திருத்தொண்டத்தொகை

சுற்றநன் மெய்த்தவன் போல்ஒரு பொய்த்தவன் காய்சினத்தால்
செற்றவன் தன்னை அவனைச் செறப்புக ஓம்திருவாய்
மற்றவன் தத்தாநமரே எனச்சொல்லி வானுலகம்
பெற்றவன் சேதியன் மெய்ப்பொருளாம் என்று பேசுவரே
- திருத்தொண்டர் திருவந்தாதி

1. சேதிநல் நாட்டு நீடு
திருக்கோவலூரில் மன்னி
மாதுஒரு பாகர் அன்பின்
வழிவரு மலாடர் கோமான்
வேதநல் நெறியில் வாய்மை
விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க்கு அன்பர்
கருத்து அறிந்து ஏவல் செய்வார். 467

பொ.ரை

(தோற்றுவாய் - இந்நாயனாரும் காரணப் பெயர் கொண்டவர் இயற்பெயர் இன்னதென அறியமாட்டாதவர். பொய் தவவேடத்தை மெய்யென எண்ணித் தம் உயிரைவிட்டவர். அதனால் மெய்ப்பொருளார் எனப் பெயர் பெற்றார் என்க)

நன்மை விளங்கும் சேதிநாட்டிலே திருக்கோவலூரில் (இன்றை வழக்கு திருக்கோயிலூர்) நிலைபெற்ற அரசு செலுத்தி வாழ்ந்து உமையம்மையை ஒரு பக்கத்தில் கொண்ட சிவபிரானிடத்தில் மாறாது வைத்த அன்பினால் வழிவழியாக வருகின்ற மலாடர் கோமானாகிய மெய்ப் பொருளார் நான்மறையின் உண்மைத் திறம் உலகில் நன்கு விளங்கும்படி மேன்மை பூண்டாராய் மிக்க அன்பினால் இறைவனின் அடியார்களின் கருத்தறிந்து அவர்களுக்குத் தொண்டு செய்து வரும் நாளில் சேதிநாட்டிலுள்ள நடுநாட்டின் உட்பகுதிகள் பல நாடு எனப் பெயர் பெறும் அவற்றுள் ஒன்று சேதிநாடு. இவர்கள் சிற்றரசர்களாவர். சேதிநாட்டை ஆண்டவர் சேதிராயர் எனப்பட்டனர். திருவிசைப்பா பாடிய சேதிராயர் இவ்வம்சத்தினரே என்பர். மலாடர் கோமான்: சேதிநாடாளும் சிற்றரசர் மரபில் மலையமான், நத்தமான், சுருதிமான் எனப் பிரிவு கொண்டவர் இருந்தனர். அவர்களில் மலையமான் மரபில் வந்ததாலும் சைவ நெறி மேற்கொண்டதாலும், அன்பின் வழியாலும் மெய்ப் பொருளார் எனப்பட்டார். நீடு திருக்கோவலூர் என்பதனை திருநீடு கோவலூர் எனவும் கொள்ளலாம்.

...வாழும் அரசியல் அறவழிகளை
...மலைபோல் உயர்ந்த நீண்ட
...னைகளை வென்று முன்னோர்
...மாறாது · மிக்கு ஓங்கி வரும் நீதி
...நீதிகளைச் சடையில் கொண்ட
...செய்வார்.

...ல்வாட்சியைச் சுவாமிகள்
...ன துணையே ஆக' (415)
... - பகைவர்களின் போர்க்
...ரணத்தின் திரை - அலை.

469

...று வாழும்
...ளும் ஏழு
...வையில்
...வின்றி
...ாகிய
...பிற

பொ.ரை

நாம் அரசியல்...
ஏனைய செல்வங்க...
அடியார்களுக்கே ...
விளங்குபவராதலா...
தம் உள்ளத்தில் ...
ஒருமுறை வந்து ...
வேண்டும் பொருள்...

மாடும் - செ...
செல்வங்களும்.

5. இன்ன ஆயு ...
இகல்திற...
அன்னவர் தம்...
ஆசையா...
பொன் அணி ...
பொருபரி...
பல்முறை இழ...
பரிபவப்...

பொ.ரை

மேற்கூறிய மு...
வாழும் நாளில், இ...
நினைத்து அல்லா...
பொன்னாற் செய்...
போர்புரியவல்ல கு...
திரட்டி வந்து போ...
பன்முறை இழந்து ...

Scanned by TapScanner

ளைப் பட்டுப்போன
போரில் வெல்வது
எண்ணி மெய்ப்
வைத்திருக்கும்
னின் அடியார்
சிவயோகியின்
ண்டானாய்ச்
வண்டுமென

ய சில
ரகளே
க்கம்
ால்
து

பொழிப்புரை

முத்தநாதன் எ
திருநீற்றைப் பூசி, விசி
கையில் சிறு கொடுவா
புறஇருளை நீக்க முற்
(அகத்தில்). இருளைப்
வேண்டும் என்ற கொ
வேடங் கொண்டு புகுந்

விளக்கம்

திரியின் நுனியில்
போக்குகிறது. உள்
அகல்விளக்கு அதில் ஒ
அருகிலுள்ள இருளை
நோக்குவோம். எரியும்
நீக்காது புறத்தே உள்ள

திரி - முத்தநாதன்.
புறஒளி இருளை
(பெருவேடம்).

எரியும் திரிநுனி
பொருளாரைக் கொல்ல

தன் உள்ளே வஞ்
தெய்வச் சேக்கிழ
அச்செயல் நம்மனோர்க்
வஞ்சக்கறுப்பும் உடன்
(வஞ்ச வல்வினைக் கறு

வேணிகள் - சடை
மறைத்து. (தொழுதனை
காரதியடிகளைக் கொ
வந்தான்.) புத்தகக் கவ

[illegible] முத்த நாதனென்பது அவன் பெயரன்று. அவனுக்கு அது பெயராயின் [illegible] அவ்வாறு கூறாது ஒரு மனமொன்றைக் கருதவியே முத்தன் என்றும் [illegible] தமிழில் முத்தானென வரும் முறைமை பற்றி மூடனென்பதனையே [illegible] பெயர் கொடுத்துக் கூறினாரென்பது போதலின் முத்தநாதனென்ற [illegible] கொள்ளப்பட்டது. புத்திநாதன் என்றும் பாடபேதமும் உண்டு" திரு [illegible]

[illegible] மாறுபாடாகிய அரசன் பெயர் இவன் கடையனாம் என்று [illegible] இவ்வாறு இவன் செய்தியைக் கூறிய மூன்று பாட்டிலும் பொய் எனத் [illegible] அடியின் கடையில் இவன் பெயரை ஆசிரியர் வைத்துக் காட்டிய [illegible] குறிக்க இவ்வாறன்றி முத்தன் - முத்தன் - மூடன் அறிவின்றும் [illegible] - விலகியவன் என்றும் இது அவன் பெயரான தென்றும் ஆசிரியர் இவ்வாறுதானே அவனுக்கு ஒரு பெயர் தந்து கூறினாரென்றும் [illegible] திரு ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள். ஆசிரியர் இவ்வாறு [illegible] பெயர் தந்து கூறப் போதிய காரணமில்லை எனவும் ஆசிரியர் வைத்துக் கூறுவதாயின் இப்பெயரைப் புனைந்துரைக்க [illegible] எனவும் தோன்றுகிறது. இது அந்நாளில் புறச்சமயிகள் தம் [illegible] கொண்ட பெயர்களில் ஒன்று போலும்" திரு முதலியார் அவர்கள்.

8 மாதவ வேடம் கொண்ட
 வண்கணான் மாடம் தோறும்
கோதை சூழ் அளகபாரக்
 குழைக்கொடி ஆடமீது
சோதிவெண் கொடிகள் ஆடும்
 சுடர்நெடு மறுகில் போகிச்
சேதியர் பெருமான் கோயில்
 திருமணி வாயில் சேர்ந்தான். 474

பொ.ரை

[illegible] தவ வேடம் கொண்ட அவ்வன்னெஞ்சக் கடையவன் மாடங்கள் [illegible] தோறும் மாலை சுற்றிய கூந்தலையும் குழையினையும் கொண்ட கொடிகள் [illegible] உப்பரிகையின் மேலே ஒளி விளங்கும் வெண்கொடிகள் அசைகின்றதற்கிடமாகிய விளக்கம் பொருந்திய நீண்ட வீதிகளிலே சென்று சேதிநாட்டரசர் பெருமானாகிய மெய்ப்பொருளாரின் அரண்மனையின் அழகிய திருவாயிலை அடைந்தான்.

வண்கணான் - கொடிய முத்தநாதன். கோதை - மாலை. கொடிஆட - பெண்கள் [illegible] புரிய. மறுகில் - வீதியில். சேதியர் பெருமான் - மெய்ப்பொருளார்.

9 கடையுடைக் காவலாளர்
 கைதொழுது ஏறநின்றே
உடையவர் தாமே வந்தார்
 உள் எழுந்து அருளும் என்னத்

தடைபல புக்கபின்பு
 தனித்தடை நின்ற தத்தன்
இடை தெரிந்து அருள வேண்டும்
 துயில் கொளும் இறைவன் என்றான். 475

பொ.ரை

கடை வாயிலின் முற்புறத்தைக் காவல் கொண்டிருந்த காவலர்கள் அந்த வஞ்சக வேடத்தானைக் கண்ட அளவில் நம்மை ஆளாக உடைய அடியார் திருவுரு கொண்டு வந்தார் என்று கைகுவித்து வணங்கித் தொலைவே நின்று 'உள்ளே எழுந்தருள்க' எனக் கூற இந்நிலைபோல் பிற நிலைகளில் காவல் புரிவோரும் பணிந்து மொழிந்திட தடைகள் யாவற்றையும் கடந்து உட்சென்ற பின்பு மன்னர்பிரானின் உயிர்க் காவலனாய் நின்ற தத்தன் என்பான் மட்டும் 'அரசரின் சமயம் தெரிந்தபின் தாங்கள் உள்ளே எழுந்தருளல் நலம். தற்போது அரசர் துயில் கொள்ளும் காலம்' என்றார்.

'காவலர் கைதொழுது ஏறநின்றே' என்பதால் தான் அரசன் எனினும் மெய்த்தவமுடையார் வரின் அவர் ஆணைவழி காவலர் கருமம் ஆற்றிட வேண்டுமெனவும் அறிகின்றோம்.

கடை வாயில் காவலர் - அரண்மனையில் பல நிலைகள் உண்டு அதில் முதல்வாயில் இக்காவல். தடைபல - பல வாயில்கள். இடை தெரிந்து - சமயம் அறிந்து. எழுந்தருளல் - உள்ளே செல்லல்.

10. என்று அவன் கூறக்கேட்டே
 யான் அவற்கு உறுதி கூற
நின்றிடு நீயும் என்றே
 அவனையும் நீக்கிப் புக்குப்
பொன்திகழ் பள்ளிக்கட்டில்
 புரவலன் துயில மாடே
மன்றல்அம் குழல்மென் சாயல்
 மாதேவி இருப்பக் கண்டான். 476

பொ.ரை

தத்தன் கூறியதைக் கேட்ட பொய்தவ வேடத்தானும் (பிறவாயில் உள்ளவர்கள் கைதொழுது வணங்கி எம்மை அனுப்பிட நீ மட்டும் தடுப்பது எற்றுக்கு?) 'யான் மன்னற்கு உறுதி (வாழ்நாளில் இறுதியாம் உறுதியை) கூற வந்தனம். நீ வாளா நில்' என அவனைப் புறந்தள்ளுவன்போல நீக்கி பொன்மயமாக விளங்கும் கட்டிலில் நாயனார் அவர்தம் நறுமணங் கமழும் கூந்தலையும், மென்மைத் தன்மை வாய்ந்த சாயலும் கொண்ட மாதேவியும் உடன் இருப்பதனைக் கண்டான்.

உறுதி - வாழ்நாளின் உறுதியாம் வீடுபேற்றிற்குரிய செயல். (அமங்கலச் சொல்லாகவும் பொருள் கொள்ளலாம். அவன் வந்த நோக்கமே அதுதானே! அதனால் அவன் வாயினின்று வரும் சொற்களும் சற்றுத் தடுமாற்றம் கொள்கின்றன எனக் கொள்ளலாம்.) புரவலன் - மன்னன். மாடே - அருகே.

11. கண்டு சென்று அணையும் போது
கதும்என இழிந்து தேவி
வண்டு அலர் மாலையானை
எழுப்பிட உணர்ந்து மன்னன்
அண்டர் நாயகனார் தொண்டர்
ஆம் எனக் குவித்த செங்கை
கொண்டு இழிந்து எதிரே சென்று
கொள்கையின் வணங்கி நின்று. 477

பொ.உரை

அரசனின் தேவியார் உடன் இருப்பதையும் கண்டு அதனால் அச்சமோ, கூச்சமோ இன்றிச் சென்றிட (சொல்லைப் பார்க்க. அணையும்போது அமங்கலச் சொல். முதலில் தத்தன் தடுத்தான். அடுத்து உறுதி கூறுவன். மூன்றாவதாய் அணையும் போது அவர்கள் வாழ்வை அணைக்கச் செல்லும்போது) தேவியானவள் விரைந்து பதறி எழுந்து வண்டுகள் ஒலிக்கும் மாலை கொண்ட அரசனை எழுப்பிட, அதனை உணர்ந்த மன்னனும் துயில் நீங்கி எதிரே நிற்கும் வஞ்சக வேடத்தானை அகில உலகிற்கும் தலைவராம் சிவபிரானின் தொண்டர் (பொய்வேடத்தையும் மெய்யென்றே எண்ணுகின்றார்) என நினைந்து தம் அழகிய கைகளைக் குவித்து எதிர்சென்று தாம் கொண்ட கொள்கைப்படி வணங்கி நின்றார்.

கதுமென - விரைவாக (திடுக்கிட்டு எழுதல்). இழிந்து - கட்டிலினின்றும் இறங்கி. கொள்கையின் - தாம் கொண்டு வாழும் முறைப்படி.

12. மங்கலம் பெருகமற்று என்
வாழ்வு வந்து அணைந்தது என்ன
இங்கு எழுந்தருளப் பெற்றது
என்கொலோ என்று கூற
உங்கள் நாயகனார் முன்னம்
உரைத்த ஆகமநூல் மண்மேல்
எங்கும் இல்லாதது ஒன்று
கொடுவந்தேன் இயம்ப என்றான். 478

பொ.உரை

'நன்மைகள் மிகுமாறு என் வாழ்விற்குரிய செல்வமே வந்து சேர்ந்தது என்று கூறும்படி தாங்கள் இங்கு எழுந்தருளியது எதனைக் கருதியோ'

என நாயனார் நவில, அவனும் 'உங்கள் நாயகனாராம் சிவபிரான் முன்னமே கூறியருளியதும் இவ்வுலகில் எங்கும் கிடைக்கப் பெறாததுமாகிய சைவ ஆகம நூல் ஒன்றினைத் தங்களுக்காகவே எடுத்துக் கொடு இங்கு வந்துள்ளேன்' என்றான்.

விளக்கம்

மங்கலம் பெருக: மங்கல வழக்கு எனினும் பின்நிகழ்ச்சியை நோக்கும்போது அமங்கலப் பொருள் தொனிக்கின்றது. (நான்காம், முன்னர் மூன்று பொருள் தொனிக்கும் அமங்கலச் சொற்கள்) என் வாழ்வு வந்து அணைந்தது, புனைவேடத்தானைக் கண்ட உண்மை வழி ஒழுகும் மன்னனின் வாய்ச் சொற்களும் தடுமாற்றம் கொள்கின்றது. தங்கள் வரவால் என் வாழ்வு அணையப் போகிறது 'இறப்பு நெருங்குகின்றது' என்று குறிப்புக் காணப்படுதல் காண்க. உங்கள் நாயகனார், பொய்த்தவவேடமற்றவன் எனின் அவன் நம நாயகனார் என நவின்றிருக்க வேண்டும். உங்கள் நாயகன் என்றதால் நீ வேறு நான் வேறு என பாகுபடுத்திக் காட்டும் சொல்லைக் கூறினான்.

கொடுவந்தேன் என்பது கொண்டு வந்தேன் என்பதின் தொகுத்தல் விகாரம்.

13. பேறு எனக்கு இதன்மேல் உண்டோ
பிரான் அருள் செய்த இந்த
மாறுஇல் ஆகமத்தை வாசித்து
அருள் செய்யவேண்டும் என்ன
நாறுபூங் கோதை மாது
தவிரவே நானும் நீயும்
வேறு இடத்தில் இருத்தல் வேண்டும்
என்று அவன் விளம்ப வேந்தன். 479

பொ.உரை

நாயனார், அவனை நோக்கி 'தாங்கள் ஈண்டு எழுந்தருளி உபதேசம் செய்யும் இதனைக் காட்டிலும் வேறு சிறந்த பேறும் எனக்கு உண்டோ? (இல்லை) ஆகவே சிவபிரானார் மொழிந்தருளிய மாறுபாடில்லாத ஆகம நூலினை எனக்குப் படித்து அதன் பொருளைச் செம்மையாய் எடுத்துரைக்க வேண்டும்' என வேண்டிக் கொள்ள கபடனாகிய அவனும் 'மணம் வீசும் மலர்களால் கட்டப்பட்ட மாலையை அணிந்த உன் மனைவியும் இவண் இருத்தல் கூடாது. நானும் நீயும் வேறு இடத்து இருக்க வேண்டும்' என விளம்ப வேந்தனும், பேறு எனக்கு இதன்மேல் உண்டோ! இதனினும் ... வேறு பேறு உண்டோ!

விளக்கம்

(நசைப் பொருள்) இதுவரையான் நல்லடியார் பெருமக்களை வழிபட்டு வந்தேன். தற்பொழுது இறைக உள்ளோன். இனிமேல் அடியாரை வணங்குத

[illegible] அவருக்கு இல்லை. தாறு பூங்கோதை மாது தவிர இப்பொழுது வரை நின் [illegible] கணவனோடு வாழும் காரிகையாய்ப் பூவுடனும் பொட்டுடனும் [illegible]. இனி அவன் அந்நிலை கொள்ளான். எனவே அவர்களும் [illegible] தன்னினின்று நீங்க வேண்டும் (நச்சுப் பொருள்) வேறு இடத்து வேறு [illegible] இருக்க வேண்டும் (நச்சுப் பொருள்) நீ வேறு இடத்தில் [illegible] இருப்பவன் இருபா இடமும் ஒன்றல்ல.

பகுத்தொழுக்கம் கொண்ட வஞ்சகப் பேயன் முத்தநாதன் ஆனையால் [illegible] வாயினின்று வரும் சொற்கள் தவமற்றதாகவே அமையும் தன்மையன. [illegible] சொல் செயல் நலம் பயக்குமோ! அவர் தம் வாயினின்றும் நல்ல சொற்களும் வெளிவருமோ?

14 திருமகள் என்ன நின்ற
தேவியார் தம்மை நோக்கிப்
பரிவுடன் விரைய அந்தப்
பாதத்திடை போக ஏவித்
தருதவ வேடத்தானைத்
தவிசின்மேல் இருத்தித் தாமும்
இருநிலத்து இருந்து போற்றி
இனி அருள் செய்யும் என்றார். 480

பொருள்

திருமகள் போன்று தம் எதிரே நின்ற தம் துணைவியாரை நோக்கி 'விரைவாய் விரைவாய் அந்தப் பாதத்திருச் செல்க' எனப் பணித்து வஞ்சக வேடதாரியான அவனை உயர்ந்த ஆசனத்தின் மேல் அமர்த்தி அமரச் செய்து தாமும் பெரிய நிலத்திலே அமர்ந்து அவனை வணங்கி 'இனி தாங்கள் கூறக் கருதிய ஆகம நூலை அருளலாம்' என்றார்.

விளக்கம்

தவிசின்மேல் இருத்தித் தாமும் இருநிலத்து இருந்து ஆசாரியனிடத்து உபதேசம் பெறும் போது விதிப்படி அவர் மேலும் சீடன் கீழும் இருக்கும் [illegible] நச்சுப் பொருள்: கொடுவாளால் குத்துவதற்கு ஏற்றாற்போல் வஞ்சக வேடத்தான் மேலும் வாளினைத் தாங்கும் தான் கீழுமாய் அமர்ந்தார். போற்றி இனி அருள்செய்யும்: வாசித்து அருள் கூறுக. நச்சுப் பொருள்: இடம் நன்கு அமையப் பெற்றது. இனி நீ வந்த வேலையைச் செய்யலாம்.

15 கைத்தலத்து இருந்த வஞ்சக்
கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்து அவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான் முன்
நினைந்த அப்பரிசே செய்ய
மெய்த்தவ வேடமே மெய்ப்
பொருள் எனத் தொழுது வென்றார். 481

பொருள்

(இப்பாடலின் பின்னிரு அடிகளே நாயனார் பெயருக்குக் காரணம் ஆதலை உணர்க.)

கபட வேடத்தானான முத்தநாதன் கையில் வைத்திருந்த வஞ்சனையான நூற் கவளிகையைத் தன் மடிமீது வைத்துக் கொண்டு நூற் கட்டினைப் பிரித்து கவளிகையைப் பிரிப்பான் போன்று வணங்கி நிற்கும் அடியாரைத் தாம் விரும்பிய வந்த செயலைச் செய்ய இதுவே சமயம் என்றெண்ணி வாளினை எடுத்து தன் பணியை முடித்தனன். அந்நிலையிலும் நாயனார் பொய்யனான அவன் புனைந்து வந்த வேடத்தையே மெய் என்று எண்ணி வணங்கிக் கீழே விழுந்தார்.

விளக்கம்

இச்செயல் போன்றே 20ஆம் நூற்றாண்டில் நம் பாரதத் தலைநகர் புதுதில்லியில் நிகழ்வுற்ற ஒரு சம்பவத்தைக் காண்போம்.

மகாத்மா காந்தி தம் இருப்பிடத்திலிருந்து தன் பேத்திமார் துணையோடு பிரார்த்தனை மண்டபத்திற்குச் சற்றுத் தாமதமாக வருகின்றார். தொழுத கையுள்ளும் படையொடுங்கும் சிவால்வரை மறைத்து வைத்திருக்கும் கோட்சே என்பான் 'பாபுஜி நமஸ்தே! ஏன் தாமதம்?' என இந்தியில் வினவுகின்றான். 'தாமதம்' என்பதற்கு ஈண்டு என்ன பொருள் தெரியுமா? உங்களைக் கொலை செய்யப் போகின்றேன். அதனைத் தாமதப்படுத்தலாமா? என்பதன்றோ பொருள். புன்முறுவலோடு மகாத்மா 'மன்னிக்க' என்கின்றார். 'இனிச் செய்யும்' என மெய்ப் பொருள் விளம்பியது போல. மூன்று முறை பிஸ்டலை அக்கொடியோன் அழுத்த அகிம்சா மலைக் கீழே 'ராம் ராம்' எனக் கூறிச் சரிவதுடன் கட்ட அவனை 'ஒன்றும் செய்யாதீர்கள்' என அவரின் திருவாய் முணுமுணுத்தது.

மெய்ப்பொருளார் நிகழ்ச்சியும் மகாத்மாவின் நிகழ்வும் ஒன்றாய் இருக்கக் காண்கின்றோம்.

"கொலையுண்ட இவ்வேளையிலும் நாயனார் சிவவேடத்தின் மீது கொண்ட அன்பினின்றுஞ் சிறிதும் பிறழாதவராய்த் தம்மைக் குத்தியவனை மாற்றானெனக் கருதாது அவன் வேடத்தின் மீதே கருத்துக் கொண்டு 'மெய்த்தவ வேடமே மெய்ப் பொரு'ளெனத் தொழுதது நாயனாரின் உண்மை நிலையினைப் புலப்படுத்துகின்றது. 'வென்றார்' என்பது உன்னத்தக்கது. முத்தநாதன் நாயனாரை வென்றதாகக் கருதினான். உண்மையில் வென்றவர் மெய்ப் பொருள் நாயனாரேயாவர். முத்தநாதனை நாயனார் எதிர்த்து வீழ்த்திருப்பின் அவர் வென்றவராகார். இதுவே அஹிம்சா தர்மம் என்பது. அகிம்சை பிறர்க்குத் தீங்கு செய்யாமலிருப்பது மட்டுமன்று. அதனுடன் தமக்குப் பிறர் தீங்கு செய்யும்போது திருப்பித்

482

...பருந்த அப்பொழுதே,
...த்தன் என்பான் கணப்
...கையிலுள்ள வாளால்
...த்தப்பட்டு மிகுந்த
...டக்கரும் மெய்ப்
...கூறி தம் அறம்

...பொய்தவ
...துஞ்சும்
...இறைவன்
...பெற்றும்
...என்ற
...ழே
...வே

...உயிரினையே ஒப்பு...
பிச்சையுங் கொடுத்...
முண்டோ? அதுபற்...
முதலியாரவர்கள்.

தத்தா நமர். கல்...

'தத்தா நமரே!' ...
காப்பியம் பாடப் பு...
களைக் கண்டு கேட்டு...
அறியலாம்.

தறைப்படும் - த...

17. வேதனை எய்தி...
வேந்தராய்...
நாதனாம் தத்தன்...
தலையினா...
யாதுநான் செய்...
எம்பிரான் ...
மீதுஇடை விலக்...
கொண்டு...

பொ.உரை

[illegible] முத்தநாதனால் குத்தப்பட்டு துயருற்று பூமியில் விழுந்த மன்னன் [illegible] தத்தனைக் கொலை செய்ய அனுமதிக்காமல் தடுக்கப்பட்ட [illegible] தத்தனும் தலையால் மன்னனை வணங்கி அவரைத் தாங்கிக் [illegible] அடியவனாகிய யான் என்ன செய்ய வேண்டும் என [illegible] தாயவரை வேண்டிட 'என் தலைவராகிய சிவனாரின் [illegible] இவரை எவ்விதத் துன்பமுமின்றி அவர் தம் வழியில் எவரும் [illegible] முடியாதபடி நீயே துணையாகி அழைத்துச் சென்று போய் விடுவாய்' [illegible]

விளக்கம்

[illegible] கூடன் கொன்றான். அவனைக் கொல்ல தத்தன் முற்பட்டான்; [illegible] தடுத்து 'அக்கூட வேடதாரிக்குத் துணையாகி நீயே அவனை [illegible] ஏதமுமின்றி அவனை விட்டுவிட்டு வா' என்றான் என மாறனார் [illegible] எனில் அவர் சிவனடியார் மாட்டு வைத்திருந்த அன்பு, மரியாதை, [illegible] முதலானவை அறிந்து இறும்பூதெய்துகின்றோம்.

18. அத்திறம் அறிந்தார் எல்லாம்
அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக் கொல்லுவோம்
என்றுபுடை சூழ்ந்தபோது
தத்தனும் அவரையெல்லாம்
தடுத்து உடன் கொண்டு போவான்
இத்தவன் போகப் பெற்றது
இறைவனது ஆணை என்றான். 484

பொ.உரை

பொய்வேடம் தாங்கி வந்து 'நம் மன்னனைக் கொன்ற மாபாவியைக் கொல்லுவோம்!' என மக்கள் புடைசூழ்ந்து நின்றபோது அவர்கள் அனைவரையும் நோக்கித் தடுத்து 'இப்பொய்த் தவவேடத்தானை யாதொரு இடையூறுமின்றி அழைத்துச் சென்று அவனூரில் விட்டுவிட்டு வரவேண்டும் என்பது நம் மன்னன் ஆணை' என அறைந்தான்.

பொய்த்தவ வேடத்தானைக் கொல்ல வந்தவர் மன்னர் ஆணைகேட்டுத் திரும்பினர் எனில் மன்னனுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பினை அறிக.

19. அவ்வழி அவர்கள் எல்லாம்
அஞ்சியே அகல நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன்
திருநகர் கடந்து போந்து

கைவடி நெடுவாள் ஏந்தி
ஆள்இடை யாரும் சேரா
வெவ்விய நெறியோன் தன்னை
விட்டபின் மீண்டு போந்தான். 485

பொ.உரை

தத்தன் கூறிய மாற்றத்தைக் கேட்ட மக்கள் அவ்வளவில் அரசனின் ஆணைக்கு அஞ்சி நீங்கினார். தத்தனும் அவனுக்கு எவ்விதத் துன்பமும் வாராமல் கையில் கூர்மையான நீண்ட வாள் கொண்டு பாதுகாத்துப் பெருமை பொருந்திய திருக்கோவலூரைத் தாண்டிச் சென்று மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் (காட்டுப் பகுதியில்) கொடிய தீவினையாளனை அவனை விட்டபின் திரும்பி அரண்மனை அடைந்தான்.

20. மற்றவன் கொண்டுபோன
வஞ்சனை வேடத்தான் மேல்
செற்றவர் தம்மை நீக்கித்
தீதிலா நெறியின் விட்ட
சொல்திறம் காக்க வேண்டிச்
சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான்
கோமகன் குறிப்பில் நின்றான். 486

பொ.உரை

மன்னனின் மனவிருப்பத்தின்படி நடப்பவனாகிய தத்தன் அக்கொடியவனைக் கையில் கூர்மையான வாள் கொண்டு எவ்விதத் துயரமும் இன்றி அழைத்துச் சென்று சினம் கொண்டாரை விலக்கி குற்றமற்ற வழியில் நின்று மக்கள் இல்லா வனப் பகுதியில் விட்டுவந்த சிறந்த செய்தியை மன்னன் கேட்கும் பொருட்டு, சோர்ந்து சிறிது சிறிதாய் உயிர் நீங்கும் நிலையில் வலித்துத் தாங்கி வாழ்ந்திருக்கின்ற மன்னனிடையில் போய் நின்றான்.

வஞ்சக வேடத்தான் எவ்வித ஏதமுமின்றிப் போய்த் தன் ஊர் அடைந்த செய்தியைக் கேட்க மன்னன் தன் உயிர் போய்க் கொண்டிருக்கின்ற நிலையிலும் இருந்தான் என்பதால் அவனின் அன்பிற்கு ஈடு இணையுண்டோ?

21. சென்று அடி வணங்கி நின்று
செய்தவ வேடங் கொண்டு
வென்றவர்க்கு இடையூறு இன்றி
விட்டனன் என்று கூற

இன்று எனக்கு ஐயன் செய்தது
யார் செய்ய வல்லார் என்று
நின்றவன் தன்னை நோக்கி
நிறைபெரும் கருணை கூர்ந்தார். 487

பொ.உரை

தத்தன் அரசன் முன்புபோய் அவர் தம் திருவடிகளை வணங்கி நின்று 'வஞ்சனை செய்து வந்து கொடுஞ் செயல் செய்த தவவேடத்தானை எவ்வித இடையூறும் இன்றி விட்டு இவண் வந்துள்ளேன்' என்று மன்னன் முன்பு சாற்றிட அவரும் 'இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்' என எதிர்நின்ற தத்தனைப் பார்த்து மிகுந்த பெரும் கருணை செய்து

'இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்' என்பதோடு 'இன்று நீர் எனக்கு அருள்செய்தது இதுவேல்' (412) என இயற்பகையாரிடம் அவர் தம் துணைவியார் கூறியதுடன் ஒப்பிட்டு நோக்க.

ஐயன் - தத்தன்.

22. அரசியல் ஆயத்தார்க்கும்
அழிவுறும் காதலார்க்கும்
விரவிய செய்கை எல்லாம்
விளம்புவார் விதியினாலே
பரவிய திருநீற்று அன்பு
பாதுகாத்து உய்ப்பீர் என்று
புரவலர் மன்றுள் ஆடும்
பூங்கழல் சிந்தை செய்தார். 488

பொ.உரை

நாயனார், அரசியல் துறைகளில் தமக்கு உதவும் அமைச்சர் முதலானவர்களுக்கும், தம் பிரிவைக் குறித்து வருந்துகின்ற தம்மிடம் அன்பு கொண்டார்களுக்கும், தம் மனத்தில் பொருந்திய செயல்கள் யாவற்றையும் கூறத் தொடங்குவாராய் முறைப்படி, 'நான் வணங்கிப் போற்றி வந்த திருநீற்றினிடம் செலுத்த வேண்டிய அன்பினை இனியும் கெட்டு விடாமல் காப்பாற்றி குறைவின்றி நிலைபெற நடத்துவீர்களாக' எனக் கூறி பொன்னம்பலத்திலே ஆனந்தக் கூத்தியற்றும் பெருமானாகிய நடராசப் பெருமானின் திருவடிகளை மனத்தில் சிந்தை செய்தார்.

விளக்கம்

மெய்ப் பொருளார் சிவபதம் அடைந்தார் என்பதனை ஆசிரியர் 'மன்றுள் ஆடும் பூங்கழல் சிந்தை செய்தார்' என்றார் முன்னர் பொய்த்தவ வேடத்தான் வாளால் நாயனாரைக் குத்தினான் என்பதனைத் 'தான் நினைந்த அப்பரிசே செய்ய' என்றார். அமங்கலத்தைப் பெருமானார் தம் சொற்களால் கூறா அஞ்சுந் தன்மையர் என அறியலாம்.

திருநீற்றை மட்டும் குறிப்பிட்டாலும் அதனுடன் [illegible]
சிறப்பினையும் கொள்க

23. தொண்டனார்க்கு இமயப் பாவை
துணைவனார் அவர்முன் தம்மைக்
கண்டவாறு எதிரே நின்று
காட்சி தந்தருளி மிக்க
அண்ட வானவர்கட்கு எட்டா
அருட்கழல் நீழல் சேரக்
கொண்டு அவர் இடையறாமல்
கும்பிடும் கொள்கை ஈந்தார். 489

பொ.உரை

இமயமலையின் மகளாகிய உமாதேவியின் கணவராகிய சிவபெருமான் மெய்ப்பொருள் நாயனார் முன்னே தியானம் செய்திருந்தபோது தம்மை மனக்கண்ணால் வணங்கியவாறு [illegible] எதிரே இருந்து காட்சி தந்து சிறந்த மேலுலகில் வாழ்கின்ற விண்ணோர்க்கும் எட்டாத- கிட்டாத - அடியார்க்கு அருளிச் செய்கின்ற தம் திருவடிகளின் நிழலை எய்துமாறு ஏற்றுக் கொண்டு அவ்வடியார் இடைவிடாது தம்மை வணங்கிக் கொண்டிருக்கும் சிறந்த பேற்றினைக் கொடுத்தருளினார்.

இமயப்பாவை துணைவனார் - உமையின் தலைவராகிய சிவன்

24. இன்னுயிர் செகுக்கக் கண்டும்
எம்பிரான் அன்பர் என்றே
நன்னெறி காத்த சேதி
நாதனார் பெருமை தன்னில்
என்னுரை செய்தேனாக
இகல்விறல் மிண்டர் பொற்றாள்
சென்னி வைத்து அவர் முன்செய்த
திருத்தொண்டு செப்பல் உற்றேன். 490

பொ.உரை

முத்தநாதனாகிய பொய்த்தவ வேடத்தான் தன் இன்னுயிரை வாளால் குத்தக் கண்டும் அவன் எம்பிரான் அன்பரென்று கொலை [illegible] தடுத்து புனைந்த வேடமே மெய்த் திருவேடம் என்று நன்னெறி [illegible] வாழ்ந்த சேதிநாட்டு மன்னனாகிய நாயனாரது பெருமையை யான் [illegible] எடுத்துக் கூறினேன். ஒரு சிறிதே கூறினன். இனி வன் தொண்டுடைய [illegible] மிண்ட நாயனாரின் பொன்போன்ற திருவடிகளைத் தலைமேற் கொண்டு அவரின் திருத்தொண்டினைச் செப்பப் போகின்றேன் என உரை [illegible]

விதியின் முறையென் றருமறையோன்
  விளக்கு முறைமேட் டுமறுகத்தாப்
மதியின் மாண்மி வஞ்சனையின்
  மாயத் துறைந்தா ரெனவுறும்
பதியுட் பெருக்க வளநாட்டிற்
  பற்றா ரிவரென் றுரைக்குநன்
புதிய மொழியைத் தொல்லினைக்குப்
  புகழ்ந்தா னவையை மிகழ்ந்தானே. 94(1596)

(இ-ள்) அப்போது அபூஜஹி லென்பவன் உமறுகத்தா பாவைர் அற்பமதென்னும் பெயரையுடைய முகம்மதென்பவன் விளக்கிக் காட்டும் வார்த்தைகளைக் கேள்வியுற்று கடவுளால் நியமிக்கப்பட்ட விதியினது முறைமைக ளென்றுந் தமது அறிவும் உடலும் மயங்கப் பெற்று வஞ்சனையையுடைய மாயத்தின்கண் தங்கினாரென்று அந்தத் திருமக்கமா நகரத்திலும் மற்றும் தேசங்களிலும் அதிகரிக்கும் வண்ணம் வார்த்தைகளை நடாத்தி இந்த உமறுகத்தா பென்பவர் இனி நமது சத்துராதி யானவரென்று நூதனமாகிய சொற்களைப் பழைய தனது குடும்பத்திலுள்ளவர்களுக்குப் புகழ்ந்து கூறி நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை நிந்தித்தான்.

சரியுந் திரைமுத் தெறிந்திரைக்குஞ்
  சலதிக் குபிரி னிடையினெடு
விரியு மமுத மெனுங்கவிமா
  மேலோ ரொருமுப் பஃதுடன்மூன்
றரிய மகளி ரறுவருமு
  மரசே ரொருவ ரவணியினிற்
றெரியு மிலக்க மிந்நாற்பது
  பதின்மர் குடனுஞ் சிறந்திருந்தார். 95(1597)

(இ-ள்) சாயா நிற்கும் அலைகளினால் முத்துக்களை வீசி ஒலிக்கும் சமுத்திரமாகிய காபிர்களினிடை மத்தியில் விரிகின்ற அமுதமென்று சொல்லும் கலிமாவைப் பெற்ற மேன்மையை யுடையவர்களான முஸ்லிம்கள் முப்பத்து மூன்று பேர்களும் அருமையாகிய பெண்கள் ஆறு பேர்களும் உமறுகத்தாபென்று சொல்லும் இராஜரான ஒருவருமாகிய விளங்கிய இலக்கத்தை யுடைய இந்த நாற்பது பேர்களோடும் இப்பூமியின்கண் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் சிறப்புற்றிருந்தனர்.

உமறுகத்தாபியான் கொண்ட படலம் முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

இஃது

உடும்பு பேசிய படலம்

கலிவிருத்தம்

படியுறு முமறெனும் வள்ள லந்நபி
யடைதுயர் தீனிலைக் குரிய ராயபின்
நிடமுடைத் தவர்களாய்ச் சிந்தை யிற்பெரு
மடமை றாப்பெரு மகிழ்ச்சி யெய்தினார். 1(1598)

(இ-ள்) நமது நாயகம் நபியுள்ளநற்றமத்து செய்யிதுல் கவ்னைன் முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகி வசல்ல மவர்களோடு அழகான பொருந்தப் பெற்ற உமறு கத்தாபென்று சொல்லும் வள்ளலானவர்களும் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமைக்குச் சுதந்தரர்களான பின்னர், முஸ்லிம்க ளியாவர்களும் தைரியமுடையவர்களாய் மனசின்கண் கொண்ட மடமையானது அகலும் வண்ணம் பெரிய சந்தோஷத்தை யடைந்தனர்கள்.

செயிரறுந் தீனிலைக் குரிய செவ்விய
பயிரெனு வருங்கலி மாவைப் பண்பொடு
நயமுறப் பெருக்கிய நண்ப ரியாவரு
முயிரென முகம்மதை யுவந்து காமுற்றார். 2(1599)

(இ-ள்) அன்றியும், குற்றமற்ற தீனுல் இஸ்லாமென்னும் மார்க்க நிலைமைக்கு உரித்தான அழகிய பயிரைப் போன்று வந்த "லாயிலாஹ இல்லல்லாகு முகம்மதுர் றசூலுல்லாஹி" யென்று சொல்லும் கலிமாவைத் தகுதியுடன் நன்மையுறும் வண்ணம் மனசின்கண் பெருகச் செய்த நேசர்க ளெல்லாவர்களும் நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைத் தங்களின் ஜீவனைப் போல விரும்பி மோகமுற்றார்கள்.

உடலுயி ரெனவுந் துறைபு நாளினி
லடலபூ பக்கரு மலியுந் தெவ்வரைக்
கடிய வேற்கர வுமறுங் கன்னலிற்
மடறிகழ் மாலிகை யறபி மன்னரும். 3(1600)

(இ-ள்) அவ்வாறு சரீரத்தையும் ஆவியையும் போல விரும்பித் தங்கா நிற்கும் தினத்தில் வலிமையை யுடைய அபூபக்கர் சித்தீகு

நபிசல்லாகு அன்று அவர்களும் அலி நபிசல்லாகு அன்று அவர்களும் சந்திராதிகளின் மீது அபோபியா நிற்கும் வேலாயுதத்தைக் கொண்ட கைவையுடைய உமறுகத்தாபு நபிசல்லாகு அன்று அவர்களும் மதுவாறு நெடுகிநின்ற இதழ்கள் பிரகாசிக்கும் புஷ்பமாலை புனைந்த அறபி வேந்தர்களும்.

தோமகன் முகம்மது நபியுந் துணை
மாமதி சகப்புறத் தெய்தி மற்றொரு
தேமலர் பொழிலிடைத் தெரிய வைகினார்
காமரு மதியமுங் கனலு மென்னவே. 4(1601)

(இ-ள்) குற்றமானது நீங்கப் பெற்ற நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களும் தங்களைச் சூழ்ந்து வரும் வண்ணம் பெருமை பொருந்திய மதினாவையுடைய தங்கள் நகரமாகிய மக்கப் பதிக்கு வெளியில் அடைந்து வானளாவக் கொண்ட புஷ்பங்களை யுடைய ஒரு சோலையின்கண் அழகிய சந்திரனையும் நட்சத்திரங்களையும் போல விளங்கும் வண்ணம் தங்கி யிருந்தார்கள்.

செல்லிடும் குடைநபி செவ்வி காண்டலும்
கல்லொடு மரமும்புற் காறும் வாவிபு
மெல்லிய கிளைப்புள்ளும் விலங்கி னங்களு
மொல்லையுந் வணங்கித் துதிக்கும் சாதியும். 5(1602)

(இ-ள்) அப்போது மேகமே நிழலிடும் குடையை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் சீர் வழுவைப் பார்த்த மாத்திரத்தில் அங்குள்ள கற்களுடன் மரங்களும் புற்களையுடைய காடுகளும் தடாகங்களும் மெல்லிய சிறகுகளை யுடைய பட்சிகளும் மிருகக் கூட்டங்களும் விரைவில் சேர்ந்து திரியும் வனவளங்களும் காட்டின்கண் பார்த்து திரியும் சாதிகளும்.

தோற்றிய தெய்வமுந் தூலக்கை கேட்பதா
மாற்றுநறு மருதியின் வகைநு தன்னொடும்
போற்றலும் புகழ்ந்தாய் புகழ்ந்து பொங்கிய
ஏற்றமுறு நபியை முறைத்து நின்றவே. 6(1603)

(இ-ள்) கண்பார்வைக்குத் தெரியக் கூடியதான மற்ற எல்லாவகைகளும் விளங்கும் வண்ணம் காதுகளினாற் கேட்கும்படியாக மாற்றுதலில்லாத வேதவசனந்தோறும் போற்றுதற்கு அருமையான நபிகளினால் துதித்து அறிகரியா நிற்கும் அறிவினுடைமையைப் பொருந்தி மேலாகிய ''அஸ்ஸலாமு அலைக்கும்'' என்று சலாஞ் சொல்லி நின்றன.

காசைத் துற்றவா ரணங்க ளியானையுந்
தீமை செவியுறத் தேக்கிச் சிபெற
வாளவர் புகழ்ந்தர மக்க மாநபி
மீளரின் மனையகத் தேகி னாரரோ. 7(1604)

(இ-ள்) அப்போது மக்கமா நகரத்தை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் தீதுஇல்லாமெனறும் மார்க்கத்திற் குரியவர்களான முஸ்லிம்கள் அந்தக் காட்டின் கண் பொருந்திய காரணங்க ளெல்லாவற்றையும் தங்களின் காதுகளித் பொருந்தும் வண்ணம் நிறையும்படி கேட்டுச் சிறப்பைப் பெறவும், தேவர்களான மலாயிக்கத்துமார்கள் துதிக்கவும், குறைபாடற்ற தங்களின் வீட்டின் கண் போய்ச் சேர்ந்தார்கள்.

அன்னறயிற் பொழுதலை மகன்று பின்னைநாள்
வெற்றிவெங் கதிரவில் வீர சிவமைநுந்
சுற்றிட மெய்மெறி நாமங்க மானர்
மற்றொரு தலத்திடை வைகி னாரரோ. 8(1605)

(இ-ள்) அவ்வாறு பெருமை பொருந்திய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அன்றைய தினம் தங்களின் கூட்டத்தை நீக்கி மறுநாள் விருதுத்தையும் வெவ்விய பிரகாசத்தையுங் கொண்ட வேலாயுதத்தையுடைய வீரர்களான முஸ்லிம்களையவர்களும் தங்களை வளையும் வண்ணம் தங்களின் சிறந்தினது பிரகாசமானது ஒளிரும்படி வேறேயொரு தலத்தின் கண் போய்த் தங்கியிருந்தார்கள்.

நன்னறி யுடையவர் சூழ நந்நபி
யில்லிருந் தெழுந்தில விருப்ப மற்றொரு
வில்லினான் வளையினான் வேடன் கையினிற்
கல்லிய தடியொடுங் காணி லேகினான். 9(1606)

(இ-ள்) நல்ல அறிவையுடையவர்களான முஸ்லிம்கள் சூழும் வண்ணம் நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்கள் அவ்வாறு வீட்டின் கண்ணிருந் தெழும்பி இவ்விடத்தில் தங்கியிருக்க, கோதண்டத்தையும் வளையையுமுடையவனான வேறேயொரு வேடன் தனது கையில் பூமியைக் கல்லுகின்ற தடியுடனும் காட்டின் கண் சென்றான்.

கானகந் கந்தியுங் கல்லைத் தள்ளியு
மானினந் தடைபட வலைகள் வீசியுந்
தானவனை முறைமுறுந்திறுந தடவி நோக்கியு
மூன்புகித் திடுவதற் கொன்றுங் காண்கிலான். 10(1607)

(இ-ள்) அவ்விதம் சென்ற வேடனானவன் காட்டிலுள்ள மலைகளிலும் திரிந்தும் கற்களைத் தன்னிலும் மான் கூட்டங்கள் தங்கிடும் வண்ணம் வலைகளைக் கட்டியும் மலைகளினது குகைகளிலும் தடவிப் பார்த்தும் மாமிச முண்பதற்காக யாதொன்றும் கண்டிலன்.

அடவியிற் புகுந்தரும் பதுக்கை சுற்றிமேற்
புடையினின் முசலினை புகுதக் கண்டனன்
றொடைபட வளையமிசை சார்ந்து மேற்சிலை
புடைபடத் தாக்கித்தன் மார்த்திற் பற்றினான். 11(1608)

(இ-ள்) அதனால் அவன் சோலைகளில் நுழைந்து அரிய பாதைகளைச் சுற்றி ஒரு புடையின் கண் ஒருடும்பானது புகுதும் வண்ணம் பார்த்து அவ்வுடும்பைத் தடைபடும்படி வளையினிடத்தில் சார்ந்துப் புடையினது மேலேயுள்ள கல்லானது உடையும் வண்ணம் அடித்துத் தனது மார்போடும் பிடித்தான்.

வள்ளுகிர் குடும்பினை வலைக்குள் மாட்டினை
முள்ளுறை கவைமுப் புறம்பு நீக்கித
உள்ளமகிழ் வொடு முறையர் சூழ்தர
நள்ளுறை முகம்மது நபியை நோக்கினான். 12(1609)

(இ-ள்) அவ்விதம் பிடித்த கூரிய நகத்தையுடைய அந்த உடும்பை அவ்வேடனானவன் வலையினைக் கட்டித் தனது மனதிலுள்ள மகிழ்ச்சியோடும் நெருக்கமாகிய முட்கள் தங்கிய காடுகளையும் பாதைகளையுந் தள்ளி நடந்து தங்களின் உறவினர்களான முஸ்லிம்கள் வளையும் வண்ணம் நடுவில் தங்கிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களைக் கண்களினாற் பார்த்தான்.

மன்னிய வுறிகுரி னாட்டன் வையைய
தென்னிலவக் குறுஞ்செய விய்யது செவ்விலென
முன்னிய வேட்டுவன் மொழிய வாதித
னன்னிலைத் தூதிவர் நபியென் றோதினான். 13(1610)

(இ-ள்) அவ்வாறு பார்த்து இவர் பொருந்திய அறிவை யுடையவர்களான இவர்களின் நடுவில் தங்கினது என்ன காரணம்? அன்றியும், இவருக்கு இசைந்த தொழில் யாது? என்று நினைந்த அந்த வேடன் அங்கிருந்த அசுஹாபிமார்களிடத்தில் கேட்க அதற்கவர்கள் இவர்கள் யாவற்றிற்கும் முதன்மையான நல்வழுவாயவரு வந்த ஆயுளின் நன்மை பொருந்திய நிலைமையை யுடைய றசூலான நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமென்று சொன்னார்கள்.

மைமுகிற் கவிகைநன் னபிமுன் வந்துநின்
றெம்மறைக் குரியவர் நீவிர் செந்நெறி
செம்மையி னடத்துத றெரியச் செப்புமென்
நிம்மொழி யுறவேடு நுவனி சைத்தனன். 14(1611)

(இ-ள்) அதைக் கேட்ட அந்த அறமியாகிய வேடன் கறுத்த மேகக்குடையை யுடைய நன்மை பொருந்திய நாயகம் நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் முன்னர் வந்து நின்று கொண்டு நீவிர் எந்த வேதத்திற்கு உரித்தானவர்? அழகாய் நீர் நடாத்துவது எந்த மார்க்கம்? அவற்றை யான் தேரும் வண்ணம் சொல்லுமென்று இந்த வார்த்தைகளைக் கேட்டான்.

கூறிய வுறுமொழியைக் குறித்துக் காசினிக்
கீறிலில் வருநபி யான வாதிலை
யூறிய பொருட்புறுக் காபிரன் றோதிய
தேறுநன் மறையினைக் குற்ற செய்கியோய். 15(1612)

(இ-ள்) அவ்வாறு கேட்ட அந்த அறமியாகிய வேடனை நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் முனிவின்கண் மதித்து அழகையுடைய வேடனே! யான் இப் பூலோகத்திற்குக் கடைசியாக வந்த நபி. என்னை யல்லாமல் இனிமேல் இந்தப் பூமியின்கண் நபிமார்களுமில்லர். கரக்கா நின்ற பொருளையுடைய புறுக்கானுல் அலீமென்று சொல்லும் எனக்குற்ற நன்மை பொருந்திய வேதமானது உயர்வாகும்.

என்றுரை நின்றிக வறமி லாயினோர்
மின்னொளிர் மாளிகைச் சுவன மேவுவர்
பன்னிடும் மொழிபழு தென்னும் பாவியோர்
வன்னியின் குழியிடைக் கிடந்து மாழ்குவார். 16(1613)

(இ-ள்) அன்றியும், எனது வார்த்தைகளில் நின்று நீறல் இல்லாமென்றும் மார்க்கத்தி லானவர்கள் பிரபையானது ஒளிரா நிற்கும் மாளிகைகளை யுடைய சுவர்க்கலோகத்தைப் பொருந்துவார்கள். இந்த வார்த்தைகளைத் தெளிந்து குற்றமென்று சொல்லும் பாவிகள் அக்கினியினது குழிகளை யுடைய நரகத்தின் கண் கிடந்து மயங்குவார்கள்.

எதுநன் றெனமன மிசைந்தென் னாவினி
லோதிய நன்கலி மனைய யோதிநின்
பாதமந் துடைத்துநற் பதவி யெய்தென
வாதிதன் றூதுவ ரறைந்திட் டாரரோ. 17(1614)

(இ-ள்) ஆதலால் இதுவே நல்லதென்று உனது மனமானது பொருந்தி எனது நாவினால் சொல்லும் நன்மை தங்கிய

கலிமாவைச் சொல்லி உனது துரோகத்தை இல்லாமற் செய்து நல்ல பதவியை அடைவாயென்று யாவற்றிற்கு முதன்மையானவர் அல்லாஹு சுபுஹானஹு வத்த ஆலாவின் றசூலான நாயகம் நபிமுகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் சொன்னார்கள்.

தெரிதர நன்மொழி தெளித்த நந்நபி
மரைமலர்ச் செவ்விய வதன நோக்கிலும்
முரைமறுத் திலனெனக் குன்னமை யாவைத்
தரையினி லறிவெனச் சாட்சி வேண்டுமால். 18(1615)

(இ-ள்) அவ்வாறு நல்ல வார்த்தைகளைத் தெரியும் வண்ணம் தெளித்துச் சொன்ன நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களின் தாமரைமலர் போன்ற அழகிய முகத்தை அந்த வேடன் பார்த்து யான் தங்களுடைய வார்த்தைகளை மறுக்கவில்லை. எனக்கு இப்பூலோகத்தின்கண் தாங்கள் நபியென்று சொல்லும்படி மெய்யாக சாட்சி வேண்டுமென்று சொன்னான்.

வானிடை யுறுபிவில் வுரைமையைக் காட்டலுந்
தேனுறு மலர்ப்புயச் செவ்வி நன்னபி
வானிடை மண்ணிடைப் படைப்பின் மற்றதி
லீனமில் சரியுனக் கியைவ தேதென்றார். 19(1616)

(இ-ள்) அந்தக் காட்டின்கண் அறபியாகிய அவ்வேடன் இந்த வார்த்தைகளை வெளிப்படுத்தின மாத்திரத்தில் தேனானது பிரகாசியா நிற்கும் மலர்மாலையணிந்த தோள்களையுடைய அழகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் வானலோகத்தின் கண்ணும் பூலோகத்தின் கண்ணுமுள்ள படைப்பையுடையவைகளில் குறைபாடற்ற சாட்சியாக உனக்குப் பொருந்துவது யாதென்று கேட்டார்கள்.

கடும்பரற் கான்களிற் வலையி லூட்படு
முடும்பென நிடத்திலோன் றுரைது முன்னெறி
நிடும்பரு வாய்திறந் திவிதி னாவும்
னொடும்பனந் திடன்றறுந் துரைப்ப தில்லையே. 20(1617)

(இ-ள்) அவ்விதம் கேட்கவே வேடன் கடிய பரற்கற்களையுடைய காட்டின்கண் கவிழ்த்திய வலையினது அகத்தில் அகப்பட்ட ஒருடும்பானது எண்ணிடத்திலுள்ளது. அவ்வுடும்பு தனது கூர்மையாகிய பற்களைத் தரித்த பிளந்த வாயைத்திறந் திஷ்டமாக உங்களுடன் பேசினால் அதை யான் மறுத்துச் சொல்லுவது வேறே யாதொன்று மில்லையென்று சொன்னான்.

என்றுரை பகர்ந்தவ னிதயங் கூர்தர
நன்றெறு முறுவல்கொண் டினிய நந்நபி
குன்றினிற் றிரிதரு முடும்பைக் கூடிய
மன்றினில் விடுகவென் றுரைவ ழங்கினார். 21(1618)

(இ-ள்) என்று வார்த்தைகள் சொன்னவனான அந்த வேடனின் மனமானது கூரும் வண்ணம் இனிமையையுடைய நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் நல்லதென்று சிரித்து மலைகளின் திரியா நிற்கும் அந்த உடும்பைக் கூட்டமுற்ற இந்த சபையின்கண் விடுவாயாகவென்று ஆக்கியாபித்தார்கள்.

கானிடை திரிந்தறத் தவித்துக் காறனந்
தேனினி யிடிதுறில் பெயிதி னொய்திட
தானதன் மடியினை யாக்கி லோரைறந்
தேனவி முலங்கலோ னெய்னச் செப்பினான். 22(1619)

(இ-ள்) அவர்கள் அவ்விதம் ஆக்கியாபிக்கவே அந்த வேடனானவன் நறிய தேனானது நெகிழப் பெற்ற மலர் மாலையை யுடையவர்களே! யான் இந்த உடும்பைப் பிடிப்பதற்காய்க் காட்டின்கண் திரிந்து மிகவும் இளைத்து இரண்டு கால்களும் தளர்ச்சியடைந்தேன். இனி இதை விட்டால் இவ்வுடும்பு இலேசாய் நம்மிடத்திற் சேராது. ஆனதினால் அதை யான் எனது மடியின்மீது ஆகும்படி செய்தேனென்று சொல்லினான்.

எடுத்துன் றுடும்பையென் னிடத்தின் முன்னிதா
விடுத்திடி லகன்றிடா தெனவி எம்பலு
மடுத்துமென் மடியுறு முடும்பை வாங்கியங்
கடுத்தனன் விடுத்தன னறபி வேடனே. 23(1620)

(இ-ள்) அப்போது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் உனது உடும்பைத் தூக்கி எனது இடத்தின் முன்னாக விட்டால் அவ்வுடும்பானது அவ்விடத்தை விட்டும் நீங்கிச் செல்லாதென்று சொன்ன மாத்திரத்தில் அறபியாகிய அந்த வேடன் நிறைந்த மெல்லிய தனது மடியின்கண் புகா நிற்கும் அவ்வுடும்பை வாங்கி அந்நபிகள் பெருமானவர்களை நெருங்கிக் கீழே விட்டான்.

நெடுந்தலை யெடுத்துவா லிமிர்த்து முன்னொளைப்
படுந்தரத் துகிர்நிலம் பதிப்ப வூன்றியெர்
விடுந்தரை யகன்றிடா திறைவன் றூதெனாத்
திடந்தர மனத்தினிற் றெளிந்து நோக்கிற்றே. 24(1621)

(இ-ள்) அவ்வாறு விடவே அவ்வுடும்பானது நெடிய தனது தலையைத் தூக்கி வாலை நிமிரும்படி செய்து முள்ளைப்

பொருண்டாகிய தன்மையையுடைய நகங்களைப் பூமியின் கண் பதியும் வண்ணம் ஊன்றி எள்ளிடும் அளவுள்ள தலமாயினும் செல்லாது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களை பாலத்திருக்கும் இறைவனான ஆலாவின் தூதுவென்று வலிமை திரும்படி மனிசர்களை தேதிப் பார்த்தது.

ஆரமு தனையசொல் லரிய வாய்த்திறந்
தோர்மொழி நந்நபி யுடும்பைக் கூவலுஞ்
சீர்பெற விருவிழி திறந்து நோக்கிநின்
றீதரு நாவெடுத் தியம்பிற் றன்றரோ. 25(1622)

(இ-ள்) அவ்விதம் பார்க்கவே நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் நிறைந்த தேவாமிர்தத்தைப் போலும் வார்த்தைகளையுடைய அருமையான தங்களின் வாயைத் திறந்து ஒப்பற்ற வார்த்தையாக அந்த உடும்பைக் கூப்பிட்ட மாத்திரத்தில் அவ்வுடும்பானது கீர்த்தி பெறும் வண்ணம் தனது இரண்டு கண்களையும் திறந்து நின்று அந்நபிகள் பெருமானவர்களைப் பார்த்துப் பிளவையுடைய நாவைத் தூக்கி பதில் பேசிற்று.

இகம்பர மெனவரு மிருமைக் குண்மையா
யுகம்பல வுதிக்குமுன் னுதித்துப் பின்னுதித்
தகம்பயி லாரணத் துறைந்து செப்பரும்
சகம்புகழ்ந் திடவருந் தக்க நீதியோய். 26(1623)

(இ-ள்) இம்மை மறுமையென்று சொல்லும் வண்ணம் வாரா நிற்கும் இரண்டிற்கும் சத்தியமாகப் பலயுகங்களும் தோற்றமாகும் முன்னர்த் தோற்றமாகிய நபிமார்களுக்கெல்லாம் பின்னர் இவ்வுலகத்தின் கண் அவதரித்து மனமானது பழகா நிற்கும் வேதங்களில் தங்கிச் சொல்லா நிற்கும் வானம், பூமி, பாதாளமாகிய மூன்று லோகங்களும் துதித்திடும் வண்ணம் வந்த தகுதியான நீதியை யுடையவர்களே!

அண்டர்கள் பரவுநும் மடியை நாடொறுந்
தெண்டனிட் டிருவிழி சிரசின் மீதுறக்
கொண்டசிற் றடிமையே னுய்யக் கொண்டுவாய்
விண்டெனை விளித்தவை விளம்பு கென்னவே. 27(1624)

(இ-ள்) தேவர்களான மலாயிக்கத்துமார்கள் வணங்கா நிற்கும் நுங்களின் பாதங்களைப் பிரதி தினமும் வணங்கி இரண்டு கண்களிலும் தலையின் மீதும் பொருந்தும் வண்ணம் பற்றிய சிறிய அடிமையான யான் ஈடேறும்படி கொண்டு தங்களின் வாயைத்

திறந்து என்னைக் கூப்பிட்ட சமாசாரங்களைச் சொல்லுங்களென்று கேட்க.

தேறிய மொழியினை செவியிற் சார்தலு
மாறிலா தியாரைநீ வணங்கு கின்றனை
வேறற வுரையென விளங்கு நந்நபி
கூறலு முசலினை மறுத்துங் கூறுமால். 28(1625)

(இ-ள்) தெளிவையுற்ற இந்த வார்த்தைகள் காதுகளிற் பொருந்திய மாத்திரத்தில் விளங்கா நிற்கும் நமது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் நீ மாறாது யாரை வணங்குகின்றாய்? அதை வேற்றுமையான தற்றிடும் வண்ணம் சொல்லென்று கேட்டவளவில் அவ்வுடும்பானது மறுத்துஞ் சொல்லும்.

மருமலி வள்ளலியான் வணங்கு நாயக
னொருவனவ் வோமொழி யுயர்சிங் காசனம்
பொருவரும் வானிலா சாங்கம் பூமியிற்
றெரிதருங் கிருபையோ செம்பொ னாட்டினில். 29(1626)

(இ-ள்) கஸ்தூரி வாசனை மிகுந்த காத்திரத்தையுடைய வள்ளலானவர்களே நான் வணங்குகின்ற நாயகனானவன் ஏகன். அவனுடைய அழகிய மேலான சிங்காசனமானது ஒப்பற்ற வானலோகத்தில், இராஜாங்கம் பூமியில், தோற்றா நிற்கும் கருணை செவந்த பொன்னாலான சொர்க்க லோகத்தில்.

நீதிக வற்றவன் சினந்து செய்யுமவ்
வேதனை நரகமென் றெரியும் வீட்டினிற்
பேதமி லன்னதோர் பெரிய வன்றனை
யோதியான் வணங்குவ துண்மை யென்றதே. 30(1627)

(இ-ள்) இளைமையும் புகைமையு மற்று அவன் கோபித்துச் செய்கின்ற அந்த வேதனையானது நரகலோகமென்று சொல்லிப் பற்றா நிற்கும் வீட்டில் மாறுபாடற்ற அவ்வித ஒப்பில்லாத பெரியவனான ஏகத்துவமுடைய ஆலாவைத் துதித்து நான் வணங்குவது சத்தியமென்று சொல்லிற்று.

அறத்தொடு முறைத்தனை யென்னை யாரெனக்
குறித்தனை யெனநபி கூறக் கேட்டலுஞ்
சிறந்தருள் ளெயிற்றவெண் ணிறந்த செம்முனை
மிறுத்தறா லிரட்டைநா வெடுத்தி யம்புமால். 31(1628)

(இ-ள்) அப்போது நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் அவ்வுடும்பை நீ தருமத்தோடும் சொன்னாய். ஆனால் என்னை யாரென்று மதித்தாயென்று

Scanned by TapScanner

சொன்னதுபோல் கேட்ட மாத்திரத்தில் சிறந்த முட்போன்ற பற்களையுடைய வெள்ளிய நிறமும் செறிந்த ஒளியும் தங்கிய பற்றின் அளவையொத்த தனது இரட்டை நாவுகளைத் தூக்கிச் சொன்னதும்.

பரவையின் அலைமகளை பருதி மதியை
மூவிருகும் வெளியினிலி தினமா வகுத்தமைத்து
வெளியை முதலையன் செல்வித் திறமா
விருத்தமை தடிகளி அலிகாங் கேண்மையை. 32(1629)

(இ-ள்) சமுத்திரமும் ஆகாயமும் பூலோகமும் மலைகளும் சூரியனும் சந்திரனும் உதித்தான தங்களின் ஒளியிருள்ளன. அன்றியும், சத்தியமாய் விளங்கும் வண்ணம் யாவற்றிற்கும் முதன்மையையான நல்ல நலாவறுவத்த ஆலாவின் அழகிய தூதனாய்ப் பெரிய இத்தப் பூமிலோகத்தினது நபிமார்களில் பிரகாசியா நிற்கும் மேன்மையமை.

மதியினில் வருமதி விளைநும் வாக்கினிற்
அறிய மாக்கமே மார்க்கம் கோறதைக்
கேள்வினர் சுவர்க்கமே சேர்வர் தீதெண
வேறுரைத் தவரவர் நரகின் வீழ்வரால். 33(1630)

(இ-ள்) கடைசியில் வந்த நபியானவர்கள் இப்பூமியின்கண் தங்களுடைய வாக்கினாற் சொல்லிய மார்க்கமே மார்க்கம், அதைக் குற்றமறும் வண்ணம் தெரிந்தவர்கள் சுவர்க்கலோகத்தைச் சேருவார்கள். குற்றமென்று வேறுபாடாய்க் கூறினவர்களான அவர்கள் நரகலோகத்தின்கண் விழுவார்கள்.

இனிதினும் பெயர்க்கலி மாவை பெண்ணொடும்
வனமுறை யஃறிணை வாழ்த்து கின்றது
தனியுற முன்னைமறுன் னமியு நீரலாற்
பிறையைவில் லில்லைவென வுடும்பு பேசிற்றே. 34(1631)

(இ-ள்) இப்படியாய்த் தங்களின் திருநாமத்தையுடைய கலிமாவை பெண்ணுடன் காட்டிலிருக்கும் தங்கிய அஃறிணைச் சாதிகள் துதிக்கின்றன. சிறந்த கீர்த்தியையுடைய மெய்யான தன்மை பொருந்திய நபியும் நீங்களே யல்லாமல் இவ்வுலகத்தின் கண் வேறே நபிமார்களில்லை யென்று அந்த உடும்பானது சொல்லிற்று.

உடும்பிவை புகழ்ந்தது முறைந்து தன்மனத்
திடும்பினைத் தவிர்த்தருளின் றுறவி யென்பவன்
இடும்புற மொழியுறும் குபிரி னாற்றினம்
படும்பவந் தவிர்கெனாப் பாதம் பற்றினான். 35(1632)

(இ-ள்) அந்த உடும்பானது இந்த சமாசாரங்களைச் சொன்ன மாத்திரத்தில் அவ்வாறபியாகிய வேடனென்று சொல்லப்பட்டவன் மனதின்கண் விருப்பமடைந்து தனது துன்பங்களை யொழிந்து நின்று எளிமையையுடையவனாய யாதும் எனது குபிர்புறம் குபிர் மார்க்கத்தினால் பிறந்த இழிவும் படா நிற்கும் பாவத்தை யொழித்தருளுமென்று சொல்லி நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் பாதங்களைப் பிடித்தான்.

வண்ணவொள் புயநபி பாதம் வைத்தனை
கண்ணினிற் பதித்ததங் கனிய முத்தமிட்
டெண்ணில வுவகையுற் றெவரும் போற்றிட
புண்ணியக் கிழந் தருங்கலி மாவை யோதினான். 36(1633)

(இ-ள்) அழகிய பிரகாசத்தைக் கொண்ட தோள்களையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் பாதங்களில் அவ்வாறு வைத்த கைகளைக் கண்களில் பதியும்படி செய்து மனமானது கனியும் வண்ணம் முத்தமிட்டுக் கணக்கில்லாத மகிழ்ச்சி யடைந்து யாவர்களும் துதிக்கும்படி இருதயம் தெளிவுப் பெற்ற அருமையான கலிமாவைத் தமது வாயினால் ஓதினான்.

புதியவ னுரைக்கலி மாவின் பொற்புறு
மொழியுடன் வருமுறை யொழுகி மாமறை
விதிமுறைத் தொழுகையு மேவி மேதையின்
முதியவ னிவனென முஃமி னாயினான். 37(1634)

(இ-ள்) அவ்விதம் ஓதிய அவர் புதிய ஆலத்தையுடையவனான நல்ல ஜுவாலைபொருந்த ஆலாவின் நபியாகிய நருல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் கலிமாவினது அழகானதுறும் வண்ணம் உறுதியோடும் வரா நிற்கும் முறைமைகளில் நடந்து மகத்தான விதியினது ஒழுக்குகளையுடைய தொழுகையையும் விரும்பி இவர் அறிவினது முதியவரென்று சொல்லும் வண்ணம் முஃமின் மாயினார்.

உனைப்பிடித் தடர்ந்தன னுனது செய்கையா
லெனைப்பிடித் தடர்பவ மின்று போக்கினோன்
மனைத்துட வனைசெல்வ னுடும்பை வாழ்த்திவான்
பனைத்துடக் கரக்களி றனைய பண்பினான். 38(1635)

(இ-ள்) அன்றியும், பனைமரத்தை யொத்த பெரிய துதிக்கையைக் கொண்ட யானையைப் போன்ற வலிமையையுடையவரான அவர் அந்த உடும்பை யான் உன்னை நெருங்கிப் பிடித்தேன். உனது செய்கையினால் என்னைப் பிடித்து நெருங்கிய

...ங்களை இவ்வுலகத்திலும் போக்கடித்தேன். ஆதலால் உனது ...டைய பெரிய வலைமயின்கண் போவாயாக வென்று சொல்லி ஆசீர்வதித்தார்.

உறைதரும் குழுவின குலம நோக்கித்தன்
...றுநெறி முகமல ரதனை நோக்கியெம்
...றைதரு பங்கய மதனை நோக்கியின்
...நிறைதரு மகிழ்ச்சியிற் றுடும்பு நின்றதே. 39(1636)

(இ-ள்) அப்போது அந்த உடும்பானது அங்கு தங்கிய ...ட்டத்தார்களான அசுஹாபிமார்கள் மகிழும் வண்ணம் அவர்களைப் பார்த்து தனது அறபியினது முகமாகிய தாமரைப் புஷ்பத்தைப் பார்த்து சத்திய வேதத்தையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம அவர்களின் முண்டக மலர்போன்ற முகத்தைப் பார்த்துப் பின்னர் பூரணப்பட்ட சந்தோஷத்தைப் பெற்று நின்றது.

அருடமுய நபிதிரு மதுர வாய்திறந்
திருப்பிடத் தேகென வுடும்புக் கின்புற
வுரைப்பது கேட்டுளங் களிந்து கானிடை
விருப்பொடும் போயது விலங்கின் சாதியே. 40(1637)

(இ-ள்) அவ்விதம் நிற்கவே, வாசனையைக் கொண்ட தோள்களையுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம அவர்கள் தங்களின் தெய்வீகமுற்ற இனிமையை யுடைய வாயைத் திறந்து அந்த உடும்பை நீ உனது இருப்பிடத்திற்குச் செல்லென்று மகிழ்ச்சி பொருந்தும் வண்ணம் சொன்னதை விலங்கின் இனமாகிய அந்த வுடும்பானது தனது ...துகளினாற் கேள்வியுற்று மனமானது களிப்பப் பெற்று விருப்பத்தோடும் காட்டின்கண் சென்றது.

உடும்புபேசிய படலம் முற்றிற்று.

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்

இ-து

உத்துபாவந்த படலம்

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

அடவியினி லுடும்பகல அறபிவே
டனுமதியுள் ளகத்திற் றேக்கிப்
புடையகலா திருப்போருந் தோழருட
னருமறையும் புகழ்ந்து போற்ற
மடலவிழ்மைம் குவளைநெறி மடுக்குழு
நீர்புரிசை மக்க வீதி
யிடமெனுற நடுவுறைய நிறைமதிய
நிகர்த்திடவந் துறைந்தா ரன்றே. 1(1638)

(இ-ள்) நபிகள் பெருமானவர்களின் சந்நிதியிலிருந்த அந்த உடும்பானது காட்டின்கண் நீங்கிச் செல்ல அறபியாகிய இல்லவாமான வேடரும் மனத்தினகம் அறிவானதை நிறையும்படி செய்து பக்கம் விட்டு நீங்காத நிழலைப் போன்ற தோழர்களான அசுஹாபிமார்களுடன் அரும்மறையென்னும் திருநாமத்தையுடைய நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம அவர்களையும் துதித்து வணங்கும் வண்ணம் அவர்கள் இதழ்களானவை நெகிழ்ந்த பசிய குவளைப் புஷ்பங்கள் நெருங்கிய தடாகங்கள் வளையப் பெற்ற நீண்ட கோட்டை மதிலையுடைய திருமக்கமா நகரத்தின்கண் நட்சத்திரக் கூட்டங்களையும் அவற்றின் மத்தியில் தங்கா நிற்கும் பூரணச் சந்திரனையும் ஒப்பாகும்படி வந்து தங்கியிருந்தார்கள்.

திரைக்கடலி னெழுந்தெழுந்த மதிக்கதிர்போன்
முகம்மதுநன் செழுந்தீன் செய்வி
நிறைத்தெழுந்த பயிர்போலத் தழைத்தோங்க
நிலைநிறுத்தி நிகழுங் காலை
முறைக்கடங்கா வெகுளிபொங்கு மனத்தினராய்க்
குபிர்த்தலைவ ரொருங்கு கூடி
யறைந்திடத் திறைத் தொகுத்தெடுக்க வரிப்பதென்னச்
சிலவசனம் யாக்கின் றாரால். 2(1639)

(இ-ள்) அலைகளையுடைய சமுத்திரத்தின் மத்தியில் உதயமான சந்திரனின் கிரணங்களை நிகர்த்த நாயகம் நபிமுகம்மது

3. வளன் சனித்த படலம்

தாவீது மன்னன் மரபில் பிறந்த காப்பியத் தலைவராகிய வளன் என்னும் சூசை பிறந்த வரலாற்றைக் கூறும் பகுதி.

தாவீது மன்னன்

167. அன்னமா திருநகர் அகத்து உடற்குயிர்
என்னமா தாவிதன் இனிதில் வீற்றிருந்து
ஒன்னலார் வெருவுற உவந்து பாவலர்
சொன்னபா நிகருமேல் துளங்கி னான்அரோ. 1

அத்தன்மையான சிறப்புப் பொருந்திய எருசலேம் நகரத்தில், உடலுக்கு உயிர்போன்று மேன்மையுடைய தாவீது, இனிமையுடன் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் பகைவர் அச்சம் கொள்ளவும், கவிஞர்கள் புகழ்ந்து பாடவும், அப்பாடல் நிகருக்கு மேலாகச் சிறந்து விளங்கினான்.

அன்ன-அத்தகைய. மாதிரு-மிகச்சிறந்த. ஒன்னலார்-பகைவர். வெருவுற-அச்சம்கொள்ள. அரோ-அசைநிலை.

168. அருளொடு வீங்கிய அகத்தி னான்துளி
மருளொடு வீங்கிய மழைக்கை யான்மலர்ச்
சுருளொடு வீங்கிய தொடையல் மார்பினான்
பொருளொடு வீங்கிய பொறைப்பு யத்தினான். 2

தாவீது மன்னன் மக்கள் மீது மிகுந்த அருள் உள்ளம் கொண்டவன். நீர்த்துளிகள் மிகுதியாக நிறைந்த மேகம் பொழியும் மழையைப் போலப் பயனெதிர் பாராது வழங்கும் கையை உடையவன். மலர்ச் சுருள்களால் மிகுதியாகக் கட்டிய மாலையை அணிந்த மார்பினையுடையவன். செல்வம் நிறைந்த மலைபோல் திரண்ட தோள்களை உடையவன்.

வீங்கிய-மிகுதியான. தொடையல்-மாலை. பொறை-மலை.

169. ஒளிதவழ் அசனியை உமிழ்ந்த வில்லினான்
அளிதவழ் நிழல்செயும் அருள்கு டையினான்

வெளிதவழ் நவமணி விழுங்கும் தேரினான்
களி தவழ் மதம் பொழி களிற்றின் ஆண்மையான். 3

தாவீது மின்னலின் ஒளிபொருந்திய இடியை அம்பாக விடும் வில்லினையுடையவன். இரக்கம் பொருந்திய பாதுகாவல் என்னும் நிழலை மக்களுக்குத்தரும் குடையை உடையவன். ஒளிபொருந்திய ஒன்பது வகையான மணிகள் பதித்த தேரினையுடையவன். அகந்தை பொருந்திய மதநீர் பொழியும் ஆண்யானை போன்ற வீரம் உடையவன்.

அசனி-இடி. அளி-இரக்கம். வெளி-ஒளி. விழுங்கும்-பதிக்கும். களி-அகந்தை. களிறு-யானை.

170. மொய்ம்முனை பின்றிலா முரண்கொடு ஏறெனா
மெய்ம்முனை பொய்யென வெருவொன் னாரிவன்
கைம்முனை நிற்கிலா கலங்கிப் போற்றும் போர்
செய்ம்முனை செயும்செயும் சிங்க வாகையான். 4

போர்க்களத்தில் பின் வாங்குதல் இல்லாமல் வலிமை கொண்டு ஆண்சிங்கம் என்று சொல்லுமாறு காணப்பட்டு உண்மையின் முன் பொய் நில்லாமை போன்று, அச்சம் கொள்ளும் பகைவர், இவன் கைவலிமைக்கு முன் நிற்க முடியாமல் கலங்கி வணங்கும் வகையில் போர் செய்யும் முன்னரே வெற்றி கொள்ளும் சிங்கம் வரைந்த வெற்றிக்கொடியை உடையவன்.

மொய்-போர். பின்று-பின் வாங்குதல். வெருவு-அஞ்சும். ஒன்னார்-பகைவர். வாகை-வெற்றி.

171. வேல் செயும் போரினால் வெல்லப்ப டாத்தனைச்
சால்செயும் தவத்தினால் வென்ற தன்மையான்,
சேல்செயும் புணரிசூழ் செகத்தில் நின்றொளி
மேல் செயும் வானவர் விழைந்த பண்மையான். 5

தாவீது வேலைக்கொண்டு செய்யும் போரினால் எவராலும் வெற்றி கொள்ள முடியாதவன். மிகுதியாகச் செய்யும் தவத்தினால் தன்னையே வென்ற தன்மையுடையவன். மீன்களையுடைய கடல் சூழ்ந்த உலகில் தான் இருந்தாலும் மேலே ஒளியைப் பொழியும் விண்ணவர் விரும்பும் தன்மையுடையவன்.

சால்-மிகுதி. சேல்-மீன். புணரி-கடல். செகம்-உலகம். விழைந்த-விரும்பிய.

172. நீதிநல் முறையெலாம் நிறைந்த நீள்நலம்
ஆதிநன் மறையிவை அனைத்தும் மேம்பட
கோதில்நன் கூறுதவிசெய் தொழுகொம்பு ஆகிவான்
ஏதில்நல் முறையிவன் இசைந்த மாட்சியான். 6

நன்மை தரும் அறமுறை எல்லாம் நிறைந்த நீண்ட நலமும், ஆதி இறைவனின் இருமறையும் ஆகிய இவை எல்லாம் மேலே செல்லுவதற்குக் குற்றமில்லாத நல்ல உதவி செய்யும் தொழு கொம்பு ...ய்ந்து அவ்வாறாகி விண்ணகத்திற்கு உரிய குறையில்லாத நன்மை தரும் முறைகள் எல்லாம் இவ்வுலகில் அடைந்த மாண்பினை உடையவன்.

கோது-குற்றம். தொழுகொம்பு-பற்றுகோடு. இவண்-இவ்வுலகில். இசைந்த-அடைந்த.

173. கோல்நலம் கோடலா நிறுவிக் கூர்த்தலால்
நூல்நலம் பொருள்நலம் அறத்தின் நுண்நலம்
தேன்நலம் இனிதினில் திளைந்து நாடெலாம்
மீன்நலம் பயின்றவான் வியப்ப வாழ்ந்ததே. 7

செங்கோலின் நன்மை தவறாத முறையில் நிலை நிறுத்திச் சிறப்புற்றதால் நூலால் உண்டாகும் கல்வி நன்மையும், செல்வமும், அறத்தின் நுட்பமான நன்மையும் தேன் போன்ற இன்பம், இனிமை நிறைந்து நாடு முழுவதும் விண்மீன்கள் நிறைந்த வானுலகம் வியக்குமாறு வாழ்ந்தது.

கோல்-செங்கோல். நிறுவி-நிலை நிறுத்தி. கூர்த்தல்- சிறப்பு... நுண்-நுட்பம். திளைந்து-நிறைந்து. மீன்-விண்மீன்.

...கை செய்வார்க்கு இடியெனப் படிந்து போற்றிய
...கைசெய்வார்க்கு அமுதென நாமத் தன்மையான்
...கைசெய்வார்க்கு இளவலாய் நடத்தும் வேலிலான்
...கை செய்வான் ஆண்மையை விளம்பல் நன்றரோ. 8

...டன் பகைகொள்ளுகின்றவர்களுக்கு இடியைப் ... தன் கால்களில் விழுந்து வணங்கி மேன்மைசெய்பவர் ...அமுதம் போன்றும், அச்சம் தரும் தன்மையுடையவன். ...ளையவனாய் இருந்தபோது தன்னை ஏளனம் செய்ப...ர்களுக்குத் தன்கையில் போர் செய்வதற்குரிய வேல் ...ர். துன்பம் செய்வான். இத்தன்மை பொருந்தியவனின் ...த்துச்சொல்லுதல் நன்மையாகும். அரோ-அசைநிலை.

175...

திரும...
என்ற மன...
பிணித்தைய...
மறை பெய...
செய்வதற்கா...

முகில்-மேக...

176. வேலி யால...
மாலி யால்...
ஆலி யால்...
கோலி யாற்...

முகிலின் மேன்மை...
எருசலேம் திருநகர் மு...
பரப்பிய வானைத் ...
உள்ளே கொண்ட மழை...
மேகத்தைப் போன்று ...
கோலியாத்து என்றும் ...

வேலி-மதிலரண், ... இடையே. ஆலி-மழைநீர். ...
காணப்பட்ட. இராக்கதன்-அரக்...

177. துளிசி றைச்செயும் முகில்...
ஒளிசி றைச்செயும் ஒருகரும்...
வெளிசி றைச்செயும் வியனிரு...
களிசி றைச்செயும் கதங்கொடு...

மழைநீர்த்துளியைத் தன்னிடத்தே ...
மேகம், வந்து தங்கும் இரண்டு மலை...
ஒளியை மூடிமறைக்கும் ஒரு கரு...
சொல்லத்தக்க வகையில், வானவெளியை...
இருபுயங்களுக்கு மேல் அமைந்துள்ள...

களிப்பையெல்லாம் அடக்கக்கூடிய சினத்தைக் காட்டிக் கொண்டு அச்சத்தை உண்டாக்கும் வகையில் காணப்படும்.

முகில்-மேகம். பருவதம்- மலை. வியன்-பெரிய. சிரம்-தலை. கதம்-சினம். வெரு-அச்சம்.

178. நீண்ட வாள்புடை நெருங்கியே படர்கரு முகில்போல்
மாண்ட தோள்வியன் வட்டமே பொறுத்துவெஞ் சுடரைத்
தூண்டல் ஆமெனக் கனித்ததீன் சுட்டிகை தாங்கி
ஈண்டு அனலழல் விழிவழி கிளப்பவிட்டு எதிர்த்தான். 12

நீண்ட வாளை இடையில் ஒருபக்கத்தில் தொங்கவிட்டு, வலிமை வாய்ந்த சிறந்த தோள்மீது படர்ந்த கருமையான மேகத்தைப் போல் படர்ந்த கேடயத்தைச் சுமந்து, கதிரவனைத் தாண்டவும் முடியும் என்று கூறும் வண்ணம் சினம் கொண்டு, நீண்ட ஈட்டியைக் கையில் பிடித்து, இழித்துக்கொண்டு பரவும் நெருப்பைக் கண்களின் வழியே வெளிப்படுத்திப் போரை எதிர்கொண்டான்.

புடை-பக்கம். மாண்ட-சிறந்த. வெஞ்சுடர்-வெம்மையான கதிரவன். ஈண்டு-இழித்து. அழல்-நெருப்பு.

179. பெருக்கு வீங்கிய பெரும்புனல் அலைசுருட்டு அன்ன
எருக்கு வீங்கிய இழிவுஉரு நெஞ்சிடை அடங்காச்
செருக்கு வீங்கிய இராக்கதன் எரியெழச் சினந்து
தருக்கு வீங்கிய சலவுரை இடியென இடிப்பான். 13

வெள்ளப் பெருக்கால் மிகுந்த தண்ணீரையுடைய ஆற்றில் உண்டாகும் அலையின் சுழற்சி போல, எருக்கம்பூ மாலை, மிகுந்த இழிவைப் பொழியும் மனதில், குறையாத அகந்தை மிகுந்த அரக்கன் கண்களில் தீப்பொறி தோன்றுமாறு வெகுண்டு கர்வம் மிகுந்த வார்த்தைகளை இடியைப் போல முழங்கி நெருங்கிச் சொல்லுவான்.

பெருக்கு-வெள்ளம். வீங்கிய-மிகுந்த. புனல்-தண்ணீர். செருக்கு-கர்வம்.

180. கூர்ந்த போர்செயக் கூடினர்க்கு ஒருவன் வந்து எய்திச்
சீர்ந்த நாளவன் சிறந்தபோர் தனித்தனித் தாக்கத்
தோர்ந்த பாங்கினர் தொழும்பர் என்று ஆகுவர் என்னா
ஆர்த்த ஒகையான் நகைத்து, இகழ்வு அறைந்து அறைந்து
அழைப்பான். 14

"மிகுந்த போர் செய்வதற்காகக் கூடியவர்களுள் பக்கத்துக்கு ஒருவன் முன்வந்து, நெருங்கிச் சிறப்பான நாளும், அவனும்

தனித்தனியாக நின்று போர் செய்ய, எங்களுள் தோற்றவன் பக்கத்தார், வென்றவன் பக்கத்தார்க்கு அடிமைகள் என்று ஆவார்கள்" என்று ஆரவார மகிழ்ச்சியோக ஏளனமாக நகைத்து, இழிவாகக் கூறி பலமுறை அழைப்பான்.

கூர்ந்த-மிகுந்த. எய்தி-அடைந்து. பாங்கினர்-பக்கத்தவர். தொழும்பர்-அடிமைகள். ஆர்த்த-ஆரவாரம் செய்த. ஒகை-மகிழ்ச்சி அறைந்து-அறைகுவன்.

181. பெரிய குன்றமோ? பேயதோ? பூதமோ? ஏதோ
உரியது ஒன்றிலா உருவினைக் கண்டுளி வெருவிக்
கரிய விண்ணிடி கதத்த மின் கொடுவிடுத்து அன்ன
அரிய கோலியாத்து அறைந்த சொல் கேட்டனர் மருண்டார். 15

கோலியாத்தின் வடிவம் பெரிய மலையோ? பேயோ? பூதமோ? வேறு யாதோ? இவ்வாறு இதுதான் என்பதற்கு ஒன்றும் இல்லாமல், அந்த உருவத்தினை இசரவேலர் கண்டபோது, அச்சம் கொண்டனர். கருமையான மேகம் ஒன்று விண்ணில் சினம் மிகுந்த மின்னலோடு இடியை விடுத்தது போல, கொடிய கோலியாத்து, அறைகூவிக் கூறிய வார்த்தைகளைக் கேட்டு அஞ்சி மயங்கினர்.

கண்டுளி-கண்டபோது. வெருவி-அஞ்சி. கதத்த-சினந்த. அறைந்த-கூறிய. மருண்டார்-மயங்கினர்.

கோலியாத்து, நல்ல இசரவேலரின் பெரியபடை நடுக்கம் கொண்டு அச்சமுற்ற தன்மையால், மலையின் உயர்ந்த சிகரம் ஒத்து இருந்தான். அவனுடைய அகந்தை மேலும் வளர்ந்து சினம் கொண்டு நெடிய பல நாட்களாக இசரவேலர் வணங்கும் இறைவனைப் பகைத்தான். இகழ்ந்து வார்த்தைகளைக் கூறி, நீண்ட பகையைத் தொடர்ந்தான். எவரையும் ஏளனமாக எள்ளிச் சிரிப்பான்.

வெருவிய-அஞ்சிய. கல்-மலை. குவடு-சிகரம். கருத்து-சினந்து.

182. நன்னெடும்படை நடுக்குறீஇ வெருவிய தன்மை
கன்னெடுங்குவடு ஒத்தனன் செருக்கெழக் கடுத்துப்
பன்னெடும்பகல் பரமனைப் பகைப்பவும் இகழ்ந்த
சொன்னெடும்பகை தொடர்ந்தனன் எவரையும் நகைப்பான். 16

சிறந்த மிகுந்த இசரவேலரின் படை நடுக்கம் கொண்டு அச்சமடைந்த தன்மையால் மலையின் நீண்ட சிகரம் போன்ற அவனுடைய சினம் மேலும் மிகுதியாக வெகுண்டு, நீண்ட பல

...ளாக அவர் வணங்கும் இறைவனைப் பகைப்பான். இகழ்ந்த சொல்லால் பிறந்த பகையைத் தொடர்ந்தான் எவரையும் எளிதி(ல்) வெல்வான்.

நடுக்குறீஇ-நடுக்கம்கொண்டு. வெருவி-அச்சமடைந்து. குவடு-சிகரம். செருக்கு-கர்வம். பரமனை-இறைவனை.

183. தாங்கு வாரிலா சாற்றிய உரைகள் கேட்டு எவரும்
நீங்கு வாரென நிருபனும் அயருதன் நெஞ்சிற்கு
ஏங்கு வா "வெவன் எதிர்ந்தவல் அரக்கனை வென்றால்
ஆங்கு நானவற்கு என்மகள் அளிக்குவேன்" என்பான். 17

கோலியாத்தை எதிர்த்துத் தடுப்பவர் எவரும் இல்லாமல், அவன் கூறிய வீரவார்த்தைகளைக் கேட்டு, எவரும் பின்வாங்கி நீங்கி விடுவார் என்பதால் மன்னனும் சோர்வு அடைவான். தன் மனதில் எண்ணம் கொள்வான். "எவன் அந்தக் கோலியாத்தை எதிர்த்து வெற்றி கொள்வானோ அங்கு நான் அவனுக்கு என்மகளை மனைவியாக அளிப்பேன்" என்று கூறினான்.

சாற்றிய-கூறிய. நிருபன்-மன்னன். அயரும்-சோர்வு அடைவான்.

தாவீதின் வீரவுரை.

184. இன்ன வாய்ப்பகல் நாற்பதும் இரிந்தபின் அண்ணார்
முன்னர் மூவரே முரண்செயப் போயினர் அவரைத்
துன்ன ஆசையால் தொடர்ந்தினா தாவீதன் எய்தி
அன்ன யாவையும் அஞ்சினர் அறைதலும் கேட்டான். 18

இவ்வாறு நாற்பது நாட்கள் கடந்த பின்னர், தாவீதின் அண்ணன்மார் மூன்று பேர் போர் செய்யப்போயிருந்தனர். அவர்களை நெருங்கிக் காணவேண்டும் என்ற ஆர்வத்தினால் இளைஞன் தாவீது தொடர்ந்து சென்று அவ்விடத்தை அடைந்தான். அங்கு நடந்த எல்லாவற்றையும் அச்சமுற்றவர்கள் கூறக்கேட்டான்.

இரிந்தபின்-கடந்த பின்னர். முரண்-போர். துன்ன-நெருங்க. எய்தி-அடைந்து. அறைதல்-கூறுதல்.

185. கேட்ட வாசகம் இனந்திற நெஞ்சிடத்து எரியை
ஈட்டல் ஆமென எழுந்துளம் நினைந்தவை ஆக்கிக்
காட்ட வாய்மையின் கடந்தவல் கடவுளை நகைப்ப
வேட்ட சாவ்விளி விழுங்கிய கயவன் யார் என்றான். 19

அவர்கள் கூறிய வார்த்தைகளைக் கேட்ட தாவீது, ஊக்கம் கொண்டு மனதில் நெருப்பைக் குவித்தது போன்று ஆகும் என்று

கொதித்து எழுந்து, "சொல்லுக்கு அடங்காத தன்மையையுடைய மனம் நினைத்ததை அவ்வாறே நடத்திக்காட்ட வல்ல உண்மையுள்ள இறைவனை இகழ்ந்து பேசியதால் சாவையே விரும்பிய அந்தத்தீயவன் யார்? என்று கேட்டான்.

ஈட்ட-குவிக்க. நகைப்ப-ஏளனம் செய்ய. வேட்ட-விரும்பிய. விளி-சாவு. கயவன்-தீயவன்.

186. "கைவ யத்தினால் கருத்திடத்து உடலிறுங்கு ஓங்கும்
பொய்வ யத்தினான் புகைந்தசொற்கு அஞ்சவது என்னோ?
மெய்வ யத்தினால் விழைசெயம் ஆவதோ கடவுள்
செய்வ யத்தினால் சிறுவன்நான் வெல்லுவேன்" என்றான். 20

கையின் பலத்தினாலும், உடல்பலத்தினாலும் மேலாக உயர்ந்த பொய்யான வலிமையினாலும் ஒருவன் கூறிய சொல்லுக்கு அஞ்சுவது ஏன்? உடலின் வலிமையினால் விரும்பிய வெற்றி கிடைத்து விடுமோ? கடவுள் செய்யும் உண்மையான வலிமையினால் சிறுவன் நான் அவனை வெல்லுவேன்" என்று தாவீது கூறினான்?

வயம்-வலிமை. புகைந்த-கூறிய. மெய்-உடல். விழை-விரும்பும்.

187. என்றது அண்ணல் கேட்டு "இவன் தனைக் கொணர்மின்என்"
நிசைப்ப
சென்ற அன்னநல் சேடனை நோக்கலும் "நீயோ
பொன்ற உன்னினாய்? பொருப்பினைப் பெயர்த்தெறிந்து
உவமை
வென்ற திண்மையான் வெகுளிமுன் நீஎவன்" என்றான். 21

"சிறுவன் நான் வெல்லுவேன்" என்பதைச் சவுல் மன்னன் கேட்டு "அவனை என்னிடம் அழைத்துவாருங்கள்" என்று கூறினான். அதன்படி வந்த அந்தச் சிறுவனைக் கண்டதும், "நீ இறக்க எண்ணினாயோ? மலையை அடியோடு பெயர்த்து எறிந்து உவமை ஒன்றும் இல்லாமல் வென்ற வலிமை வாய்ந்த அந்த அரக்கனின் சினத்தின் முன் நீ எம்மாத்திரம்?" என்றான்.

இசைப்ப-கூற. சேடன்-சிறுவன். பொன்ற-அழிய. உன்னினாய்-நினைத்தாய். பொருப்பு-மலை. திண்மை-வலிமை.

188. ஏந்தல் ஈரடி இறைஞ்சிய இளவலும் அறைவான்
"காய்ந்தது ஓர்பகை கடுத்ததன் பயம்செயின் மீட்டு

வேய்ந்தது ஒர்படை வேண்டுமோ? உடலுளைப் பகைத்து
வாய்ந்த ஆண்மையை மறுத்தனை எவன் வெல்லான் ஐயா!" 22

சவுல் மன்னனுடைய இரு அடிகளையும் வணங்கிய சிறுவனாகிய தாவீது கூறுவான் "கடுமையான தன்னுடைய பாவமே வெகுண்ட தன்மை பகையாகப் பொருந்தி விடுமானால் அதுவே கொல்லும் ஆயுதமாகும். வெளியிலே இருந்து வேறோர் ஆயுதம் தேவை யில்லை. இறைவனைப் பகைத்த அவனுக்கு, இயல்பாக அமைந் துள்ள வீரத்தை மறுத்த ஒருவனை எவன்தான் வெல்லமாட்டான்?"

ஏந்தல்-மன்னன். காய்ந்த-வெகுண்ட. கடுத்த-கடுமையான. வேய்ந்த-அமைந்த.

189. திறம்சுக டுத்துகொல் சிங்கமும் உளியமும் பாய்ந்து
மறங்க டுத்ததிர் வல்லியத்து இனங்களும் எதிர்ந்து
சுறங்கு அடுத்தகால் கழுத்தினை முருக்கி நான் கொன்றேன்
அறங்கெ டுத்தவன் அவற்றினும் வலியனோ என்றான். 23

"வலிமையோடு வெகுண்டு வந்த கொல்லும் சிங்கமும் கரடியும் பாய்ந்து வந்தும் கொடுமையாகச் சினந்து முழங்கும் புலி இனங்களும் எதிர்த்து வந்தும் காற்றாடி போல் சுழன்று என்னிடம் வந்தபோது, அவற்றின் கழுத்தை நெருக்கி நான் கொன்றேன். அறத்தை அழித்தவனாகிய அந்த அரக்கன் அவற்றைக் காட்டிலும் வலியவனோ" என்று கூறினான்.

திறம்-வலிமை. கடுத்த-சினந்த. உளியம்-கரடி. வல்லியம்-புலி. சுறங்கு-காற்றாடி.

190. அரிய ஆண்மையை அதிசயித்து அரசன்நன்று என்னா
விரிய எல்லொளி வேலொடு தனதுபல் கருவி
உரிய போர்செய ஒருங்குதந் தனன்அவற் றொடுதான்
திரிய வாய்முறை தெரிகிலேன் எனமறுத்து அகன்றான். 24

அரசன் தாவீதினுடைய அரிய வீரத்தை அறிந்து, வியந்து நல்லது என்று இசைந்து உரிய போர் செய்யும் கருவியாக விரிந்து பரவிய ஒளிபொருந்திய தனது வேலோடு தன்னுடைய பல ஆயுதங்களை ஒருங்கே கொடுத்தான். தாவீதோ, "அவற்றோடு நடந்து செல்லப் பொருந்திய முறையை நான் அறிவேன்" என்று மறுத்துவிட்டு அங்கிருந்து சென்றான்.

ஆண்மை-வீரம். அகன்றான்-சென்றான்.

191. தெரிந்த ஐந்துறு சிலையொடு கவணெடுத்து எவரும்
இரிந்த பாலனை நோக்கியுள்ளம் அதிசயித்து இரங்க
விரிந்த ஆசையால் வேதியர் ஆசியைக் கூற
பிரிந்த காலொலி பெருக ஆங்கு அனைவரும் ஆர்த்தார். 25

தாவீது தெரிந்துகொண்ட ஆராய்ந்து ஐந்து கூழாங்கற்களோடு கவணைக் கையில் எடுத்துக்கொண்டு சென்றான். யாவரையும் விலக்கிக்கொண்டு சென்ற சிறுவனை நோக்கி, மனத்துள் வியந்து இரக்கம் கொண்டனர். மிகுந்த ஆர்வத்தால் திருமறை அறிஞர்கள் ஆசியைக் கூறினர். தாவீது படையணியை விட்டுப் பிரிந்து சென்றபோது அவ்விடத்தில் ஒலிபெருக இசரவேலர் அனைவரும் ஆரவாரம் செய்தனர்.

சிலை-கூழாங்கல். இரிந்த-நீங்கிய. விரிந்த-மிகுந்த. வேதியர்-திருமறை அறிஞர். ஆர்த்தார்-ஆரவாரம் செய்தனர்.

கோலியாத்து வீழ்ச்சி

192. ஆர்த்த ஓதைகேட்டு அரக்கனின்று அமர்க்கெதிர் வருகப்
பார்த்த பாலனைப் பழித்தெழுந்து யாவரும் அஞ்சக
கூர்த்த வேலொடு குறுகவந்து அகல்கரு முகிலின்
போர்த்த கோடைநாள் பேரிடி எனவுரை செய்தான். 26

இசரவேல் மக்கள் ஆரவாரித்த ஓசையைக் கேட்ட அரக்கனாகிய கோலியாத்து இன்று போருக்கு எதிர்வருவனைப் பார்த்துப் பழித்துக் கூறிய வண்ணம் எழுந்து யாவரும் அச்சம் கொள்ளுமாறு கூர்மையான வேலோடு நெருங்கி வந்து, பரந்த கருமையான மேகத்திலிருந்து புறப்பட்டு வந்த கோடைக்காலத்துப் பேரிடி போன்று சத்தமிட்டுக் கூறினான்.

ஆர்த்த-ஆரவாரம் செய்த. ஓதை-ஓசை. அமர்க்கு-போருக்கு. கூர்த்த-கூர்மையான. முகில்-மேகம். போர்த்த -புறப்பட்டு வந்த.

193. நீய டாஎதிர் நிற்பதோ மதம்பொழி கரிமேல்
நாய டாவினை நடத்துமோ சினங்கொடு நாமோ
வாய டாபிளந்து உயிர்ப்பிட மறுகந் நுண்ணூறாள்
ஆய டாவுவரு அப்புறத்து எருவாய் என்றான். 27

"நீயடா! என் எதிரில் வந்து நிற்க முடியுமோ? மதநீர் பொழியும் யானையை நாய் எதிர்த்துப் போர்ச் செயலை நடத்துமோ? சினம்கொண்டு நான், மூச்சுவிட அடே! நீ சுழன்று நுண் தூளாய்,

இவ்வுலகத்திற்கு அப்பால் உள்ள மறு உலகத்திற்கே சென்று விடுவாய்" என்றான்.

[illegible]-மதர்- கரி-யானை. கதம்-சினம். உயிர்ப்பு-மூச்சு. ஏகுவாய்-சென்று விடுவாய்.

194. [illegible]
[illegible]
[illegible]
[illegible] இளையோன். 28

தாவீது கோலியாத்தை நோக்கி, "வெல்லும் தன்மை பொருந்திய [illegible]மையான வேல்தரும் வலிமை உன் வலிமையாகும். நானோ [illegible] சமயத்தில் உதவி செய்யும் ஒப்பு இல்லாத ஆற்றல் வாய்ந்த இறைவனின் வலிமை பொருந்திய கையின் துணை கொண்டு உன்னைக் கொன்று உன் உடலைப் பறவைகளுக்கு இரையாக விரைவாகச் செய்வேன்" என்று தன் கையில் இருந்த கவணைச் சுழற்றினான்.

மிடல்-வலிமை. எல்லை-தக்கசமயம். இறக்கட-வன்-வலிமை மிக்க கடவுள். மாய்த்து-கொன்று. புட்கு-பறவைகளுக்கு. ஒல்-விரைந்து.

195. கல்லை எற்றலும் கவணினைச் சுழற்றலும் அக்கல்
ஒல்லை ஓட்டலும் ஒருவரும் கண்ணிலர் இடிக்கும்
செல்லை ஒத்தன சிலைநுதல் பாய்தலும் அன்னான்
எல்லை பாய்ந்திருள் இரிந்தென வீழ்தலும் கண்டார். 29

தாவீது கல்லினைக் கவணில் ஏற்றியதையும், கவணினைச் சுழற்றியதையும், அந்தக்கல்லை விரைவாக அரக்கன் மீது செலுத்தியதையும் ஒருவரும் காணவில்லை. ஆனால் அந்தக் கல் இடிக்கும் மேகம் போன்ற அரக்கன் நெற்றியில் பாய்ந்ததும், கதிரவன் வர இருள் நீங்கியது போல அவன் தரையில் வீழ்ந்ததை மட்டுமே யாவரும் கண்டனர்.

ஒல்லை-விரைவு. செல்-மேகம். சிலை-கல். நுதல்-நெற்றி. எல்-கதிரவன். இரிந்து-நீங்கி.

196. கடையுகந்தனில் கருமுகில் உருமொழி விழும்போல்
படைமு கத்தினில் பாரறைந்து அஞ்சவீழ்ந் தனன்தன்
புடைய கத்தினில் புனைந்தவாள் உருவியென் தெய்வம்
உடைய சத்தினை உணர்மினென்று இருஞ்சிரம் கொய்தான். 30

யுகமுடிவுக்காலத்தில் கருமையான மேகம் இடியுடன் விழுவது போல, உலகமக்கள் கலங்கி அஞ்சுமாறு, போர்க்களத்தில் அரக்கன் கோலியாத்து தரையிலே விழுந்தான். தாவீது அந்த அரக்கனுடைய இடையில் ஒருபக்கத்தில் பொருந்தி இருந்த வாளை உருவி, பிடித்தவனாய்ப் பார்த்து "என் இறைவன் கொண்டுள்ள வலிமையை அறிந்து கொள்ளுங்கள் என்று கூறி அவனுடைய பெரிய தலையைக் கொய்தான்.

கடையுகம்-உலக முடிவுக்காலம். முகில்-மேகம். உருமு-இடி. பார்-உலகம். புடை-பக்கம். புனைந்த-பொருந்தி இருந்த.

197. கூனெ றெய்பிறை குழைத்தவாய் நிரைநிரை தோன்ற
வானெ ழுந்திரை ஒழுகலங்க அனைவரும் கூச,
நீலெ மெய்பொறை நிலத்தலை தூக்கினான், ஒன்னார்
பாலெ மெய்படை மருண்டுளைந்து உளமுறிந்து ஓட. 31

போர்க்களத்தில் நின்ற இஸ்ரயேலரைப் பெலிஸ்தியர் யாவரும் கண்டு வெட்கமடையவும், பகைவரின் மிகுந்த பெரிய படை மயங்கி வருந்தி மனம் உடைந்து ஓட, அந்த அரக்கனின் தளர்ந்த வாயில், வளைந்த நெடும்பிறை போன்ற பற்கள் வரிசை வரிசையாகக் காணப்படவும், உடலிலிருந்து நீண்ட அலையைப் போல இரத்தம் ஒழுகவும், கருமையான நீண்ட மலை போன்ற தலையைத் தூக்கி அனைவருக்கும் தாவீது காட்டினான்.

கூன்-வளைந்த. நிரைநிரை-வரிசை வரிசை யாய். மெய்-உடல். திரை-அலை. பொறை-மலை. ஒன்னார்-பகைவர். மருண்டு-மயங்கி. உளைந்து-வருந்தி. முறிந்து-உடைந்து.

தாவீதன் பெற்ற வாக்குறுதி

198. கார்முகத்து அசனி கூசக் கடுத்ததுவ் அரக்கன் வென்ற
சீர்முகத்து இளவல் பின்னர் திறந்ததன் நாம வேலால்
போர்முகத்து எதிரொன்று இல்லான் பொழிமறை பழுத்த யாரும்
பார்முகத்து அதற்கெனு ஞான்றும் புரிந்திட வகைசெய் தானே. 32

கருமையான மேகத்தில் உண்டாகும் இடியும் நாணுமாறு வெகுண்டு வந்த அந்த அரக்கனைக் கொன்று வெற்றிபெற்ற சிறப்புடைய அந்தத் தாவீது என்ற இளைஞன் பின் காலத்தில் வலிமைபடைத்த அச்சம் தரும் தன்னுடைய வேலினால் போர்க்களத்தில் தனக்கு ஒப்பு ஒன்றும் இல்லாதவனாக விளங்கி, எல்லா நன்மைகளையும் தரும் திருமறையை முன் குறைகூறிய

யாவரும் உலகத்தில் அதமந்து எப்பொழுதும் அன்பு செறுந்த வகை செய்தான்.

அசனி-இடி. கடா-நானை, நாம-அச்சம் தரும். படிந்த-குறைகூறிய. பார்-உலகம். பரித்திட-அன்பு செய்ய.

199. கொய்தவன் முடிதீ ரண்ட குப்பைகள் ஏறி வெய்யில்
செய்தவன் முடியைச் சூடிச் சிறந்த ஆ சனத்தில் ஓங்கிப்
பெய்தவன் ஒளியோடு ஆய்ந்த பெருந்தகை பிலிற்றும்
செங்கோல்
எய்தவன் இறையோன் ஆண்மை எய்திய அரசன் ஆனான். 33

விண்ணுலகம் பெற்றுத் தந்த ஒளியுடன் ஆராய்ந்து அறிந்த பேரன்பைத்தரும் செங்கோலை அடையுமாறு, விண்ணுலக இறைவன் தந்த ஆற்றலைத் தாவீது அடைந்து, தன் வாளால் கொய்த பகைவரின் தலைகள் திரண்ட குவியலைக் காலால் மிதித்து, ஒளியையுடைய வாளை இடையிலும், முடியைத் தலையிலும் அணிந்து சிறந்த அரியணையில் அமர்ந்து உயர்ந்த மன்னன் ஆனான்.

திரண்ட-குவிந்த. ஏறி-மிதித்து. பிலிற்றும்-வெளிப்படும். எய்தி-அடைந்து.

200. நூல்நகத் துளங்கிக் கேள்வி நுண்ணறி வாளர் ஒவ்வா
வானகத்து ஒதுங்கி வாழும் வரும்பொருள் காட்டும் காட்சி
கானகத்து ஒதுங்கி வைகும் கடித்தவத் தோடும் இன்ன
கோனகத்து இலங்கு அங்கண் குடியென வதிந்த தாமால். 34

நூலறிவை எளனம் செய்யுமாறு விளங்கி, செவியினால் கேட்டு அடைந்த நுட்பமான அறிவினையுடைய பொருந்தாத வகையில் விண்ணுலகிற்கே உரிமையுடைய வருவாய் அமைந்த வருங்காலப் பொருளை, முன்னரே காட்டும் கடவுள் காட்சியைக் காட்டில் ஒதுங்கி வாழும் சிறந்த தவத்துடன் பொருந்திய இந்த மன்னனிடத்தில் விளங்கியது. அவ்வாறு இவை அவனுக்குக் குடிமக்கள் போல் தங்கி இருந்தன.

துளங்கி-விளங்கி. ஒவ்வா-பொருந்தா. கானகம்-காடு. வைகும்-தங்கி இருக்கும். கடி-மிகுந்த. வதிந்த-தங்கியிருந்த. ஆல்-அசை.

201. ஆழ்ந்தபொன் முடியும் கோலும் துறந்துபோய் அரிய கானில்
வாழ்ந்த வொண் தவம்செய் மன்னர் வழங்கினும் அதனைக்
கூட்டி

ஆழ்ந்தபல் மணியின் மின்கும் ஆசனத்து இருக்கச் சோதுதல்
தாழ்ந்தபண் பொழிந்த இன்ன தருமகோன் அரிதில் செய்தான் 35

தலையில் அணிந்த பொன் முடியையும், பெற்ற செங்கோலையும் துறந்து சென்று, கொடிய காட்டில் வாழ்ந்த ஒளி பொருந்திய சிறந்த தவத்தினைச் செய்த மன்னரும் இருந்தனர். இருப்பினும் பல மணிகள் பதித்த நெருங்கிய அரியணையில் இருக்கச் செய்த தாழ்ந்த பண்புகளை எல்லாம் ஒழித்த இந்த அறத்தையுடைய மன்னன் அரிய முறையில் தவத்தைச் செய்து காட்டினான்.

துறந்து-விட்டுநீங்கி. கானில்-காட்டில். ஒண்-ஒளி. மின்கும்-நெருங்கும். ஒழிந்த-விட்டுவிட்ட.

202. வேலொடு மாற்றார் வெள்ளம் வென்று வென்று அடக்கித்
தன்னை
நூலொடு வெல்ல ஐந்து நுண்புலன் அடக்கிக் காத்துக்
கோலொடு வழாமை நீதிக் கொழுந்துகள் கொழு கொம்பு ஆனான்
சூலொடு வழங்கும் மாரித் துளிபழித்து அருளும் கையான் 36

நீரைக் கருவில் கொண்ட மேகம், அளிக்கும் மழைத்துளியை இகழ்ந்த தன்மையாய் இரவலர்க்கு அருளுடன் வழங்கும் கையை யுடையவன் தாவீது. அவன் தன் வேலின் திறமையினால் பகைவர் வெள்ளத்தைப் பலமுறை வென்று அடக்கி, நூலறிவுடன் பொருந்துமாறு தன்னை வெற்றிகொள்ளுமாறு நுட்பமான ஐம்புலன்களையும் அடக்கிக்காத்து செங்கோல் முறையிலிருந்து தவறாமல், அறம் என்னும் படரும் கொடியின் கொழுந்து சேர்ந்து செழிப்பதற்கான கொழுகொழும்பு போல் விளங்கினான்.

மாற்றார்-பகைவர். நுண்புலன்-நுட்பமான ஐம்புலன்கள். வழாமை-தவறாமை. கொழுகொம்பு-பற்றுக்கோடு. சூல்-கரு. மாரி-மழை.

203. மன்னரும் தனயயால் பாரில் வழங்கிய சீர்த்தி அல்லால்
இன்னரும் குணங்கள் தம்மால் இறைவற்கு உகந்த கோமான்
முன்னரும் தவத்தோன் கொண்ட முறைதவிர் வரங்கள் எய்தி
துன்னரும் உயர்வீடு உள்ளோர் துணையெனப் புவியில்
வாழ்ந்தான். 37

இனிமையான அருமையான பண்புகளால் இறைவனுக்கு மிகவும் விருப்பமான மன்னனாகிய தாவீது, நிலையான மிகுந்த இரக்கத்தினால் மண்ணுலகில் பெற்றுள்ள புகழ் அல்லாமல், முன் காலத்தில் வாழ்ந்த அருமையான துறவிகள் கொண்ட அளவோன

முறைக்குள் அடங்காத வரங்களை அடைந்து, அடைவதற்கு அருமையான மேலான விண்ணுலகில் உள்ளவர்களுக்கு ஒப்பாக இவ்வுலகில் வாழ்ந்தான்.

மன்-நிலையான. தயை-இரக்கம். பாரில்-உலகில். சீர்த்தி-புகழ். கோமான்-மன்னன். துன்னரும்-அடைவதற்கு அருமையான.

204. ஆயினான் நடந்த தன்மை ஆண்டவன் உவப்பில் ஓர்நாள்
வீயினை நிகர்த்த எச்சம் இடைமுறை பலவும் போயோர்
சேயினால் நயப்பச் செய்வேன் சிறந்தமூ உலகில் அன்னான்
வாயினால் நவிலாக் கோன்மை வரம்பெற அளிப்பேன் என்றான். 38

இவ்வாறு பொருந்திய தாவீது, வாழ்வு நடத்திய தன்மையால் இறைவன் மகிழ்ச்சியோடு ஒருநாள் அவனுக்குக் காணப்பட்டு "மலர்போன்ற உன் சந்ததி இடையே பலதலை முறைகள் கடந்த பின்னர் ஒரு குழந்தையினால் மகிழச்செய்வேன். சிறந்த மூன்று உலகங்களிலும் வாயினால் உரைக்க முடியாத ஆட்சி உரிமை பெற அவனுக்கு அளிப்பேன்" என்றார்.

உவப்பு-மகிழ்ச்சி. வீ-மலர். நிகர்த்த-ஒத்த. எச்சம்-சந்ததி. சேய்-குழந்தை. நயப்ப-மகிழ. நவிலா-சொல்ல முடியாத. கோன்மை-ஆட்சி.

205. தந்தையில் வரமின் னாதன் சந்ததி முறையில் சேயாய்
வந்ததற் பரனால் ஆய வளப்பமென் றாலும் என்ற
இந்தநல் முறையால் மைந்தன் இயல்பொடு தேவன் என்பான்
அந்தரம் முதலி யாண்டும் ஆள்வதும் அரிய பாலோ? 39

தாவீதுக்கு இறைவன் தந்த இந்த வரம் இவனுடைய மரபுமுறையில் மகனாக வந்த கடவுளால் நிறைவேறியது. என்று கூறினாலும் இந்த நல்ல முறையினால் மனிதத்தன்மையோடு இறைவனாகிய அந்தக் கடவுளாகிய ஆண்டவர். விண்ணுலகம் முதல் எல்லா உலகையும் ஆள்வது என்பது அவனுக்கு அரியதன்மை ஆகுமோ? (ஆகாது)

சேயாய்-குழந்தையாய். தற்பரன்-இறைவன். அந்தரம்-விண்ணுலகம். பாலோ-தன்மையோ!

206. கோன்மையால் உயர்ந்த தாவிதன் கோத்திரத்து உதிக்கும் தெய்வ
மேன்மையால் ஒருவனை அன்றி விபுலையில் பிறக்கும் மாக்கட்
பான்மையில் உயிர்த்த மைந்தன் பாரொடு வானும் ஆள
நான்மையால் வழுவாச் செங்கோல் நல்கவுள் ளினன் ஆம்
நாதன். 40

ஆட்சியால் உயர்ந்த தாவீதின் மரபில் தோன்றும் கடவுள் மேன்மை பொருந்திய ஒருவரே அல்லாமல் உலகில் இயற்கையாகப் பிறக்கும் மக்கள் தன்மை மட்டும் கொண்டு பிறந்த மகன், மண்ணுலகோடு விண்ணுலகையும் ஆளுமாறு, காமம், வெகுளி, மயக்கம், அகங்காரம் ஆகிய நான்கு வகைக் குற்றங்களாலும் தவறாமல் செங்கோல் வழங்க இறைவன் நினைத்தால் மட்டுமே ஆகும்.

கோன்மை-ஆட்சி. விபுலை-உலகம். பார்-மண்ணுலகம். வழுவா-தவறா. நல்க-அளிக்க. உள்ளினான்-நினைத்தான்.

207. உள்ளினது எல்லாம் உள்ளும் உறுதியால் ஆக்கும் வல்லோன்,
எள்ளினது எல்லாம் நீக்கும் இயல்பொடு தாவி தன்தன்
வள்ளின முறையில் சேயாய் வந்துமூ உலகம் ஆள
நள்ளினை வளம்கொள் ஆசை நயத்தொடு தெரிந்திட் டானே. 41

எண்ணியவற்றை எல்லாம் எண்ணியவாறு செய்து முடிக்கும் வல்லமையுள்ள இறைவன், இகழத்தக்கவற்றை எல்லாம் நீக்கும் தன்மைக்கு ஏற்றவாறு தாவீதின் வளமையான சந்ததியில் மகனாக வந்து பிறந்து, மூன்று உலகங்களையும் ஆளுமாறு விரும்பும் வரங்களின் வளமை பெற்ற ஆசையை மகிழ்வுடன் தெரிந்து கொண்டார். உள்ளினது-எண்ணியது. எள்ளினது-இகழத்தக்கது. வள்-வளமை. சேய்-மகன். நள்ளினை-விரும்பின. நயம்-மகிழ்ச்சி.

208. ஏற்றிய முறையோடு எந்தை இயன்றதன் வலிமை காட்ட
போற்றிய வரம்கொடு எங்கும் பொருநனாய்த் தெரிந்த ஆசை
சாற்றிய கோத்திரத்தின் தலைமுறை வழுவா தேனும்
மாற்றிய திருவொன்று இன்றி வறுமையாள் பிறக்கச் செய்தான். 42

எம் தந்தையாகிய இறைவன், தம்மால் முடிந்த வலிமையை வெளிப்படுத்த, அதற்கேற்பப் போற்றத்தக்க வரங்களைக் கொண்டு, எல்லா உலகத்திற்கும் மன்னனாகத் தெரிந்துகொண்ட ஆசை, முன்னர் கூறிய தாவீதின் குலத்தில் தலைமுறை தவறாமல் பிறந்தான் என்றாலும், சந்ததியாகக் கைம்மாறி வர வேண்டிய செல்வம் ஒன்றும் இல்லாமல் வறுமையில் பிறக்கச் செய்தார்.

எந்தை-எம் தந்தை. பொருநன்-மன்னன். சாற்றிய-கூறிய. வழுவாது-தவறாமல்.

209. பொய்ப்படும் உலக வாழ்வின் பொருட்டுஇலா மிடிமையோடு
கைப்படும் உழைப்பில் உண்டி காணவந்து உதித்த இல்லான்

மெய்ப்படும் அறத்தின் ஆண்மை விளங்கிய முறையின் பின்னர்
துப்படும் விசும்பொடு எங்கும் அரசனாய் வணங்கச் செய்தான். 43

பொய்யினால் உண்டாகும் உலக வாழ்க்கைக்கான தேவையான பொருள் இல்லாமல், வறுமையுடன் தன் கையினால் செய்யும் உழைப்பினுடன் உணவு தேடும் முறையாக வந்து தோன்றிய பொருள் இல்லாதவனாகிய ஆசையை உண்மையினால் உண்டாகும் அறத்தினால் வீரம் விளங்கிய முறையில், பின்னர் அழகு பொருந்திய விண்ணுலகத்தோடு எல்லா உலகுக்கும் அரசனாய் யாவரையும் ஆசையை வணங்கச் செய்தான்.

படும்-உண்டாகும். மிடி-வறுமை. ஆண்மை-வீரம். துப்படும்-அழகினால் உண்டாகும். விசும்பு-விண்ணுலகம்.

மாசு களைந்த கருப்பம்

210. நூல்நிலம் காட்சியால் நுனித்த காலுணர்
மீனிலம் கடந்தெலாம் ஆளும் வேந்துதான்
தேனிலம் கருணையால் தெளிந்த எல்லையில்
கானிலம் தவத்தினால் கருப்பம் ஆயதே. 44

திருமறை நூலுக்கு நிலையான இறைகாட்சியால் ஒவ்வொன்றிற்கும் எண்ணிய காலத்தை உணர்ந்தவனாக விண்மீன் உலகையும் கடந்து நின்று எல்லா வற்றையும் ஆட்சி செய்யும் அரசராகிய இறைவன், தேனைவிட இனிய அருளால் தான் தெளிந்து குறித்த காலத்தில், இறை மனத்திற்கு நிலையாகப் பெற்றோர் செய்த தவத்தின் பயனால் கருப்பம் உண்டானது.

நூல்-திருமறை. நுனித்த-நுட்பமான. மீன்நிலம்-விண்மீன் நிலம். எல்லை-காலம். கான்-மணம்.

211. கொலைமுகந்து அழன்றவேல் கொற்றத் தாவிதன்
தலைமுகந்து ஒழுகிய குலச்ச கோபவன்
சிலை முகந்து அவிர்நுதல் தேவி நீப்பியின்பு
அலை முகந்து உவந்துசூல் அணிந்துள் ஓங்கினாள். 45

கொலைகளை மிகுதியாகக் கொள்ளும் எரிந்த வேலினால் வெற்றி கொண்ட தாவிதை முதன்மையாகக் கொண்டு தொடர்ந்து வந்த மரபில் வந்தவன் சகோபு என்பவன். அவன் மனைவி வில்லின் வளைந்த வடிவம் கொண்ட ஒளி விளங்கும் நெற்றியை உடைய நீப்பி என்பவள். அவள் இன்ப அலையில் மூழ்கி மகிழ்ந்து கருப்பம் அடைந்து உள்ளத்தில் எழுச்சி கொண்டாள்.

அழன்ற-எரிந்த. கொற்றம்-வெற்றி. சிலை-வில். நுதல்-நெற்றி. சூல்-கருப்பம்.

212. மணிபழித்து அருங்கவின் மங்கை உள்ளுவந்து
அணிபழித்து அணிந்தநல் கருப்பம் ஆயதால்
பிணிபழித்து உறுநயம் பெருகி மேலெழீஇ
பணி பழிந்து ஒளிமுகம் பொறித்த பான்மையே! 46

மணிகளைப் பழித்து அருமையான அழகினையுடைய நீப்பி என்னும் பெண், மனம் மகிழ்ந்து அணிகலன்களைப் பழித்தது போன்று அணிந்து நல்ல கருப்பம் அடைந்தாள். அப்பொழுது கருவுற்றதனால் உண்டாகும் துன்பங்களைப் பழித்து இன்பம் மிகுந்து மேல் எழுந்தது. அணிகலன்களைப் பழித்து ஒளியினைப் பெற்ற அவளுடைய முகம் ஓவியமாக வரைந்த தன்மையாய் விளங்கியது.

கவின்-அழகு. உவந்து-மகிழ்ந்து. பிணி-துன்பம். உறுநயம்-மிகுந்த இன்பம். பணி-அணிகலன். பான்மை-தன்மை.

213. தாரொடு சனித்தேன் தன்மை யோவளை
ஏரொடு கொண்டமுத்து இலங்கும் தன்மையோ
நீரொடு ஐந்துதம் பகையை நீத்தொரு
சீரொடு வேற்றில சிறந்த சூலதே. 47

நீரோடு ஐந்து பூதங்கள் தங்களுடைய பகைமையை நீக்கி ஒரே சீராக இணைந்து வேற்றுமையில்லாமல் சிறப்பு பொருந்தின. அந்தக் கருப்பம், மாலையின் மலரோடு உண்டான தேனின் தன்மை என்று சொல்லுவோமா? சங்கு அழகுடன் கருவுற்ற முத்து உள்ளிருந்து ஒளிவிடும் தன்மை என்போமா?

ஐம்பூதம்-மண், விண், தீ, நீர், காற்று. தார்-மாலை. வளை-சங்கு. ஏர்-அழகு. இலங்கு-விளங்கும். சூல்-கரு.

214. அறைவளர் மனையினுள் அரசன் புக்கென
இறைவளர் அன்பினோர் உயிரி யற்றிவெண்
பிறைவளர் நலமென வளர்ந்த பீருன
சிறைவளர் உடலினுள் செலுத்தி னான் அரோ. 48

அறைகள் நிறைந்த ஒரு மாளிகையுள் மன்னன் புகுந்தது போல, இறைவன் மிகுந்த அன்புடன் ஓர் உயிரைப் படைத்து, நிலவின் வெண்பிறை வளரும் அழகு போல் வளர்ந்த கருபத்தினையுடைய சிறைபோல் அமைந்த உடலினுள் செலுத்தினான்.

பக்கு-பகுத்து. இயற்றி-படைத்து. பின்-கரு. அரோ-அசைநிலை. [illegible] உறுப்புகள் அறைவீடுகள். உடல் மாளிகை. [illegible]-அரசன். உவமைகள்.

215. வாய்வழி பரவிய நஞ்சின் வண்ணமே
காய்வழி ஆதன்முன் களித்து அருந்திய
தீய்வழி கருவழி சேரும் தொல்செயிர்
ஓய்வழி பொறாதிறை ஒழிய முன்னினான். 49

வாய்வழியே சென்று உடல் முழுவதும் பரவிய நஞ்சினைப் போன்று, விலக்கப்பட்ட பழத்தின் வழியாக முன் படைப்பின் காலத்தில் மனித இனமுதல்வனான ஆதன் மனம் இசைந்து பழம் உண்ட பாவத்தின் வழியாக மக்கள் யாவருக்கும் கருப்பத்தின் வழியாக வந்து சேரும் பழைய பாவம், இறைமைந்தனின் பாடுகளின் பயனாக நீங்கும் வழி உண்டாகும் வரையில் பொறுத்திராமல் அப்பொழுதே வளனுக்கும் பாவத்தை ஒழித்துவிட இறைவன் நினைத்தார்.

[illegible]-இடம். தீய்-தீமை. தொல்-பழைய. செயிர்-துன்பம். முன்னினான்-நினைந்தான்.

216. புரப்பவோர் பொதுமுறை பொறாத தன்மையால்,
கருப்பமோர் எழுமதி கடக்கும் முன்வினை
பரிப்பவோர் சிறப்பருள் பயத்தின் சூல்செயிர்
விருப்பமோடு இறையன் விலக்கி னானரோ. 50

[illegible] குற்றத்திலிருந்து சூசையைக் காக்க ஒரு பொதுமுறை பொறுக்க முடியாத தன்மையால் கருப்பம் ஓர் ஏழு திங்கள் கடக்கும் முன்பாக அவ்வினையை முற்றிலும் ஒழிக்க ஒரு சிறப்பான திருவருள் பயனால் இறைவன் கருவோடு பொருந்திய அக்குற்றத்தை விருப்பத்தோடு சூசையிடமிருந்து நீக்கினார்.

அரோ-அசை நிலை. புரப்ப-பாதுகாக்க. மதி-திங்கள். சூல்-கரு. செயிர்-குற்றம்.

217. தீயவை விலக்கிய சிறப்பின் தேவருள்
தூயவை பதிவாந் தொகையின் சூலிடத்து
ஆயவை அறிந்திலன் அளவில் உள்மகிழ்
தாயவள் வியப்புறீஇத் தளர்வற்று ஓங்கினாள். 51

கருவினைக் குற்றத்தோடு தொடர்ந்த தீமையானவற்றை முற்றிலும் நீக்கிய மேன்மையோடு இறையருளால் தூய்மையாகப் பதிந்த வரங்களின் சேர்க்கையால் தன் கருப்பத்திலுள்ள நடந்த வற்றை அறியாதவளாய் அளவு இல்லாமல் மனம் மகிழ்ந்த தாயாகிய நீப்பி என்பவள் வியந்து சோர்வு நீங்கி உயர்ந்தாள்.

வரத்தொகை-வரங்களின்சேர்க்கை. சூல்-கருப்பம். தளர்ச்சி-சோர்வு. ஓங்கினாள்-உயர்ந்தாள்.

218. தேன்முகம் புதைத்தசூல் செறிந்த சீர்கொடு
கான்முகம் புதைத்தவிழ் கமலப் பூவெனத்
தூன்முகம் புதைத்தசீர்த் தொகைபு றப்படத்
தான்முகம் புதைத்தொளி தயங்கும் தாயரோ. 52

தேனைத் தனக்குள் மறைத்த கருப்பம் பொருந்திய சிறப்புடன் நறுமணத்தையும் தனக்குள்ளே மறைத்து வைத்திருந்து பின்னர் அந்தத் தேனும், நறுமணமும் ஆகிய இரண்டும் வெளிப்பட மலரும் தாமரை மலரைப் போன்று தாய் நீப்பியும் தனது கருப்பத்தைத் தன்னிடம் மறைந்திருந்த சிறப்பின் மிகுதி உள்ளடங்காமல் வெளிப்படத்தாலும் உள்ளே மறைத்துப்பின்னர் ஒளி விளங்கும் தாய் ஆனாள்.

சூல்-கருப்பம். செறிந்த-பொருந்திய. கான்-நறுமணம். அவிழ்-விரியும். தயங்கும்-விளங்கும். அரோ-அசைநிலை.

தேம்பாவணியாகப் பிறந்த மகன்

219. சொல்லார் நிகர்கெடவோர் வனப்பின் பைம்பொன் சூல்முற்றி
அல்லார் இருள்கெடமீ முளைத்த திங்கள் அணிமணிபோல்
எல்லார் முகத்திலங்கிப் பிறந்த தோன்றல் எழில் கண்டு
பல்லார் உடைமம்மர் கெடத்தாய் இன்பப் பயன்கொண்டாள். 53

சொற்கள் நிறைந்த உவமை கெடுமாறு தகுந்த அழகுடன் தூய்மையான பொன்போன்ற கருப்பம் முதிர்ந்து, இரவில் மிகுந்த இருள் கெடுமாறு மேலே வானத்தில் தோன்றிய நிலவு கொண்ட அழகு போன்று ஒளிமிகுந்த முகத்துடன் விளங்கிப் பிறந்த மகனுடைய அழகைக்கண்டு பலருடைய மயக்கமெல்லாம் நீங்கத் தாயாகிய நீப்பி மகிழ்ச்சிப் பயனைப் பெற்றாள்.

ஆர்-நிறைந்த. நிகர்-உவமை. வனப்பு-அழகு. பைம்பொன்-தூய்மையான பொன். சூல்-கருப்பம். எல்-இரவு. மம்மர்-மயக்கம்.

220. கண்டார் எவருமுளத்து உவப்ப மேலோர் கனியின்பம்
கொண்டார் அருள்பொறித்த முகத்தின் மாமை கொழித்தகதிர்

-டித்த தாள்-திருவடி. தன்-குவிந்த.

கநோக்கி
ந்தோர் அருந்தொடைப்பட
பீடித்து உயர்வளக
தொழுகின்றான். 55

ன்ற மகளைப் பெற்றவள்.
வின் சாயலும் உள்ள மகளைத்
ர் இயற்றும் அருமையான
ணக் கொண்ட செய்யுளின்
யாகிய பேடையை விட
சனைக் கைகளில் ஏந்தி

இட்ட பெயர் குசை

போல்
ன்ற
தோன்றலுறத்து
ன்றான். 56

குத் திலகம்
தாய். தன்
மூலமாக
ய்வதில்
ஆசி

வீடா வான்றல
தவொத ஆடா-அ
மலர்மறை.

224. மைந்நூற்து
எந்நூல் திறத்தி
மெய்ந்நூல் திற
கைந்நூல் திறத்

மையினால் நூற்
யுடைய நீட்பி பெற்
நூலின் மேன்மைக்கு
வணங்குதலை இ
தொடர்ந்து உண்மை
அந்நூலின் தன்மை
யாவற்றையும் ஒழு
குருக்கள் நிறைவேற்

குழல்-கூந்தல் இ
மணமிளிசி.

225. கூம்பா அணிமக
ஓம்பா அணியாக
சாம்பா அணியாக
தேம்பா வணியே

Scanned by TapScanner

நிறையில்லாத அழகினையுடைய மகன் குசைக்கு, சோதிடக் கணித அறிவில் சிறந்தோர் கூறும் புகழ்யாவும் பாதுகாக்க வேண்டாத அழகு என்று விலக்கிவிட்டு, புகழ் எல்லாம் ஒன்றாகச் சேர்த்து எம் தந்தையாகிய இறைவனே இரக்கம் கொண்டு வாடாத மாலையாகிய தேம்பாவணியே! எனப் புகழ்ந்தார். அங்குக்கூடி நின்றவர்கள் அக்குழந்தையின் அழகு மிகுமாறு அழகிய அணிகலன்களை அணிவித்தனர்.

உம்பா-குறையா. கணிதம்-சோதிடர் கணக்கு. மிக்கோர்-சிறந்தோர். ஓம்பா-பாதுகாக்க வேண்டாத. சாம்பா-வாடாத. கவின்மிக்கு-அழகு மிகுந்து. அம்பூண்-அழகிய அணிகலன்கள்.

இறைவன் குரலும், மக்கள் குரலும் ஒருங்கிணைந்து கூறிய தேம்பாவணி என்ற பெயர் காப்பியத்தலைவனுக்கும் காப்பியத்திற்கும் பெயராய் அமைந்தது.

226. செய்வாய வானுடுசூழ் குழவித் திங்கள் சீர் பொருவப்
பெய்வாயக் கிண்கிணியும் சிலம்பும் ஆர்ப்பப் பெய்துசுடர்
வைவாய் மணியாழி இட்டுப் பைம்பூ மலர் கிடத்தி,
மொய்வாய்க் கடலுலகின் திலதம் என்பார் முகம் கண்டார். 60

செந்நிறம் பொருந்திய வானத்தில், விண்மீன்கள் சூழ்ந்த இளம்பிறைச் சந்திரனின் சிறப்பிற்கு ஒப்பாகக் குழந்தையின் முகம் விளங்கக் கண்டு நின்றவர்கள், மணிகள் உள்ளே இட்டுச் செய்த சதங்கையும் சிலம்பும் ஒலிக்குமாறு கால்களில் அணியச்செய்து, இரத்தினம் பதித்துச் செய்த ஒளிபொருந்திய மோதிரத்தை விரலில் இட்டுப் புதிய அழகிய மலர் மெத்தையில் கிடத்தி, அலைகள் திரண்ட கடலால் சூழப்பட்ட உலகத்திற்கு இவனே ஒரு திலகமாக ஆவான் என்று போற்றுவார்கள்.

செய்வாய்-செந்நிறம் பொருந்திய. உடு-விண்மீன். பொருவ-ஒப்பாக. பெய்வாய்-உள்ளே இட்டு. ஆழி-மோதிரம். மொய்-நெருங்கிய.

227. வான்மேல் வைத்தசுடர் கிடக்கும் வண்ண வடிவென்பார்
கான்மேல் வைத்ததவம் இனிநன்று இங்கண் காட்டுமென்பார்
நூல்மேல் வைத்துமறை விளக்கு நுண்மாண்ண சுடரென்பார்
நால் மேல் வைத்தபுகழ் விள்ளார் கொண்ட நயம்விள்ளார். 61

குழந்தையைச் சூழ நின்றவர்கள், "விண்ணில் உள்ள சூரியன் இம்மண்ணுலகில் வந்து படுத்திருக்கும் அழகிய உருவமே

இக்குழந்தை" என்று சொல்லுவார்கள். வேறு சிலர் "காட்டில் பொருந்தி இருந்த தவம். இனி நாடாகிய இங்கு நன்றாகப் பொருந்துமாறு காட்டுவான்" என்று கூறுவார்கள். இன்னும் சிலர் "நூல்களுக்கெல்லாம் உயர்வாக வைக்கப்பட்டுள்ள திருமறையை விளக்கிக் காட்டும் நுட்பமான மாண்பினையுடைய ஒளிவிளக்கே இம்மகன்" என்பார்கள். இவ்வாறு நான்கு வகைக்கும் உயர்வாக வைத்து எண்ணப்பட்ட புகழ்ச்சியினைச் சொல்லத்தவற மாட்டார்கள். கொண்ட இன்பத்தையும் சொல்ல முடியாதவர் ஆயினர்.

சுடர்-சூரியன். வடிவு-உருவம். கான்-காடு. விள்ளார்-பேசார். நயம்-இனிமை.

வளன் சனித்த படலம் முற்றுப்பெற்றது.
மூன்று படலங்களுக்கும் பாடல்கள் 227

துன்பத் துடையார்;
ம் ஈண்டுங்கால் ஈண்டும்
பாது செல்வம்

பகலும்
—உம்மைக்
பயத்(து)

94. பிடி அரிசியாவது இல
எளியவர்களுக்குக் கொடுத்து உதவ
இப்படி முன் பிறப்பில் கொடுத்
இவ்வுலகில் உலை வைத்து உண்ண
பிச்சையெடுப்பவர்கள்.

95. மறு பிறப்பிலும் இப்
வாழ்வதன் பெருமை உணர்ந்
வாழுங்கள். அப்படிக் கொடுத்
ஏயப்பட்டால், பிறரிடம் சென்
தானம் தருவதைவிடப் பிச்
சிறப்பானது.

இரவாமை

96. நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்;
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை.

97. பெயற்பால் மழைபெய்யாக் கண்ணும் உலகம்
செயற்பால செய்யா விடினும்—கயற்புலால்
புன்னை கடியும் பொருகடல் தண்சேர்ப்ப!
என்னை உலகுய்யு மாறு.

98. ஏற்றகைம் மாற்றாமை என்னானுந் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதாம் ஆண்கடன்—ஆற்றின்
மலிகடல் தண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகடன் என்னும் பெயர்த்து.

99. இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்றும்
அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க—முறைப்புதவின்
ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோல்
பைய நிறைத்து விடும்.

100. கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்;
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்
அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.

96. ஊருக்குள்ளே ஓர் உயர்ந்த இடத்தில், எல்லோரும் வந்து பயன் பெற்றுச் செல்லுமாறு காய்த்துக் குலுங்கும்—பயனுடைய பனைமரம் போன்றவர்கள், பலரும் விரும்பி வந்து பயன் பெறும்படி பிறர்க்குதவி வாழ்கின்ற பெரியோர்கள். அப்படி இல்லாது, மிகப் பெரிய அளவுசெல்வச் செழிப்பிருந்தும், பிறருக்கு உதவி வாழாதவர்கள், ஒருவருக்கும் பயன் படாது ஊருக்கு வெளியே சுடுகாட்டில் இருக்கும் வெற்றுப் பனைமரம் போன்றவர்கள்.

வேதிகை—உயர்ந்த இடம்; ஏற்றைப்பனை—காய்ப்பில்லாத பனைமரம்.

97. பெய்ய வேண்டிய காலத்தில் மழை பெய்யாது போனாலும், செய்ய வேண்டிய நற்செயல்களை உலக மக்கள் செய்யாது விட்டாலும், கடற்கரையின் மீன் நாற்றத்தைப் போக்கப், பூமணம் தருகின்ற புன்னை மரங்களுடைய நெய்தல் நிலத் தலைவனே! உலகம் எப்படிப் பிழைக்கும், உயிர் வாழும் என்பதை எண்ணிப்பார்! எனவே செய்ய வேண்டிய நற்செயலாகிய தருமத்தைச் செய் என்பது பெறப்படும்.

உய்தல்—உயிர்வாழ்தல்; கடியும்—போக்கும்.

98. பயன் கருதாது, தன்னை நாடி வந்தவர்களுக்குத் தந்துதவுவதே நல்ல ஆண்மகனுக்குரிய இலக்கணமாகும். அப்படி இல்லாமல் குளிர்ந்த கடல் சூழ்ந்த நிலத்துக்குரியவனே, இன்ன உதவியை இவர்க்குச் செய்தால், நாம் இவ்வளவு பயன் பெறலாம் என்றெண்ணி—பலனை எதிர்பார்த்துச் செய்கிற உதவி—ஈகையாகாது. அது கொடுக்கல் வாங்கல் போன்றதே ஆகும்.

கைமாறு—உதவி.

99. இல்லை என்று வருபவர்களுக்கு இல்லை என்று சொல்லாது இயன்ற அளவு - சிறிதாவது கொடுத்துதவுங்கள். இப்படிக் கொடுத்துதவுதலே உயர்ந்த அறம். இப்படிக் கொடுத்துதவும் அறச் செயல் அளவில் சிறிதானாலும், வீடுகள் தோறும் கையேந்தி வருகிறவர்கள் பிச்சைப் பாத்திரத்தில், ஒவ்வொரு வீட்டிலும் சிறிதளவே அரிசி இட்டாலும், அது பெருகிப் பாத்திரம் நிறைந்து விடுவது போல், மிகப் பெரும் சிறப்பைத் தரும்.

ஐயம்—பிச்சை; கடிஞை—பிச்சைப் பாத்திரம்.

100. அறையும் முரசின் ஒலி ஒரு காத தூரம்தான் கேட்கும். முழங்கும் இடி ஓசை பல மைல் தூரம் கேட்கும். ஆனால், அடுத்தடுத்து இருக்கின்ற மூன்று உலகங்களிலும் கேட்கும், ஏழைக்கு உதவிய சான்றோரின் புகழ். பிறர்க்கு உதவி வாழும் பெருங்குணம்—அதனால் வரும் புகழ் அளவிடற்கரியது—எல்லை கடந்தது.

காதம்—பத்துமைல் தூரம்; யோசனை—நாற்பது மைல்

என்றும் பிறப்பாரும் சாவாரும் உளர் - என்றும் - அன்றாடம் பிறத்தலும் இறத்தலும், உலகில் நடை பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இதுதான் உலகம்.

ஞாயிறும், திங்களும், விண்மீன்களும் என்றைக்கும் இருக்கும். நோயும் செய்தொழிலும் அன்றாடம் நடக்கும். கொள்வாரும் கொடுப்பாரும் இருப்பது உலகம். பிறப்பும் இறப்பும் நடந்தபடியே இருக்கும் நாளும் உலகில்.

பிணி - நோய்த்துன்பம். ஒக்கும் - உளவாகும். அன்னார் - உளராவர்.

ஒழுக்கம் உடையவன் உயர்ந்தவன் ஆவான்

இனிதுஉண்பான் என்பான் உயிர்கொல்லாது உண்பான்
முனிதக்கான் என்பான் முகன்ஒழிந்து வாழ்வான்
தனியன் எனப்படுவான் செய்த நன்று இல்லான்
இனியன் எனப்படுவான் யார்யார்க்கே யானும்
முனியா ஒழுக்கத் தவன். 61

இனிது உண்பான் என்பான் உயிர் கொல்லாது உண்பான் - இனியதான நல்ல உணவை இன்று உண்டேன் என்று சொல்லுபவன் யார் என்றால், ஒரு உயிரைக் கொன்று அதன் இறைச்சியை உண்ணாது, மரக்கறி உணவாகிய காய்கறிகளையே உண்டு வாழ்பவனே, நல்லுணவு உண்டவன் என்று சொல்லத் தக்கவன். முனிதக்கான் என்பான் முகன் ஒழிந்தவன் என்பான் - எல்லோராலும் முனிய, அதவது கோபித்து வெறுக்கத் தக்கவன் யார் என்றால்; முகன் ஒழிந்து வாழ்வான் - முகத்தில் மகிழ்ச்சி இல்லாமல், வெறுப்பை உமிழும்-

கடுகடுத்த முகத்தொடு வாழ்பவனே முனியத்தக்கான் ஆவான். தனியன் எனப்படுவான் செய்த நன்று இல்லான் - ஆதரவு யாரும் இன்றித் தனியாக ஒருவன் இருக்கிறான், அவன் யாரெனின், யாருக்கும் எந்த ஒரு நன்மையும் செய்யாதவனே தனியன் எனப் படுவான். இனியன் எனப்படுவான் - இனிமையான குணங்களுடைய நல்லவன் என்பவன்; யார் யார்க்கே யானும் முனியா ஒழுக்கத்தவன் - யார் எவராயிருந்தாலும் அவர் வெறுக்காத நல்ஒழுக்கம், நற்செயல்கள் உடையவன்.

இனிது உண்பான் என்பவன் புலால் உண்ணாதவன். வெறுக்கத்தக்கவன் முகமலர்ச்சி இல்லாத சிடுமூஞ்சி. தனியானவன் எவர்க்கும் எந்த நன்மையும் எப்போதும் செய்யாதவன். இனியன் என்பவன் நல்ஒழுக்கம் உடையவன்.

உயிர்கொல்லாது உண்பான் - புலால் உண்ணாதவன். முனிதல் - வெறுத்தல். முகன் - முகமலர்ச்சி. நன்றில்லான் - நல்லது செய்தல் இல்லான். முனியா - வெறுக்கப்படாத. 'முனியா உள்ளத்தவன்' என்றும் பாடம் உண்டு.

ஈத்து உண்பான் இசை பெறுவான்

ஈத்துஉண்பான் என்பான் இசைநடுவான் மற்றவன்
கைத்துஉண்பான் காங்கி எனப்படுவான் - தெற்ற
நகையாகும் நண்ணார் முன்சேறல் பகைஆகும்
பாடு அறியாதானை இரவு. 62

ஈத்து உண்பான் என்பான் - பிறருக்குக் கொடுத்து உதவித் தானுண்டு மகிழ்பவன், இசை நடுவான் - இவ்

நெருப்பு அழல் நெய் விதிர்ப்ப நந்தும் பூதம்
செய்வோர் வளர்க்கும் வேள்வித்தீயின் நெருப்புச் சுட
நெய் சொரியச்சொரிய வளர்ந்து கொழுந்துவிட்டு எரியுப்
சேர்ந்து வழுத்த வரம் கொடுப்பர் நாகர் - அவர்களை
அடைந்து போற்றித் தொழத் தேவர்கள் வேண்டு
வரங்களைத் தருவர். தொழுத்திறந்து கன்றூட்ட நந்
கறவை - தொழுவத்தைத் திறந்துவிட்டுக் கன்றை ஊ
பக கொடுக்கும் பால் பெருகும். கலம் பரப்பி ந
ஊட்ட நந்தும் விருந்து. இலை போட்டு வரவேற்று
முகத்தோடு உபசரித்துப் பரிமாறி உண்பிக்க விருந்
மனம் களிப்பெய்தும்.

நெய்விட நெருப்புச் சுடர் ஓங்கும். வழுத்
தருவர் தேவர். கன்றூட்டப் பால் பெருக்கும்
கலம்பரப்பி வரவேற்க வந்த விருந்து மகிழும்.

விதிர்ப்ப - சொரிய. நந்தும் - வளரும். நெரு
- தீச்சுடர். வழுத்த - தொழுது வணங்க. வரம்
நாகர் - தேவர். தொழு - மாட்டுக் கொட்டில். க
கன்றை ஊட்டவிட. நந்தும் - பெருகும். கறவை
கலம் - உண்கலம். பரப்பி - விரித்து. நன்றூட்ட
உணவளிக்க.

முயற்சி

பொருளால் ஆக்கம் வரும், ஆ

பழிஇன்மை மக்களால் காண்க ஒருவ
கெழிஇன்மை கேட்டால் அறிக - பொ
நிகழ்ச்சியால் ஆக்கம் அறிக புகழ்ச்சி
போற்றாதார் போற்றப் படும்.

Scanned by TapScanner

விரும்பப்படும் கண்களாகும்) பெண்ணின் உருவின்றி
மாண்ட உடலும் - பெண்மக்களுக்குள்ளேயும், தோற்றப்
பொலிவு, அழகு இல்லை என்றாலும்...

பிறப்பு மூப்பால் பெருமை வராது

திரிஅழல் காணின் தொழுப விறகின்
எரிஅழல் காணின் இகழ்ப - ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமை பாராட்டும் உலகு. 66

திரிஅழல் காணின் - சுடர்விட்டு எரியும் விளக்குத் திரியின் ஒளியைக் கண்டால், தொழுப - கைகூப்பி வணங்குவர். விறகின் எரி அழல்காணின் - விறகுக் கட்டையில் பற்றவைத்த எரியும் நெருப்பு அளவில் பெரிதாக இருந்தாலும், அதை யாரும் தொழமாட்டார்கள். இகழ்ப - மதிக்கமாட்டார்கள். ஒரு குடியில் - ஒரே குடும்பத்தில் பிறந்த, கல்லாத மூத்தானைக் கைவிட்டு - கல்வி அறிவு பெறாத வயதால் மூத்த பெரியவனை விட்டுவிட்டு, கற்றான் இளமை பாராட்டும் உலகு - படித்தவன் அக்குடும்பத்தில் இளையவன், சிறியவனாய் இருந்தாலும், அவனை இவ்வுலகத்தார் பாராட்டுவர்.

விளக்கில் எரியும் சுடர் வணங்கப்படும். விறகில் பற்றிய நெருப்பு இகழப்படும். கல்வி அறிவில்லாத மூத்தவனை மதியாது, கற்றறிந்தவன் இளையவன் ஆயினும், அவனையே உலகம் பாராட்டி மகிழும்.

அழல் - நெருப்பு. இகழ்ப - மதியார். ஒரு குடியில் - ஒரே குடும்பத்தில் மூத்தான் - பெரியவன். கைவிட்டு - விலக்கிவிட்டு. இளமை - இளையவன்.

திருமகள் அருள் எல்லாம் தரும்

கைத்துடையான் காமுற்றது உண்டாகும் வித்தின்
முளைக்குழாம் நீருண்டேல் உண்டாம் - திருக்குழாம்
ஒண்செய்யாள் பார்த்துறின் உண்டாகும் மற்றவள்
துன்புறுவாள் ஆகின் கெடும். 67

கைத்து - கைப்பொருள். உடையான் - வைத்திருப்பவன், கைப்பொருளாகிய செல்வம் உடையவன், காமுற்றது உண்டாகும் - விரும்பியது எல்லாம் கிடைக்கும் (காமம் - விருப்பம். காமுறு - விரும்பும் எனப் பொருள் தரும் பகுதிச் சொல்) வித்தின் முளைக்குழாம் - விதைக்கப்படும் விதைகள் எல்லாம், நீர் முளைக்க உண்டேல் உண்டாம் - தண்ணீர் இருந்தால் முளைத்துக் தழைப்பது நடக்கும். திருக்குழாம் - செல்வவளம், ஒண்செய்யாள் பார்த்துறின் உண்டாம் - அருள்விளக்கம் உடையவளாகிய பொருட்செல்வி திருமகள் கடைக்கண் நோக்கிருந்தால் உண்டாகும். மற்று அவள் துன்புறுவள் ஆகில் கெடும் - அப்படி அவள் அருள்நோக்கம் இல்லாது வெறுப்புடையவளாகில், உண்டான செல்வம் முற்றும் அழிந்தே போகும்.

பொருள் இருந்தால் எல்லாம் பெறலாம். நீர் இருந்தால் விதை முளைக்கும். அதுபோலத் திருமகள் அருளிருந்தால் செல்வ வளம் சேரும். இன்றேல் இருக்கும் செல்வமும் அழிந்துவிடும்.

வித்து - விதை முளைக்குழாம் - முளைகளின் கூட்டம் நிறைய விதைகள் என்பதைக் குறித்தது குழாம் எனும் சொல். முளை - விதைப்பகுதியில் முளைக்கும் போது

தோன்றுவது. முளை - முளைப்பது. திருக்குழாம் - செல்வ வளம். செல்வக்கூட்டம் (திரு - செல்வம். குழாம் - கூட்டம்) என்றது செல்வம் வரும்போது சேரும் பதவி புகழ் பாராட்டைக் குறித்துச் சொன்னது. ஒண் - விளக்கம். செய்யாள் - திருமகள். செம்மை அடியாகப் பிறந்தது. ஆள் - விருதி பார்த்துறின் - கடைக்கண் வைத்தால். மற்று - அல்லாது.

சீரும் சிறப்பும் மேலோர் பெருமை

ஊனுண்டு உழுவை நிறம்பெறூஉம் நீர்நிலத்துப்
புல்லினான் இன்புறூஉம் காலேயம் - நெல்லின்
அரிசியான் இன்புறூஉம் கீழ்எல்லாம் தத்தம்
வரிசையான் இன்புறூஉம் மேல். 68

உழுவை - புலியானது, ஊன்உண்டு - உயிர்கொன்று, அதன் ஊன்தின்று கொழுத்து, மேல் தோல் அழகிய நிறமுடையதாகப் பெறும். நீர்நிலத்து - ஈரப்பாங்கான நிலத்தில் வளரும், புல்லினால் காலேயம் இன்புறூஉம் - பசும்புல்லை உண்டு பசுக்கூட்டம் மகிழ்ந்திருக்கும், நெல்லின் அரிசியால் - நெற்பயிர் தரும் அரிசி கொண்டு ஆக்கிய சோற்றை உண்டு. கீழ் எல்லாம் இன்புறூஉம் - கீழ்மக்கள் இன்புற்றிருப்பர். மேல்-மேல்மக்கள், தத்தம் வரிசையால் இன்புறூஉம் - தங்களது தகுதிகளையும் பெருமைகளையும் எண்ணி அடையும் மனநிறைவால் மகிழ்ச்சி பெறுவர்.

ஊன் உண்டு புலிகொழுக்கும். பசும்புல் மேய்ந்து பசுக்கூட்டம் வாழும். நெல்லரிசிச் சோறுண்டு கீழ்மக்கள் மகிழ்வர். தம் தகுதி பெருமைகளால் வரும் மன நிறைவில் மேல் மக்கள் மகிழ்ந்திருப்பர்.

ஊன் - இறைச்சி. நிறம் - அழகு. ஊன் உண்டு வயிறு நிறைய மேல்தோல் வாடிச் சுருங்காது வளமோடிருப் பதைச் சுட்டியது ஊன் உண்டு நிறம் பெறுதல் என்றது. நீர்நிலம் - நீர்ப்பாங்கான நிலம். காலேயம் - பசுக்கூட்டம். கீழ் - கீழ்மக்கள். வரிசை - தகுதி. இன்புறூஉம் - மகிழும்.

ஆசைக்கு அணை போட இயலாது

பின்னவாம் பின்அதிர்க்கும் செய்வினை என்பெறினும்
முன்னவாம் முன்னம் அறிந்தார்கட்கு - என்னும்
அவாவாம் அடைந்தார்கட்கு உள்ளம் தவாஆம்
அவாவிலார் செய்யும் வினை. 69

பின் - பின்னர், அதாவது ஒன்றைச் செய்யத் தொடங்கிய பின்பு, அதிர்க்கும் செய்வினை - நடுக்கமுறச் செய்யும் இடையூறுகள் செய்யும் தொழிலுக்கு வரும் தடைகள், பின்னஆம் - பின்னால் தோன்றுவனவாம். அதாவது தொடங்குவதற்கு முன்னமேயே செய்யப் போவதன் நன்மை தீமைகளை அலசி ஆராயாமல், தொடங்கிவிட்டுப் பின் இடர்ப்படுகிறவர்களுக்கு வருகின்ற இடையூறுகளாம். என் பெறினும் - எத்தகைய பலனை அடைவதாக இருந்தாலும், முன்னம் - தொடங்குவதற்கு முன்பேயே, அறிந்தார்கட்கு - நன்மை தீமைகளை நன்கு ஆராய்ந்து அறியும் திறம் உடைய வர்களுக்கு, முன்னஆம் - வரும் இடையூறுகள், தடைகள் முன்னமேயே தோன்றுவனவாம். அடைந்தார்கட்கு உள்ளம் என்னும் - ஒரு பொருளை விரும்பி அடைந்து விட்டவர்கள் மனம், எப்போதும், அவாஆம் - மேலும் மேலும் அடைவதற்கு ஆசைப்படுவதாகவே இருக்கும்.

Scanned by TapScanner

அவாஇலார் - எப்பொருள்மீதும் ஆசை - பற்று வைக்காத சான்றோர்கள். செய்யும் வினை - செய்கின்ற நற் செயல்கள்; தவாஆம் - என்றும் கேடு அடையாதனவாம்.

ஆராய்ந்து பார்க்காமல் ஒன்றைத் தொடங்கி விடுவோர் அதனால் வரும் இடையூறுகளைத் தொடங்கிய பின்னரே உணர்வர். ஆராய்ந்து பார்த்து ஒன்றைத் தொடங்குவோர்க்கு இது, அதாவது அதனால் வரும் நன்மை தீமை முன்கூட்டியே தெரிந்துவிடும். ஒன்றை விரும்பிப் பெற்றவர்கள் மேலும் மேலும் பற்றுக் கொண்டு பொருள் பெற ஆசைப்படுவர்; அதற்கான முயற்சியில் ஈடுபட்ட வண்ணம் இருப்பர். ஆனால், ஆசைகளை விட்டொழித்த பெரியோர்களின் தன்னல மற்ற நற்செயல்கள் கேடடைவதில்லை, எவர்க்கும் கேடுபயப்பதும் இல்லை.

பின்னஆம் - பின் தோன்றுவனவாம். அதிர்க்கும் - மனம் நடுங்கச் செய்யும். செய்வினை - செய்யப் புகுந்த தொழில். முன்னம் - முன்னமேயே தெரிய வருவனவாம். என்னும் - எப்படியும். அவாஆம் - மேலும் ஆசை கொள்ளச் செய்யுமாம். தவாஆம் - கேடுஅடைவதாம். அவாஇலர் - ஆசைப்படுதல் இல்லாதவர்கள். செய்யும் வினை - செய்கின்ற நற்செயல்கள்.

வைத்து இழப்பதிலும் வறுமை மேல்

கைத்தில்லார் நல்லவர் கைத்துண்டாய்க் காப்பாரின்
வைத்தாரின் நல்லர் வறியர் - பைத்துஎழுந்து
வைதாரின் நல்லர் பொறுப்பவர் செய்தாரின்
நல்லர் சிதையா தவர். 70

கைத்து - கைப்பொருள், உண்டாய் பெற்றிருப்ப வராய், காப்பாரின் கைத்து இல்லார் நல்லவர் - காத்துக் கொண்டிருப்பவரைக் காட்டிலும், அதாவது கையிலே பணத்தை வைத்துக் கொண்டு, பிறர்க்கு உதவாது அதைக் காப்பாற்றத்துன்பப்பட்டுக் கொண்டிருப்பவர்களைவிட, கையில் பொருள் ஒன்றும் இல்லாதவர் மேலானவர். வைத்தாரின் - பொருளை வைத்திழப்பவர்களை விட, வறியர் நல்லர் - பொருளே இல்லாத வறியவர்களே நல்லவர். பைத்து எழுந்து - மிகவும் சினம்கொண்டு, வைதாரின் நல்லர் பொறுப்பவர் - வைதவர்களைக் காட்டிலும், அவ் வசவுகளைப் பொறுத்துக் கொண்ட வர்கள் மிகவும் நல்லவராவர். செய்தாரின் - நன்மை செய்தவர்களைவிட; சிதையாதவர் நல்லர் - தமக்கு ஒருவர் செய்த நன்மையை மறவாது நினைவில் கொண்டிருக்கும், நன்றி உடையோர் மிகவும் மேலானவர்.

ஒரு பயனும் இன்றிச் செல்வத்தைக் காத்துக் கொண்டிருப்பதைவிடச் செல்வமே இல்லாதிருப்பது நல்லது. பொருளை வைத்திழப்பவர்களைவிட வறிய வர்கள்மேல். வெகுண்டெழுந்து கோபிப்பவர்களை விடக் கோபத்தைத் தாங்கிக் கொள்பவர் நல்லவர். உதவி செய்தவரைவிடச் செய்த உதவியை மறவாதிருப்பவர் மேலானவர்.

காப்பார் - காவல் காத்திருப்பவர். கைத்து - கைப்பொருள். வைத்தார் - பொருளை வைத்திருந்து பின் இழப்பவர்கள். வறியர் - பொருள் இல்லாதவர். பைத்து - சினந்து. (பை - நச்சுப்பை உடைய பாம்பு. பைத்தல் - படம் விரித்தல். பாம்பு சினம் கொண்டால் சீறிப் படமெடுக்கும்)

Scanned by TapScanner

அறிவாற்றல் உடையவராய் இருத்தலும் ஆகிய இம் மூன்றும்; பழுத்த அறிவாலுயர்ந்த பெருமக்கள் செயல்களாகும்.

வெகுளி - சினம். நனுக்கும் - அடக்கும். விறல் - வலிமை. ஒத்த - இசைவான. பாத்துண்ணும் - பகுத்துண்ணும். தலைப்படல் - ஈடுபடல். தொல்லறிவாளர் - அறிவால் மூத்தோர்.

சினம் காத்துக் கொள்ளுதல், மகளிர் மனம் ஒத்து வாழ்தல், பகுத்துண்டு வாழும் நல்லறிவு இம்மூன்றும்; தொல்லறிவுடைய பெரியோர் செயல்.

திரிகடுகம் ஆசிரியர் நல்லாதனார்

தலையாய பண்பு இம்மூன்றும்

அலந்தார்க்கு ஒன்று ஈந்தபுகழும் துளங்கினும்
தன்குடிமை குன்றாத் தகைமையும் - அன்போடி
நான்நாளும் நட்டார் பெருக்கலும் இம்மூன்றும்
கேள்வியுள் எல்லாம் தலை. 41

இல்லாது துன்பப்படுகிறவர்களுக்கு ஒன்றைக் கொடுத்து உதவுவதால் வரும் புகழும், துன்புற்று வருந்திக் கலங்குகின்ற காலத்திலும் தன் குலப்புகழ் கெடாது வாழும் தன்மையும், அன்பு மிகக் கொண்டு அன்றாடம் நண்பர்கள் கூட்டத்தைப் பெருக்கிக் கொள்வதும் ஆகிய இம்மூன்றும்; சொல்லப்படும் உயர்பண்புகள் எல்லாவற்றிலும் மேலான தலைமைப் பண்பாகும்.

அலந்தார் - வருத்தப்படுபவர். ஈந்த - தந்துதவிய. துளங்கினும் - கலக்கமுற்றாலும். குடிமை - குலவொழுக்கம். குன்றா - குறையா. தகைமை - தன்மை. அன்புழுடி - அன்பு கொண்டு. நாளும்நாளும் - அன்றாடம். நட்டார் - நண்பரானவர். கேள்வி - பேச்சு.

துன்பப்படுபவர்களுக்கு கொடுத்துதவும் குணமும் குடிப்புகழை எந்த நிலையிலும் தாழவிடாத இயல்பும், நண்பர்கள் கூட்டத்தை நாள்தோறும் பெருக்கிக் கொள்ளும் தன்மையும் ஆகிய இம்மூன்றும் ஒருவருக்குத் தலையாய பண்புகளாகும்.

வேளாளர் குடிக்கழகு இம்மூன்றும்

கழகத்தால் வந்த பொருள் காமுறாமை
பழகினிலும் பார்ப்பனரைத் தீப்போல் - ஒழுகல்
உழவின்கண் காமுற்று வாழ்தல் இம்மூன்றும்
அழகென்ப வேளாண் குடிக்கு. 42

சூதாடிப் பெற்ற செல்வத்தை அடைய விரும்பாமையும், பல காலம் பழக்கம் இருந்தாலும், பார்ப்பனரிடம் தீயோடு பழகுவதுபோல, (அணுகாது அகலாது குளிர் காய்வோர் தீயிடம் இருப்பதுபோல, நெருங்கினால் தீ சுடும். விலகினால் குளிர்போக்கும் சூடு கிட்டாது.) அளவான தூரத்தில் வைத்து அவர்களோடு பழகுவதும், உழவுத் தொழிலை விரும்பி மேற்கொண்டு வாழ்தலும் ஆகிய இம்மூன்றும்; வேளாளர் குலத்துக் அழகென்பர் அறிவுடையோர்.

கழகத்தால் - சூதாட்டத்தால். காமுறாமை - விரும்பாமை. தீப்போல - தீயிடம் மிக நெருங்காமலும், விலகி வெகுதொலைவு போய்விடாமலும், அளவாகப் பயன்படுத்துக் கொள்வதுபோல. ஒழுகல் - நடத்தல். உழவின்கண் - பயிர்த்தொழிலில். காமுற்று - விரும்பி. வேளாண்குடி - வேளாளர்குலம்.

சூதாட்டத்தால் வரும் பொருள் விரும்பாமை, பார்ப்பனரிடம் தீப்போல பழகுதல், உழவுத்தொழிலை விரும்புதல் இம்மூன்றும் வேளாளர் குடிக்கழகு

வாயின் அடங்குதல் துப்புரவாம் மாசற்ற
செய்கை அடங்குதல் திப்பியமாம் - பொய்இன்றி
நெஞ்சம் அடங்குதல் வீடாகும் இம்மூன்றும்
வஞ்சத்தின் தீர்ந்த பொருள். 43

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம் பொறிகள் வழியாகவும் உண்டாகும் ஆசையை அடக்குதல் இப்பிறப்பில் பெரும் செல்வப்பேறாகும், குற்றமற்ற செயல்களாகும். ஐம்புலன்களின் செய்கை களான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் இவற்றின் வழி அவை செல்லவிடாது தடுத்து அடக்கி ஆளுதல் மறுபிறப்பில் தெய்வப்பிறப்பை அடையச் செய்யும். பொய்யாக இல்லாது உண்மையாகவே மனம் அடங்கப் பெறுதல் முத்தி இன்பம் தருவதாகும். இந்த மூன்று வகை அடக்கமும் பொய்யில்லாத மெய்ப்பொருள் களாகும்.

வாயின் - ஐம்பொறி வழியாக. துப்புரவு - பிறவிப்பேறு. மாசற்ற குற்றமற்ற. செய்கை - ஐம்புலன்களின் நாட்டம். திப்பியமாம் - தெய்வத்தன்மை உடையதாம். நெஞ்சம் அடங்குதல் - மனம் அடங்கப் பெறுதல். வீடாகும் - முத்தி யளிக்கும். இவை மூன்றும் பொய் இல்லா மெய்ப்பொருள்கள் ஆகும்.

மனம் வாக்கு பொறிபுலன்களின் அடக்கம் மூன்றும் முத்திக்கு வித்தாகும் மெய்ப்பொருளாகும்.

நோய்த் துன்பம் இம்மூன்றும்

விருந்தின்றி உண்ட பகலும் திருந்திழையார்
புல்லப் புடைபெயராக் கங்குலும் - இல்லார்க்குஒன்று

ஈயாது ஒழிந்தகன்ற காலையும் இம்மூன்றும்
நோயே உரன் உடையார்க்கு. 44

விருந்தினர் யாரும் உடனிருந்து உண்ணாமல் தான் மட்டுமே தனித்திருந்து உணவு உண்ட பகல்பொழுதும், திருத்தமான - அழகிய அணிமணிகள் புனைந்த மனைவி யுடன் கூடி மகிழாது கழிந்த இரவுப் பொழுதும், எதும் இல்லாத ஏழை எளியவர்களுக்கு ஒன்றும் கொடுத்து தவாது வீணே கழிந்த காலைப் பொழுது ஆகிய இம்மூன்றும்; அறிவார்ந்த பெருமக்களுக்கு நோய்போலத் துன்பம் தருவனவாம்.

திருந்திழையார் - திருத்தமான அழகிய அணி மணிகள் புனைந்த பெண் (மனைவி) புல்லா - தழுவாமல். புடைபெயரா - நீங்காத. கங்குல் - இரவு. ஈதல் - தருதல். ஒழிந்தகன்ற - முடிந்துபோன. உரன் உடையார் - அறிவுடையார்.

விருந்தோடு உண்ணாத பகலும், பொருந்திய மனைவியுடன் கூடி மகிழாது போகும் இரவும். இல்லாத வர்க்கு ஈந்துவக்கும் இன்பம் பெற இயலாது கழியும் காலையும் அறிவுடையார்க்கு நோய் போலத் துன்பம் தருவனவாம்.

இம்மூவர் நரகம் போவர்

ஆற்றானை ஆற்றென்று அலைப்பானும் அன்பின்றி
ஏற்றார்க்கு இயைவ கரப்பானும் - கூற்றம்
வரவுண்மை சிந்தியா தானும் இம்மூவர்
நிரயத்துச் சென்றுவீழ் வார். 45

ஒன்றைச் செய்ய இயலாத நிலையில் உள்ள வலிமை அற்றவன், திறமை இல்லாதவன் பொருள்

வருவாய் இல்லாத எளியவன் என்றுள்ள ஒருவனை, அவனால் செய்ய இயலாத அந்தச் செயலைச் செய்து முடிக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தித் துன்பத்திற்கு உள்ளாக்குபவனும், உள்ளத்துள் ஒரு துளியும் அன்பில்லாது, தன்னிடம் இல்லை என்று வந்து கேட்பவர்க்கு, இயன்றதைக் கொடுத்துதவாமல், உள்ளதை மறைத்து 'இல்லை' என்பானும், எப்படியும் என்றாவது ஒரு நாள் யமன் வருவான், உயிர்போகத்தான் வேண்டும் என்ற உண்மையை எண்ணிப் பார்க்காதவனும் - ஆகிய இம்மூவரும்; நரகம் போய்ச் சேர்வர்.

ஆற்றான் - முடியாதவன். ஆற்றென்று - செய்யச் சொல்லி. அலைப்பான் - வருத்துபவன். ஏற்றார்க்கு - இரப்பவர்க்கு. இயைவ - முடிந்ததை. கரப்பானும் - மறைப்பவனும். கூற்றம் - யமன். வரவுண்மை - வரும் என்ற உண்மை. சிந்தியாதானும் - எண்ணிப் பார்க்காதவனும். நிரயம் - நரகம்.

ஒன்றைச் செய்ய இயலாதவனை, அதை செய்யச் சொல்லி வருத்துபவன், இல்லை என்று கேட்டு வருவோர்க்கு இயன்றதைக் கொடுத்துதவாமல், தன்னிடமும் ஏதுமில்லை என்று மறைப்பவனும், மரணம் ஒரு நாள் வரும் என்பதை (அதற்குள் நல்லவற்றை செய்து முடிக்க வேண்டும் என்று) எண்ணாதவனும் ஆகிய இம்மூவரும் நரகக்குழிக்குள் போய் விழுவர்.

பயனில இம்மூன்றும்

கால்தூய்மை இல்லாக் கலிமாவும் காழ்கடிந்து
மேல்தூய்மை இல்லா வெங்களிறும் - சீறிக்
கறுவி வெகுண்டுரைப்பான் பள்ளி இம்மூன்றும்
குறுகார் அறிவுடையார். 46

நடையில் ஒழுங்கு இல்லாத குதிரையும், கட்டுத்தறியை முறித்துக் கொண்டு வரும், மேலமர்ந்து செலுத்த இயலாதபடிச் சினம் கொண்ட மூர்க்கமான யானையும், கற்கவரும் மாணவர்களிடம் ஆத்திரமும், பகையும், கோபமும் கொண்டு கற்பிக்கும் ஆசிரியன் இருக்கும் பள்ளியும் ஆகிய இம்மூன்றும்; அறிவுடையோர் நெருங்க நினைக்காத இடங்களாகும்.

கால் - நடை. தூய்மை - ஒழுங்கு. நல்லகுதிரைக்கு அடையாளம் அதன் நடை. மெல்லிய நடை, இருகால் பாய்ச்சல், வளைந்தோடல், வேகம் என நான்கும் நல்ல குதிரைக்கு அடையாளங்கள். இதைக் குறித்ததே 'கால்தூய்மை' எனும் தொடர். காழ் - கட்டுத்தறி. கடிந்து - முறித்துக் கொண்டு. மேல்தூய்மை - மேலே அமர்ந்து செல்ல இயலாத. வெங்களிறு - கொடிய (மதம் கொண்ட) யானை. சீறி - ஆத்திரம் அடைந்து. கறுவி - பகைத்து. வெகுண்டு - கோபித்து. உரைப்பான் - போதிக்கும் ஆசிரியன். பள்ளி - கல்விக்கூடம். குறுகார் - சேரமாட்டார்.

நடையழகு இல்லாத குதிரை, ஏறி அமர்ந்து செலுத்தும் பாங்கில்லாத யானை, அன்போடு கற்பிக்கும் ஆசிரியன் இல்லாத பள்ளி, ஆகிய இம்மூன்றும்; இருந்தும் இல்லாதது போலவே பயனற்றவைதான்.

காப்புக்கு உரிய இம்மூன்றும்

சில்சொல் பெருந்தோள் மகளிரும் பல்வகையும்
தாளிலாள் தந்த விழுநிதியும் - நாடோறும்
நாத்தளிர்ப்ப ஆக்கிய உண்டியும் இம்மூன்றும்
காப்பிகழல் ஆகாப் பொருள். 47

மென்மையான சொற்கள் பேசும், பருத்த தோள்கள் உடைய பெண்களும், பல வழிகளிலும் முயன்று தேடிய சிறந்த செல்வமும், அன்றாடம், நாக்கில் (உண்ணும் உணவின் சுவை, மணம் இவற்றால்) நீர் ஊறும்படிச் சமைத்த உணவும் ஆகிய இம்மூன்றும்; காப்பாற்றப்பட வேண்டியவை என்பதில் கவனப் பிசகிருக்கக் கூடாது.

சில - மென்மை. சில தாள் - முயற்சி. தந்த - தேடிய விழுநிதியம் - உயர்ந்த செல்வம். நாத்தளிர்ப்ப - நாக்கில் எச்சில் ஊற. உண்டி - உணவு. காப்பு - காப்பாற்றுதலில். இகழல் - இகழ்தல். தாழ்வாகக் கருதுதல். ஆகா - ஆகாது.

பண்புடைய பெண்கள், பாடுபட்டுத் தேடி செல்வம், பக்குவமாகச் சமைத்த உணவு - இம்மூன்றும் இகழ்தலுக்கு உரியன அல்ல, காத்துக் கொள்ளத் தக்கன.

மெய் அறிவார் இம்மூவர்

வைததனை இன்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும் - ஊறிய
கைப்பதனைக் கட்டியென்று உண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டு வாழ்வார். 48

தன்னை ஒருவன் தீச்சொல் கூறித் திட்டினாலும் அதை - அந்த வசவுகளை இனிய சொல்லாக ஏற்றுக் கொள்பவனும், நெய்விட்டு ஆக்கிய நெய்ச்சோறு என்று பருகத் தந்த கூழ் - கஞ்சியை ஏற்றுப் போற்றுபவனும், கசப்பான ஒன்றைத் தந்தாலும் அதை வெல்லக் கட்டி என்று நாக்கில் எச்சில் ஊற ஏற்று உண்பவனும் ஆகிய இம்மூவரும்; மெய்ப்பொருளை அறியும் மனப் பக்குவம் பெற்றவர்களாவர்.

வைததனை - வசவுகளை. பெய்து - இட்டு. மதிப்பான் - ஏற்றுப் போற்றுபவன். கைப்பு - கசப்பு. கட்டி - வெல்லக்கட்டி. மெய்ப்பொருள் - பரம்பொருள், உண்மைப் பொருள்.

வசவையும் இன்சொல்லாகக் கொள்பவன், கூழையும் நெய்ச்சோறாக ஏற்பவன், கசப்பையும் இனிப்பாகக் கருதி உண்பவன் என்னும் இம்மூவரும்; பரம்பொருளை உணரும் பக்குவப்பட்ட மனம் உடையவர்கள்.

இம்மைக்கு உதவார் இம்மூவர்

ஏவது மாற்றும் இளங்கிளையும் காவாது
வைதெள்ளிச் சொல்லும் தலைமகனும் - பொய்தெள்ளி
அம்மனை தேய்க்கும் மனையாளும் இம்மூவர்
இம்மைக்கு உறுதி இல்லார். 49

பெற்றோர் செய்யச் சொல்லிப் பணிக்கின்ற எந்தச் செயலையும், தன்னால் செய்ய இயலாது என்று மறுக்கின்ற இளைஞனான மகனும், மனைவியைப் போற்றாது வைது இகழ்ந்து ஏளனமாகப் பேசுகின்ற கணவனும், பொய்யைத் தேடிக் கண்டுபிடித்துச் சொல்லி, தான் வாழவந்த வீட்டின் பெருமையை அழிக்கின்ற மனையாளும் ஆகிய இம்மூவரும்; இப்பிறவிக்கு - இவ்வுலக வாழ்வுக்கு உற்ற துணையாகார்.

ஏவு - கட்டளையிடும் ஆறும் - எதையும். வைது - திட்டி. எள்ளி - இகழ்ந்து. பொய்யைத் தேடிப் பிடித்து. மனை - வீடு. தேய்க்கும் - அழிக்கும். இம்மை - இப்பிறவி. உறுதி - உற்ற துணை.

தந்தை சொல் கேளாத தனையன், தன் மனைவியை ஏசும் கணவன், வீணாகப் பொய் பேசி வாழ்வந்த வீட்டின் பெருமையை அழிக்கும் மனையாள் ஆகிய இம்மூவரும்; இப்பிறப்புக்கு உற்றதுணை ஆகமாட்டார்.

பாவிகள் இம்மூவர்

கொள்பொருள் வெஃகிக் குடிஅலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந்து எல்லை கடப்பாளும் இம்மூவர்
வல்லே மழைஅருக்கும் கோள். 50

தான் கொள்ள வேண்டிய பொருளை, மக்களைத் துன்புறுத்தி வருந்தச் செய்து கவர்ந்து கொள்கின்ற அரசனும், உள்ளதை உள்ளபடிச் சொல்லாமல் மாற்றிப் பொய்யைச் சொல்லுகின்ற மக்களும் குடும்பத்தில் இருந்து கொண்டு, கணவனுக்கு மனைவி என்ற எல்லை கடந்து தான்தோன்றித்தனமாக நடக்கின்ற பெண்களும் ஆகிய இம்மூவரும்; விரைந்து பெய்யும் வான மழையைக் குறையச் செய்யும் கோள்களுக்கு ஒப்பானவர்கள்.

கொள் - கொள்ளுகின்ற. வெஃகி - விரும்பி. குடி - குடிமக்கள். அலைக்கும் - வருத்தும். சலமொழி - பொயவார்த்தை. இல் - குடும்பம். வல்லே - விரைந்து. அருக்கும் - குறையச் செய்யும். கோள் - கிரகம்.

குடிகளை வருத்திப் பொருள் கொள்ளும் அரசன், பொய் பேசும் மக்கள், குடும்பப்பாங்கில்லாத பெண் இம்மூவரும் இருக்கும் நாட்டில், மழைவளம் குன்றும்.

இம்மூவர் தன்மை இது

தூர்ந்தொழுகிக் கண்ணும் துணைகள் துணைகளே
சார்ந்தொழுகிக் கண்ணும் சலவர் சலவரே
ஈர்ந்தகல் இன்னாக் கயவர் இவர்மூவர்
தேர்ந்தக்கால் தோன்றும் பொருள். 51

வரும் பொருள் தடைபட்டு, வறுமையுற்ற நிலையில் அவருக்கு துணையாக உதவக்கூடிய துணை உறவினர்களே! தன் கருத்துக்கு ஒத்தவராக உடன் பழகினாலும் பகைவர் என்றும் பகைவரே! ஒருவருக்குத் துன்பம் தருகின்ற கீழ்மக்கள் இரண்டாகப் பிளக்கப்பட்ட கல் போன்றவர்கள். (இவர்கள் என்றும் ஒன்று சேர மாட்டார்கள் என்பது குறிப்பு.) இம்மூவரும்; அறிவார்ந்த பெருமக்கள் ஆராய்ந்து தெளியும் பொருள்களாவர்.

தூர்ந்து - (வருமானம்) நின்று. ஒழுகக் கண்ணும் - வாழும் நிலையில். சலவர் - பகைவர். ஈர்ந்த - பிளவுபட்ட. இன்னா - துன்பம். கயவர் - கீழ்மக்கள்.

வறுமைப்பட்ட போது உதவ வருபவர் உற்றாரே சேர்ந்து பழகினாலும் பகைவர் பகைவரே. தீயவர்களான கீழ்மக்கள் என்றும் ஒன்று கூடார். இம்மூவர் செயலும் அறிவுடையோர் ஆய்ந்தறிவர்.

அழகு இம்மூன்றும்

கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம் காமுற்ற
பெண்ணுக்கு அணிகலம் நாணுடைமை - நண்ணும்
மறுமைக்கு அணிகலம் கல்வி இம்மூன்றும்
குறியுடையார் கண்ணே உள. 52

ஒற்றுமை இல்லா ஊர்

நண்பரின் துயர் காணல், பகையாளர் பெருமிதம், ஒற்றுமை இல்லாஊர், சூதுவிரும்பல், இவை யாவும் இடர் கொடுக்கும்.

25. நட்டார் இடுக்கண்¹ தனிகாண்டல்² நன்கின்னா;
ஒட்டார் பெருமிதம் காண்டல் பெரி(து)இன்னா;
கட்(டு)இலா மூதூர் உறைஇன்னா; ஆங்கின்னா
நட்ட கவற்றினால் சூது.

(ப-ரை.) நட்டார் - நண்பருடைய, இடுக்கண் - துன்பங்களை, தனி காண்டல் - தனியாகப் பார்த்தல், நன்கு இன்னா - மிகவும் துன்பமாம்; ஒட்டார் - பகைவரது, பெருமிதம் - செருக்கை, காண்டல் - பார்த்தல், பெரிது இன்னா - மிகவும் துன்பமாம்; கட்டு இலா - ஒற்றுமை இல்லாத, மூதூர் - பழைய ஊரில், உறை - வாழ்தல், இன்னா - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, நட்ட - விரும்பப்படுகின்ற, கவற்றினால் - பாய்ச்சினால் ஆடும், சூது - சூதாட்டம், இன்னா - துன்பமாகும்.

(க-ரை.) நண்பரின் துன்பத்தைக் காணலும், பகைவரது செருக்கைப் பார்த்தலும், ஒற்றுமையில்லாத ஊரில் வாழ்தலும், சூதாடலை விரும்பலும் துன்பமாகும்.

ஒட்டார்: ஒட்டு + ஆர், பகைவர்; காரணப் பெயர். கட்டு - சுற்றம்; கட்டுப்பாடு; ஒற்றுமை முதலிய பொருளில் பொருந்துவதை ஏற்க. நட்ட - நள் எனும் பகுதியடியாகப் பிறந்த பெயரெச்சம். கவறு - பாய்ச்சி; தாயக்கட்டை. 'நட்ட கவற்றினால் சூது இன்னா' எனும் கருத்தை 'கவறும் கழகமும் கையும் தருக்கி - இவறியார் இல்லாகி யார்'. (குறள் - 935) எனும் கருத்தோடு ஒப்பிடுக. உடுக்கையிழந்தவன் கை போல

பிறபாடம்: ¹-இடுக்கண்கள் காண்ட நனியின்னா. ²-தனிகாண்டல்.

உதவல் வேண்டும் என்பதை வலியுறுத்த 'நட்டார் இடுக்கண் தனிகாண்டல் நன்கின்னா' என்றார்.

பெரியாரைப் பிரிதல்

பெரியாரைப் பிரிதல், அரியவை ஆற்றுமெனல், அன்பிலா ரிடம் உரைத்தல், பெரியோருக்குத் தீமை புரிதல், இவை யாவும் இன்னாவாம்.

26. பெரியாரோ டியாத்த தொடர்விடுதல் இன்னா;
அரியவை செய்தும் எனஉரைத்தல் இன்னா;
பரியார்க்குத் தாம்உற்ற கூற்(று)இன்னா; இன்னா
பெரியோர்க்குத்¹ தீய செயல்.

(ப-ரை.) பெரியாரோடு - அறிஞரோடு, யாத்த - கொண்ட தொடர் - நட்பை, விடுதலை - நீக்கிவிடுதல், இன்னா - துன்பமாம்; அரியவை - அரியனவை - அரிய காரியங்களை, செய்தும் - செய்வோம், என உரைத்தல் - என்று சொல்லுதல், இன்னா - துன்பமாம்; பரியார்க்கு - அன்பு இல்லாதவரிடத்தும், தாம் உற்ற - தாம் உற்ற துன்பங்களைக் கூறும், கூற்று - சொல், இன்னா - துன்பமாம்; தீய செயல் - பெரியார்க்கு - பெருமையுடையார்க்கு, தீமையானவற்றைச் செய்தல், இன்னா - துன்பமாகும்.

(க-ரை.) பெரியோர் நட்பை நீக்குதலும், அரியதை ஆற்றுவம் எனும் ஆணவமும், அன்பிலாரிடம் கூறும் துன்பமும், நல்லோர்க்குப் புரியும் தீமையும் துன்பம் பயக்குமாம்.

அரியவை - எளியவை அல்லாதவை, பரியார் - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது. செய்தும் -

பிற பாடம்: இடுக்கண்கள் காண்ட நனியின்னா ²-நனிகாண்டல்
பிற பாடம்: பெரியர்

தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று. 'பெரியாரோடி யாத்த' - குற்றியலிகரம் அலகு பெறாமை அறிக. சொல்லுதல் எளிது. செய்தல் வேண்டும் என்பதை வலியுறுத்த 'செய்தும் உல உரைத்தல் இன்னா' என்றார். 'எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார் - பெரியார்ப் பிழைத்தொழுகுவார்'- (குறள் - 896) எனும் கருத்தை. 'பெரியோர்க்குத் தீய செயல் இன்னா' என்று சுருங்கக் கூறினார்.

இளமையில் மூப்பு

புகழுடையாரை இழிவு செய்தல், உரிமையாளரை அகற்றுதல், வறியரின் வனப்பு, இளமையில் மூப்பு, இவை யாவும் இன்னாவாம்.

27. பெருமை உடையாரைப் பீடு அழித்தல் இன்னா;
கிழமை உடையாரைக் கீழ்ந்திடுதல்[1] இன்னா;
வளமை இலாளர் வனப்பு இன்னா; இன்னா
இளமையுள் மூப்புப் புகல்.

(ப-ரை.) பெருமை உடையாரை - பெருமையுடையவரை, பீடு அழித்தல் - பெருமை அழியக் கூறுதல், இன்னா - துன்பமாம்; கிழமை உடையாரை - உரிமை உடையவரை, கீழ்ந்திடுதல் - நீக்கிவிடுதல், இன்னா - துன்பமாம்; வளமை இலாளர் - செல்வம் இல்லாதவருடைய, வனப்பு - அழகு, இன்னா - துன்பமாம்; இளமையுள் - இளமைப் பருவத்தில், மூப்பு - முதுமைப் பருவத்திற்குரிய செயல்கள், புகல் - உண்டாதல், இன்னா - துன்பமாகும்.

(க-ரை.) புகழுடையோரைக் குறை கூறுதலும், உரிமையோரை உதறித்தள்ளலும், செல்வமிலாதவர் அழகும், இளமையில் மூப்படைதலும் துன்பமாம்.

பிறபாடம் : [1]- களைந்திடுதல்

கிழமையுடையார் - உரிமையுடையார்; நண்பர் சுற்றம் முதலியோர்; - 'பழைமை எனப்படுவதியாதெனின் யாதும் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு'- (குறள்-801) என்பதால் அறிக. வளம் - செல்வம் என்பதை 'வளவரை வல்லைக்கெடும்' - (குறள் - 480)-ன் உரையால் அறியத்தக்கது. புகல் - தொழிற்பெயர்.

கல்லாதான் கூறும் அவை

குதிரையின் குணம் அறியாது ஏறல், கல்லாதான் உரை, எளியோரின் சொற்பயன், அவையில் அறிவிலானின் உரை, இவை துன்பமாம்.

28. கல்லாதான் ஊரும் கலிமாப் பரிப்பு இன்னா;
வல்லாதான் சொல்லும் உரையின் பயன்இன்னா;
இல்லாதான் வாய்ச்சொல் நயமின்னா; ஆங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல்.

(ப-ரை.) கல்லாதான் - (செலுத்த வேண்டிய முறையினை) அறியாதவன், ஊரும் - ஏறிச் செல்லும், கலிமா - செருக்குடைய குதிரை, பரிப்பு - (அவனைச்) சுமந்து செல்லுதல், இன்னா - துன்பமாம்; வல்லாதான் - கல்வியில் வல்லமை இல்லாதமூடன், சொல்லும் - சொல்லுகின்ற, உரையின் பயன் - சொல்லின் பொருள், இன்னா - துன்பமாம்; இல்லாதார் - செல்வம் இல்லாதருடைய, வாய்ச் சொல் - வாயிலிருந்து வரும் சொல்லினது, நயம் - சிறப்பு, இன்னா - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, கல்லாதான் - கல்வி அறிவில்லாதவன், கோட்டி கொளல் - அவையின்கண் பேசுதல், இன்னா - துன்பமாகும்.

(க-ரை.) செலுத்தும் முறை அறியாது குதிரை ஏறலும், கல்லாதான் கூறும் பொருளும், செல்வமிலாான் சொல்லும், மூடன் அவையில் மொழிதலும் துன்பமாம்.

Scanned by TapScanner

அஃதிறந் தாக்கின் உயிர்க்கிறுதி யாகி விடும்' (குறள் - 476) என்பதை நோக்குக.

இசை கூடா யாழ்

இசைகூடா யாழொடு பாடல், கணக்கறியான் சோதிடம், நாதமில்லா முழவு, அருள் இல்லான் பகை, இவை யாவும் துன்பம் அளிக்கும்.

31. பண்அமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிது(ம்) இன்னா;
எண்அறியா மாந்தர் ஒழுக்குநாள் கூற்று(ம்) இன்னா;
மண்இல் முழவின் ஒலியின்னா; ஆங்கின்னா
தண்மை இலாளர் பகை.

(ப-ரை.) பண் அமையா - இசைகூடாத, யாழின்கீழ் - யாழுடன் இணைந்து, பாடல் - பாடுதல், பெரிது - மிகவும், இன்னா - துன்பமாம்; எண் அறியா மாந்தர் - குறிநூல் (சோதிடம்) அறியாத மக்கள், ஒழுக்கு நாள் - (முகூர்த்தம் சடங்கு முதலிய) ஒழுகுதற்குரிய நல்ல நாட்களை, கூற்று சொல்லுதல், இன்னா - துன்பமாம்; மண் இல் - மார்ச்சனை இல்லாத, முழவின் - மத்தளத்தினது, ஒலி - ஓசை, இன்னா - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, தண்மை இலாளர் - அருள் இல்லாதவரின்; பகை - பகையானது, இன்னா - துன்பமாகும்.

(க-ரை.) இசை சேரா யாழுடன் பாடுதலும், கணக்கறியான் கூறும் சோதிடமும், நாதமிலா மத்தளமும், அருள் இலான் பகையும் துன்பந் தருமாம்.

பண் - இசை, சுருதி. பாடல் - தொழிற்பெயர், ஈண்டு இணைந்து பாடுதலைக் குறித்தது. ஒழுக்கு - ஒழுகு; பகுதி இரட்டித்துப் பிறவினையாயது. மண் - மத்தளத்திற்கு இடும் கருஞ்சாந்து; இது நாதம் பெற்று ஓசைதரும். கீழ் - ஏழன் உருபு.

தொன்மையுடையார் கெடல்

தன்னைக் காவாது ஒழுகுதல், புறம் சொல்லல், உதவாதாரை நட்டல், தொன்மையாளர் கெடல், இவை என்றும் தீமையாம்.

32. தன்னைத்தான் போற்றா(து) ஒழுகுதல் நன்(கு) இன்னா;
முன்னை உரையார் புறமொழிக் கூற்(று) இன்னா;
நன்மை இலாளர் தொடர்(பு) இன்னா; ஆங்கின்னா
தொன்மை உடையார் கெடல்.

(ப-ரை.) தன்னைத்தான் - (ஒருவன்) தன்னைத் தானே, போற்றாது - காத்துக் கொள்ளாது, ஒழுகு நல் - நடத்தல், நன்கு இன்னா - மிகவும் துன்பமாம்; முன்னை உரையார் - நேரில் கூறாமல், புறமொழிக் கூற்று - (புறத்தே பழித்துரைக்கும்) புறம் கூறும் செயல், இன்னா - துன்பமாம்; நன்மை இலாளர் - பிறர்க்கு நன்மை புரியாதவரது, தொடர் - நட்பு, இன்னா - துன்பமாமை; ஆங்கு - அவ்வாறே, தொன்மை உடையார் - பழங்குடியில் சிறந்து வருவோர், கெடல் - (செல்வம் முதலியவைகள் இல்லாமல்) கெடுதல், இன்னா - துன்பமாகும்.

(க-ரை.) தன்னைக் காத்துக் கொள்ளாது நடத்தலும், புறங்கூறலும், உதவி புரியாதான் உறவும், பழங்குடியினர் கெடலும் துன்பமாகும்.

முன்னை - ஐ பகுதிப்பொருள் விகுதி. உரையார் - முற்றெச்சம். மொழிக்கூற்று - ஒரு பொருட் பன்மொழி. கெடல் - (கேடு + அல்) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர். மனமொழி மெய்கள் தீயவழியிற் செல்லாது அடக்குதல் இல்லா வழியைத் 'தன்னைத்தான் போற்றாது' என்றார்.

Scanned by TapScanner

வஞ்சமனத்தார் தொடர்பு

குடிகாரன் கூறும் நீதி, முள் உள்ள காடு, கரையேறும் விலங்கைக் கொல்லல், வஞ்சமனத்தார் நட்பு, இவை இன்பம் தரா.

33\. கள்ளுண்பான் கூறும் கருமப் பொருள்இன்னா;
முள்ளுடைக் காட்டின் நடத்தல் நனியின்னா;
வெள்ளம் படுமாக் கொலையின்னா; ஆங்கின்னா
கள்ள மனத்தார் தொடர்பு.

(ப-ரை.) கள் உண்பான் - கட்குடிப்பவன், கூறும் - சொல்லுகின்ற, கருமப் பொருள் - பயன் தரும் மொழி, இன்னா - துன்பமாம்; முள் உடைக் காட்டில் - முள் நிறைந்த காட்டில், நடத்தல் - நடந்து செல்லல், நனி இன்னா - மிகவும் துன்பமாம்; வெள்ளம்படு - வெள்ளத்தில் அகப்பட்ட, மா - விலங்கை, கொலை - கொலை செய்தல், இன்னா - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, கள்ளம் மனத்தார் - வஞ்ச மனத்திரனது, தொடர் - நட்பு, இன்னா - துன்பமாகும்.

(க-ரை.) கட்குடிப்போன் கூறும் நீதியுரையும், முட்காட்டில் செல்லலும், வெள்ளத்தில் அகப்பட்ட விலங்கைக் கொல்லுதலும், வஞ்ச மனத்தார் நட்பும், துன்பமாகும்.

கருமப்பொருள் - பயன்தரும் மொழி. 'மா கொலை' - வெள்ளத்திலே அகப்பட்டு உயிர்க்கு ஊசலாடும் விலங்கைக் கரையேற்றிக் காவாது கொல்லுதல் பாவம் என்பதைக் குறித்தார்.

தீயோர்க்கு உறவாதல்

தீயோர்க்கு உறவாதல், நூல் விரும்பாதார், இழி தொழிலாளர் நட்பு, செல்லாத இடத்திற்குச் செல்லல், இவை துன்பமாம்.

34\. ஒழுக்கம் இலாளர்க்(கு) உற(வு) உரைத்தல் இன்னா;
விழுத்தகு நூலும் விழையாதார்க்(கு) இன்னா;
இழித்த தொழிலவர் நட்(பு) இன்னா; இன்னா
கழிப்புவாய்[1] மண்டிலம் கொட்பு.

(ப-ரை.) ஒழுக்கம் இலாளர்க்கு - நல்லொழுக்கம் இல்லாதவரிடத்து, உறவு உரைத்தல் - (தனக்கு) உறவுமுறையைக் கூறுதல், இன்னா - துன்பமாம்; விழுத்தகு நூலும் - சிறந்த நூலையும், விழையாதார்க்கு - விரும்பிக் கல்லாதார்க்கு, இன்னா - துன்பமாம்; கழிப்புவாய் - (நல்லோரால்) ஒதுக்கப்பட்ட, மண்டிலம் - நாட்டில், கொட்பு - திரிதல், இன்னா - துன்பமாகும்.

(க-ரை.) தீயோர்க்கு உறவாதலும், பெருமை தரும் நூலைப் பேணாதார்க்கும், கேவலமான செயலுடையார் நட்பும், ஒதுக்கப்பட்ட இடத்தில் வாழ்தலும் துன்பமாம்.

இழித்த தொழில் - அறிவுடையோரால் பழிக்கப் பட்ட தொழில்; பழிக்கு அஞ்சாச் செயல். கழிப்புவாய் - கழிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, மண்டிலம் - நாடு; நாட்டின் பிரிவு.

குழவிகொண்ட நோய்

மழை இல்லாதிருத்தல், மரத்திடை ஓசை, குழவி கொண்ட நோய், அழகனின் அறிவின்மை, யாவும் துன்பமே.

35\. எழிலி உறைநீங்கின் ஈண்டையார்க்(கு) இன்னா;
குழலின் இனியமரத்(து) ஓசைநன்(கு) இன்னா;
குழவிகள் உற்ற பிணியின்னா; இன்னா
அழ(கு)உடையாள் பேதை யெனல்.

பிறபாடம் : 1- கழிப்புலாய்

(ப-ரை.) எழிலி - மேகமானது, உறை - நீர்த்துளியை, நீங்கின் - சொரியாதாயின், ஈண்டையார்க்கு - இவ்வுலகத்தில் உள்ளவர்களுக்கு, இன்னா - துன்பமாம்; குழலின் இனிய - குழல் ஓசையைப் போலும் இனிதாக, மரத்தின் ஓசை - மரங்களின் ஓசை இருப்பினும், நன்கு இன்னாத - மிகவும் துன்பமாம்; குழவிகள் உற்ற - குழந்தைகள் அடைந்த, பிணி - நோயானது, இன்னா - துன்பமாம்; அழகு உடையான் - தோற்றத்தில் அழகினை உடையவன், பேதை என்ல் - அறிவிலாதவனென்று கூறப்படுதல், இன்னா - துன்பமாகும்.

(க-ரை.) மழை பெய்யாதிருத்தலும், மரத்தின் ஓசையும், பிள்ளைகளுற்ற பிணியும், அழகுடையானின் அறிவின்மையும் துன்பமாகும்.

உறை - நீர்த்துளி. குழலின் - இன் ஒத்தல் உருபு ஒப்புப் பொருள். அடர்ந்த மரத்தின் ஊடே காற்றுப் புகுந்து எழுப்பும் ஓசை, ஓரோவழிக் குழல் ஓசையைக் காட்டிலும் இனிமை தந்தாலும் அது போற்றப்படுவதில்லை என்பதை 'குழலின் இனிய மரத்தோசை நன்கின்னா' என்றார்.

கெட்டால் கைவிடும் நண்பர்

ஏழை நினைக்கும் உதவி, கைப்பொருளின்றி கடிநகர் வாழ்தல், எதிர்பார்த்து உண்ணல், தாழ்ந்த போது உதவா நண்பர், யாவும் துன்பந்தரும்.

36. பொருள்இலான் வேளாண்மை காமுறுதல் இன்னா;
நெடுமாட நீள்நகர்க் கைத்(து)இன்மை யின்னா;
வருமனை பார்த்(து)இருந்(து) ஊண்இன்னா; இன்னா
கெடும்இடம் கைவிடுவார் நட்பு.

(ப-ரை.) பொருள் இலான் - வறிஞன், வேளாண்மை - (பிறர்க்கு) உதவி புரிதலை, காமுறுதல் - விரும்புதல், இன்னா - துன்பமாம்; நெடுமாடம் - நெடிய மாடங்களையுடைய, நீள் - நகர் - பெரிய நகரத்திலே, கைத்து - பொருள், இன்மை - இன்றியிருத்தல், இன்னா - துன்பமாம்; வருமனை - வரும் மனையுடையாரை, பார்த்து இருந்து - எதிர்பார்த்து இருந்து, ஊண் - உணவு உண்ணுதல், இன்னா - துன்பமாம்; கெடும் இடம் - (வறுமையால்) கெட்ட சமயத்து, கை விடுவார் - கைவிட்டு நீங்குவோரது, நட்பு - நட்பானது, இன்னா - துன்பமாகும்.

(க-ரை.) வறிஞன் விரும்பும் உபகாரமும், நகரில் பொருளின்றி வாழ்தலும், வீட்டுடையாரை எதிர்பார்த்து உண்ணலும், கெட்ட காலை உதவாத நண்பரும் துன்பமாம்.

வேளாண்மை - உபகாரம். கைத்து - கைப் பொருள். மனை - ஆகுபெயர். இல்லிற்குச் சொந்தமானவர் செல்வி நோக்கி உண்டல் என்பதை 'வருமனை பார்த்திருந்து ஊண்' எனக் குறித்தார். 'கெடுமிடம் கைவிடுவார் நட்பு' என்பதை 'கெடுங் காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை உள்ளினும் உள்ளம் சுடும்' - (குறள் - 799) எனும் கருத்தை நோக்குக.

அழகு மலர்

அழகிருந்து மணமிலா மலர், துறையின்றி நீரில் இறங்கல், அறியானிடம் வினாவல், சிறியார்மேல் செல்லும் சினம் இவை எல்லாம் தீமை.

37. நறிய மலர்பெரிது நாறாமை யின்னா;
துறையறியான் நீர்இழிந்து போகுதல் இன்னா;
அறியான் வினாப்படுதல் இன்னா; ஆங்(கு) இன்னா
சிறியார்மேல் செற்றம் கொளல்.

(ப-ரை.) நறிய மலர் - அழகுடைய மலரானது, பெரிது நாறாமை - அதிகமாக மணம் வீசாதிருத்தல், இன்னா -

புலவர் உரை

வஞ்சகரை நீக்கல், புலவரின் பொன்னுரையைப் போற்றல், மன்னுயிரைத் தன்னுயிராய் மதித்தல், இவை இன்பந் தருவன.

20. சலவரைச் சாரா விடுதல் இனிதே;
புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே;
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க்(கு) எல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது.

(ப-ரை.) சலவரை - வஞ்சகரை, சாரா - (தன்னோடு) அடையாது, விடுதல் - நீங்குதல், இனிது - இனிதாம்; புலவர்தம் - அறிவுடையோருடைய, வாய்மொழி - வாய்ச் சொற்களை - போற்றல், பாதுகாத்தல், இனிது - இனிதாம்; மலர் தலை - அகன்ற இடத்தையுடைய, ஞாலத்து - பூமியில் - உள்ள, மன் உயிர்க்கு எல்லாம் - நிலை பெற்ற எல்லா உயிர்க்கும் தகுதியால் - உரிமைப்பட, வாழ்தல் - வாழ்வது, இனிது - இனிதாகும்.

(க-ரை.) வஞ்சகரை அடுத்து வாழாமையும், புலவர் மொழி போற்றலும், மன்னுயிரைத் தன்னுயிர்போல் வாழ விரும்புதலும் இன்பங் கொடுக்குமாம்.

சலவர் - வஞ்சகர். புலம் - அறிவு. புலவர் - அறிஞர். 'மன்னுயிர்க்கெல்லாம் தகுதியாய் வாழ்தல்' ஆவது, தன்னுயிரென வாழ விரும்பி ஆற்றலாம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (புறம் - 192) எனும் கருத்தை வலியுறுத்திற்று.

திறம் தெரிந்து வாழ்தல்

பிறன் பொருள் விரும்பாமை, அறமே புரிதல், அறிவிலிகள் அணுகா வகை வாழல், இவை இன்பந் தருவன.

21. பிறன்மனைப் பொருள்வெளவான் வாழ்தல் இனிதே;
அறம்புரிந்(து) அல்லவை நீக்கல் இனிதே;
மறந்தேயும் மாணா மயரிகள் சேராத்
திறந்தெரிந்து வாழ்தல் இனிது.

(ப-ரை.) பிறன் - பிறனுடைய, கைப்பொருள் - (சேர்த்து வைத்த) உரிய பொருளை, வௌவான் - அபகரியாதவனாய், வாழ்தல் - வாழ்வது, இனிது - இனிதாம்; அறம் புரிந்து - அறத்தைச் செய்து, அல்லவை - அறமல்லாத தீய செயல்களை, நீக்கல் - நீக்குதல், இனிது - இனிதாம்; மறந்தேயும் - மறந்தேனும், மாணா - மாட்சிமைப்படாத, மயரிகள் - அறிவிலிகளை, சேரா திறம் - சேராத வழிகளை, தெரிந்து - ஆராய்ந்து, வாழ்தல் - வாழ்வது, இனிது இனிதாகும்.

(க-ரை.) பிறன் பொருள் விரும்பாச் செயலும், அல்லவை அகற்றி அறத்தொடு வாழலும், அறிவிலிகள் வழி அகற்றி வாழலும், என்றும் இன்பமாம்.

மயரிகள் - அறிவிலிகள். திறம் - வழி. 'மறந்தேயும்' எனும் சொல், 'கனவிற்கூட' எனும் வழக்குப் போல நின்று கட்டாயத்தை வலியுறுத்திற்று.

வரவுக்கேற்ப வழங்கல்

வரவுக்கேற்ப வழங்கல், பாரபட்சம் இல்லாச் செயல், பெரும் பயன் எண்ணி விரும்பியதை ஆற்றாமை, இவை இன்பந் தருவன.

22. வருவாய் அறிந்து வழங்கல் இனிதே;
ஒருவர்பங்(கு)[1] ஆகாத ஊக்கம் இனிதே;
பெருவகைத்(து) ஆயினும் பெட்டவை செய்யார்
திரி(பு) இன்றி வாழ்தல் இனிது.

---
[1] பிறபாடம் : ' - ஒருவர் பாங்கு

(ப-ரை.) வருவாய் - (தமக்குப்) பொருள் வருகின்ற வழியின் அளவினை, அறிந்து - தெரிந்து, வழங்கல் - (பிறர்க்குக்) கொடுத்தல், இனிது - இனிதாகும்; ஒருவர் பங்கு ஆகாத - ஒருவர் சார்பாகாத, ஊக்கம் - (குறிக்கோள்) மன எழுச்சி, இனிது - இனிதாகும்; பெருவகைத்து ஆயினும் - பெரிய பயனையுடைத்தாயினும், பெட்டவை - (தாம்) விரும்பியவற்றை, செய்யார் - செய்யாதவராய், திரிபு இன்றி - (தம் நிலையில்) வேறுபாடு இல்லாமல், வாழ்தல் - வாழ்வது, இனிது - இனிதாகும்.

(க-ரை.) வருமானத்திற்கேற்ப ஈதலும், ஒருவர் சார்பற்ற மன எழுச்சியும், பெரும் பயனாயினும் விரும்பாது வாழ்தலும் இன்பமாம்.

வருவாய் - ஆகுபெயர். பெட்டவை - பெட்பு அடியாகப் பிறந்த வினையாலணையும் பெயர். வருவாய் அறிந்து வழங்கல் என்பதை, 'வளத்தக்காள்' (குறள் - 51), 'ஆற்றின் அளவறிந்தீக' (குறள் - 477) எனும் கருத்துக்களால் அறிக. நடுநிலைமை அழியாதிருக்க வேண்டுமென்பதை, 'ஒருவர் பங்காகாத ஊக்கம்' என்றார். பெரும் பயன் அடைவதாயினும் தன்னியல்பில் திரியாது வாழ்தலை 'பெருவகை... வாழ்தல் இனிது என்றார்.

சோலையும் குளமும்

சோலையும் குளமும் ஆக்கலும், ஆவும் பொன்னும் அந்தணர்க்களித்தலும், சூதரைச் சேராச் செயலும் இன்பந் தருவனவாம்.

23. காவோடு அறக்குளம் தொட்டல் மிகஇனிதே;
ஆவோடு பொன்ஈதல் அந்தணர்க்கு முன்இனிதே;
பாவமும் அஞ்சாராய்ப் பற்றும் தொழில்மொழிச்
சூதரைச் சோர்தல் இனிது.

(ப-ரை.) காவோடு - சோலையோடு, அறக்குளம் - நன்னீர்க் குளத்தை, தொட்டல் - வெட்டுதல், மிக இனிது - மிகவும் இனிதாகும்; அந்தணர்க்கு - செந்தண்மை பூண்ட செவ்வியார்க்கு, ஆவோடு - பசுவோடு, பொன்ஈதல் - பொன்னைக் கொடுத்தல், முன்இனிது - மிக இனிதாகும்; பாவமும் அஞ்சாராய் - தீய செயல்கள் புரிதலுக்கு அஞ்சாதவராய், பற்றும் - (அப் பழிச் சொல்லைப்) பற்றுகின்ற, தொழில் - செயலையும் உடைய, சூதரை - சூதாடுவோரை, சோர்தல் - நீக்கல், இனிது - இனிதாகும்.

(க-ரை.) சோலையும் குளமும் வெட்டுதலும், அந்தணர்க்கு ஆவுடன் பொன் அளித்தலும், பாவத்திற் கஞ்சாச் சூதரை நீக்கலும் இன்பந் தருமாம்.

ஆவோடு பொன் பெறும் அந்தணர், பிற்கால வழக்கில் உள்ள தானம் ஏற்றலைக் குறித்தது. 'சிறுமை பல செய்து சீரழிக்கும் சூது' - (குறள் - 934) எனும் கருத்தமைந்துள்ளது. மரம் நாட்டலும் ஊருணி அமைத்தலும் பொதுத்தொண்டு கருதி என்பதை, 'காவோடு அறக்குளம் தொட்டல்' என்றார். தொழில் மொழி - எச்ச உம்மை தொக்கது. தொட்டல் - தோண்டல்; தொழிற் பெயர். 'தொட்டனைத் தூறும் மணற்கேணி' - (குறள் - 396) இப்பொருளாதல் அறிக.

ஒன்றே ஆயினும் நன்றே செய்

மேன்மேல் உயர்வோன் வெகுளாதல், ஒன்றே ஆயினும் நன்றே ஆற்றல், கிடைக்காததற்கு வருந்தாது கடமை புரிதல், இவை இன்பந் தருவன.

24. வெல்வது வேண்டி வெகுளாதான் நோன்பு இனிதே;
ஒல்லும் துணையும் ஒன்று உய்ப்பான் பொறை இனிதே;
இல்லது காமுற்று இரங்கி இடர்ப்படார்
செய்வது செய்தல் இனிது.

(ப-ரை.) வெல்வது - மேம்படுதலை. வேண்டி - விரும்பி. வெகுளாதான் - கோபியாதவனது. நோன்பு - ஆற்றும் செயல். இனிது - இனிதாம்; ஒல்லும் துணையும் - கூடிய மட்டும். ஒன்று உய்ப்பான் - (எடுத்துக் கொண்ட செயலில்) ஒரு செயலைக் குறைவற நடத்துவோனது. பொறை - ஆற்றல். இனிது - இனிதாம்; இல்லது காமுற்று - (தம்மிடத்து) இல்லாத பொருளை விரும்பி. இரங்கி - (அது கிடைக்காததால்) மனம் வருந்தி. இடர்ப்படார் - துன்பப்படாதவராய். செய்வது - (தம்மிடம் இருப்பதைக் கொண்டு) செய்ய வேண்டிய செயலை. செய்தல் - செய்வது. இனிது - இனிதாகும்.

(க-ரை.) மேன்மையுறுவோர் வெகுளாதிருத்தலும், ஒன்றே யாயினும் முடிந்தவரை நன்றே ஆற்றலும், கிடைக்காதவற்றுக்கு இடர்ப்படாது செய்யும் செயலை செவ்வனே புரிதலும் இன்பமாம்.

இல்லது - குறிப்பு வினையாலணையும் பெயர். உயிர் எதையும் விரும்பல் இயல்பு. கிடைக்காத பொருளைக் கிளர்ந்து கிளர்ந்து விரும்பி அழிதலும் இயல்பு. ஆதலின் இல்லிடர் ஒழித்துத்தன் கருமம் ஆற்றலில் கவனம் செலுத்தல் வேண்டும் என்பதை 'இல்லது... செய்தல்' என்றார். பொறை - ஆற்றல்; தொழிற்பெயர்.

புலன் அடக்கம்

புலன் விரும்பலை அடக்கலும், கைப்பொருள் போயினும் கல்லாரை நீக்கலும், ஒழுங்கிலார் உறவை ஒழித்தலும் இன்பந் தருவனவாம்.

25. ஐவாய வேட்கை அவாவடக்கல் முன்இனிதே;
கைவாய்ப் பெறினும் கல்லார்கள் தீர்(வு)இனிதே;
நில்லாத காட்சி நிறையில் மனிதரைப்
புல்லா விடுதல் இனிது.

(ப-ரை.) ஐவாய - ஐந்து வழிகளின் வழியாய் உண்டாகின்ற. வேட்கை - விருப்பத்தையும். அவா - (அவ்விருப்பால் தோன்றும்) நினைவையும். அடக்கல் - ஒழித்தல். இனிது - இனிதாம்; கைவாய பொருள் - கைப்பொருளை. பெறினும் - பெறுவதாயினும். கல்லார்களை - கல்லாதவரை. தீர்வு - விடுதல். இனிது - இனிதாம்; நில்லாத காட்சி - நிலையிலாச் செயலினையுடைய. நிறை இல் - (நெஞ்சில்) நிறுத்தல் இல்லாத. மனிதரை - மக்களை. புல்லா விடுதல் - சேராது நீங்குதல். இனிது - இனிதாகும்.

(க-ரை.) புலனைந்தை அடக்கலும், கைப் பொருளைப் பெறுவதாயினும் கல்லாரை அகற்றலும், நெஞ்சை நல்வழியில் நிறுத்தாரைச் சேராது வாழ்தலும் இனிமையை நல்குமாம்.

ஐவாய் - மெய், வாய், கண், மூக்கு, செவி. காட்சி - அறிவு. புல்லா - புல்லாது என்பதன் ஈறு கெட்டது- பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க - நெறிநின்றார் நீடுவாழ் வார்' (குறள் - 6) இக்கருத்தை 'ஐவாய வேட்கை அவா வடக்கல்' என்றார். 'நில்லாத காட்சி நிறையில் மனிதர்'- இஃது அலைகின்ற மனம், அறிவு முதலியவற்றை ஒரு வழி நிறுத்தும் தன்மையிலாரைக் குறித்தது.

மதிப்புடன் வாழ்

விரும்பி வந்தோர் வெம்பிச் செல்லாமை, மதிப்புடன் வாழல், ஒளிக்காது நல்கல், இவை இன்பந் தருவன.

26. நச்சித்தன் சென்றார் நசைகொல்லா மாண்(பு)இனிதே;
உட்கில் வழிவாழா ஊக்கம் மிகஇனிதே;
எத்திறத் தானும் இயைவ கரவாத
பற்றினில் பாங்(கு)இனியது(ு) இல்.

(ப-உரை.) நச்சி - (பொருளைப் பெற) விரும்பி, தன் சென்றார் - தன்னை அடைந்தவரது, நசை - விருப்பம், கொல்லா - கெடாத, மாண்பு - மாட்சிமை, இனிது - இனிதாம்; உட்கு இல் வழி - மதிப்பும் இல்லாத இடத்து, வாழா - வாழாமைக்கேதுவாகிய, ஊக்கம் - மன எழுச்சி, மிக இனிது - மிகவும் இனிதாம்; எத் திறத்தானும் - எவ்வாறாயினும், இயைவ - கொடுக்க முடிந்தவற்றை, கரவாத - ஒளிக்காத, பற்றினில் - அன்பினில், பாங்கு இனியது - நன்மை தரும் இனிமை, இல் - வேறுறொன்றுமில்லை.

(க-உரை.) தன்னிடம் விரும்பி வந்தோரை வெறுமையாய் அனுப்பாய்ச் செயலும், மதியாரிடை வாழாமையும், எவ்வழியும் முடிந்ததைக் கொடுக்கும் அன்புடைமையும் நன்மையே நல்கும்.

நச்சி - விரும்பி. உட்கு - மதிப்பு. விருப்பம் வரவரத் தேய்ந்து அழியுமாறு செய்தலை, 'நசை கொல்லுதல்' என்றார். மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம் எனுங் கருத்தை 'உட்கில் வழி', 'வாழா ஊக்கம்' என்று வலியுறுத்தினார்.

குற்றம் பாராட்டாரைக் கொள்ளல்

பிறர்க்கு ஈதல், மானங்கெட வாழாமை, குற்றம் கொள்ளாரைக் கூடல், இவை இன்பந் தருவன.

27. தானம் கொடுப்பான் தகைஆண்மை முன்இனிதே;
 மானம் படவரின் வாழாமை முன்இனிதே;
 ஊனம்கொண் டாடார் உறுதி உடையவை
 கோள்முறையால் கோடல் இனிது.

(ப-உரை.) தானம் கொடுப்பான் - பொருள் முதலியவற்றைப் பிறருக்குக் கொடுப்பவனது, தகை ஆண்மை - தகுதி நிறைந்த முயற்சி, முன் இனிது - மிகவும் இனிதாம்; மானம் - மானமானது, படவரின் - கெடவரின், வாழாமை - உயிர் வாழாதிருத்தல், முன் இனிது - மிகவும் இனிதாம்; ஊனம் கொண்டாடார் - குற்றம் பாராட்டுதவர், உறுதி உடையவை - நன்மை பயக்கும் செயல்களை, கோள்முறையால் - கொள்ளும் முறைப்படி, கோடல் - கொள்ளுதல், இனிது - இனிதாகும்.

(க-உரை.) பிறர்க்குக் கொடுக்கும் பெருந்தன்மையும், மானம் அழிய வாழாத செயலும், குற்றம் பாராட்டாரைக் கூட்டிக் கொள்ளலும், இனிமையே பயக்குமாம்.

'குற்றம் நீக்கி குணம் கொள்க' எனுங் கருத்தை, 'ஊனங் கொண்டாடார் உறுதி உடையவை - கோள்முறையால் கோடல்' என்றார். இம்மை இன்பமும் பிறவும் தரும் நல்லொழுக்கச் செயல்களை, 'உறுதி உடையவை' என்றார்.

தீமை கூறாத் தெளிவு

விருப்பிலானை வற்புறுத்தாமை, கூற்றம் வருமுன் நல்லன ஆற்றல், தீமை கூறாது தெளிதல், இவை இன்பந் தருவன.

28. ஆற்றானை ஆற்(று)என்(று) அலையாமை முன்இனிதே;
 கூற்றம் வர(வு) உண்மை சிந்தித்து வாழ்வு(இனிதே);
 ஆக்கம் அழியினும் அல்லவை கூறாத
 தேர்ச்சியில் தேர்(வு)இனிய(து) இல்.

(ப-உரை.) ஆற்றானை - (ஒரு தொழிலைச்) செய்ய மாட்டாதானை, ஆற்று என்று - (அதனைச்) செய்யென, அலையாமை - வருத்தாமை, முன் இனிது - மிகவும் இனிதாம்; கூற்றம் - யமனது, வரவு - வருகையின், உண்மை - உறுதியை, சிந்தித்து - நினைத்து, வாழ்வு - வாழ்தல், இனிது - இனிதாம்; ஆக்கம் அழியினும் - செல்வம் அழிந்தாலும்,

அல்லவை கூறாத - (பிறர் மனம் வருந்தும்படி) தீய சொற்களைச் சொல்லாத. தேர்ச்சியில் - தெளிவிலும். தேர்வு - தெளிவான. இனியது - இனிமையுடையது. இல் - வேறொன்றுமில்லை.

(க-ரை.) தொழில் செய்யாதானைச் செய் என்று கூறலும், பயன் வரும் முன்பு நல்லன ஆற்றலும், பொருள் அறிவிலும் பொருந்தாச் செயலை ஆற்றாமையும் இன்பந்தருவனவாம்.

ஆற்றானை - வினையாற்றவல்லானையும் பெயர். வரவு - வருதல்; தொழிற்பெயர். ஆக்கம் - மேன் மேல் உயர்தல்; செல்வம். விருப்பில்லாதவனை ஏவும் தொழில் வீண் என்பதை 'ஆற்றானை ஆற்றென்று அலைப்பானும்' என்றார். 'கற்றும் வரவு உண்மை' என்பதை 'கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன் - பிணிக்குங்காலை இரங்குவிர் மாதோ' எனும் (புறம் - 195)ஆல் அறிக. பயனற்ற மொழிகளைக் கூறாதிருத்தலை 'அல்லவை கூறாத' என்றார். வள்ளுவரும் 'பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த - மாசறு காட்சியவர்' - (குறள் - 199) என்பதால் அறிக.

உயர்வே உள்ளல்

இழிந்தோரை நீக்கல், உயர்வை நினைக்கும் மனம், பிறரை இகழாச் செயல் இவை இன்பந் தருவன.

29. கயவரைக் கைஇகந்து* வாழ்தல் இனிதே
உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே
எளியர் இவரென்று இகழ்ந்துரையார் ஆகி
ஒளிபட வாழ்தல் இனிது.

(ப-ரை.) கயவரை - கீழ்மக்களை, கைஇகந்து - நீக்கி, வாழ்தல் - வாழ்வது, இனிது - இனிதாம். உயர்வு உள்ளி -

*பாடபேதம்: 'கை கழிந்து வாழ்தல்'

மேன்மேல் உயர்தலை நினைத்து, ஊக்கம் பிறத்தல் - மன எழுச்சி உண்டாதல், இனிது - இனிதாம். இவர் எளியர் என்று - இவர் வறியர் என்று, இகழ்ந்து - (அவரை) இகழ்ந்து உரையார் ஆகி - கூறாமல், ஒளிபட - புகழ்பட, வாழ்தல் - வாழ்வது, இனிது - இனிதாகும்.

(க-ரை.) இழிந்தோரை நீக்கி வாழ்தலும், மேன்மேல் உயரும் குறிக்கோளும், எளியாரை இகழாது புகழ்பட நிற்றலும் இன்பமாகும்.

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' - (குறள் - 596) எனும் கருத்தை 'உயர் உள்ளி ஊக்கம் பிறத்தல்' என்றார். தம்மின் கீழோரைத் தாழ்வாக மதியாதிருத்தலை வலியுறுத்த 'எளியர்... ஒளிபட வாழ்தல்' என்றார். புகழ்பெறும் பல வழிகளில் இதுவும் ஒன்றெனக் குறிக்க 'ஒளிபட வாழ்தல்' என்றாரெனினுமாம்.

செய்ந்நன்றி

செய்ந்நன்றி அறிதல், ஓரம் சொல்லாதிருத்தல், அடைக்கலப் பொருளைக் கொள்ளாமை, இவை இன்பந் தருவன.

30. நன்றிப் பயன்தூக்கி வாழ்தல் நனிஇனிதே
மன்றக் கொடும்பாடு உரையாத மாண்(பு) இனிதே
அன்(று) அறிவார் யாரென்(று) அடைக்கலம் வௌவாத
நன்றியின் நன்(கு) இனியது இல்.

(ப-ரை.) நன்றி பயன் - (ஒருவன் ஆற்றிய) நன்றியின் பயனை, தூக்கி - கருதி, வாழ்தல் - வாழ்வது, நனி இனிது - மிக இனிதாம். மன்றம் - நீதிமன்றத்தில், கொடும்பாடு - ஓரம்பாடு (ஓரம்), உரையாத - சொல்லாத, மாண்பு - மாட்சிமை, இனிது - இனிதாம். அன்று - (அடைக்கலப் பொருள் வைத்த) அந்நாள், யார் அறிவார் என்று - அறிந்தார் ஒருவரும்

துரை நடைபாள் ஆ

...னை, (சு.ரா.) அடைக்கலமாய் வந்தோர் து...

...ர் அடையாளமையும் கடன் பெற்றும் ஆவண செய்...

Scanned by TapScanner

13

Scanned by TapScanner

பண்புகளாம். நூலால்கட்டப்பட்டு அழகுடன் விளங்கும் பூச்சூடிய கூந்தலுடையவளே! பிறர்க்குத் துன்பம் விளைவிக்காமல் இருப்பதும் (உழவுத்தொழில் செய்யாதிருப்பது என்றும் கூறுவர்) ஐம்பொறிகளான, மெய், வாய், கண், மூக்கு, செவி இவை வழிச்சென்று அவை விரும்படி இன்பம் நுகராமலிருப்பதும், (உண்ணாமை இன்பம் நுகராதிருப்பது) பயனற்ற சொற்கள் பேசாதிருத்தலும், (ஆடாமை - வார்த்தை ஆடாமை) பிறரால் வரும் கேடுகளுக்காக மிகவும் (ஆற்ற) வருத்தம் கொள்ளாதிருப்பதும் (உளையாமை - வருந் தாமை) வெட்கக்கேடான செயல்கள் புரியாமல் அவற்றை வெல்லுதல் (உட்குதல் - அஞ்சுதல். உடைத்தல் - வெல் லுதல்) முன்சொன்ன ஒழுக்க நெறிகளை விட்டு விலகாது இருத்தல் ஆகிய ஆறு குணநலன்களும், ஆராயப்புகின் (நோக்கின்) மேலோர் கொண்டொழுக வேண்டிய நற்பண்புகள் இவை என்பது தெரியவரும்.

இவனே அறிவுடையான்

பொய்யான் புலாலொடு கள்போக்கித் தீயன
செய்யான் சிறியார் இனம்சேரான் - வையான்
கயல்உண் கண்ணாய் கருதும்கால் என்றும்
அயல அயலவா நூல். 14

பொய்சொல்லாமலும், ஊன் உணவு உட்கொள்ளாமலும், கள்குடிக்காமலும், பிறர்க்குத் துன்பம் தரும் தீய செயல்களைச் செய்யாமலும், தீயவர்களான கீழ்மக்கள் கூட்டத்தில் சேராமலும், பிறரைக் குறைகூறி ஏசிப் பேசாமலும் இருபபவர்கள் பற்றி; மீன்போலும் பிறழ்ந்து நோக்கும் பார்வை உடைய, மைதீட்டிய கண்ணுடைய பெண்ணே! எண்ணிப் பார்த்தால், என்றைக்கும் இவர்களைப் போன்ற மேலான அறிவுடையவர்கள் எவரும் இல்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. எனவே இவர்களுக்கு அறிவுரை கூறும் வேறு நூல்கள் எதுவும் தேவையில்லை.

அறிவு நூல்கள் ஒழுக்க நெறிகளைப் போதிக்கின்றன. இவர்கள் கொண்டொழுகும் இந்தப் பொய்யாமை முதலான பண்புகளைவிட மேலான நல்லொழுக்கம் வேறு என்ன இருக்கிறது? எனவே இவர்கள் தனியே அறிவு நூல் கற்றுத் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்றும் இல்லை என்பது பொருள்.

(புலால் - இறைச்சி உணவு. இனம் - கூட்டம். - கயல் மீன். கருதும்கால் - ஆராய்ந்தால். அயல - அந்நியமானது)

இவை நன்று

கண்போல்வார்க் காயாமை கற்றார் இனம்சேர்தல்
பண்போல் கிளவியார் பற்றாமை - பண்போலும்
சொல்லார்க்கு அருமறை சோராமை சிறிதெனினும்
இல்லார்க்கு இடர்தீர்த்தல் நன்று. 15

கண்ணைப் போன்ற அரிய நண்பர், உறவினர் அவர்கள் தவறு செய்துவிட்டாலும் அவர்மேல் கோபம் கொள்ளாமை அதற்காக அவரை வெறுத்தொதுக்காமை (காயாமை) கற்றறிந்த பெரியோர்கள் கூட்டத்தில் (இனம்) சேர்ந்திருத்தல், இன்னிசைபோல இனிக்கப் பேசும் - மயக்கும் பெண்கள் பின் செல்லாதிருத்தல், இனிக்க

செய்து வாழும் இல்வாழ்வே, பற்றெல்லாம் வி-
டொழிந்து துறவறம் மேற்கொண்டு வாழும், முத்தியை
தேடி வாழும் வாழ்விலும் மேலானதாகும் என்பது
பாடலின் பொருள்.

துன்னி - பொருந்தி இறந்தார் - கடந்தவர் இல்லி
இசைத்தல் - அன்பான மொழிகளைப் பேசுதல் மறுமை -
பாருபடும் பகைவர் ஓம்புதல் - காத்தல் இறுதல் - கெடுதல்

கடுஞ்சொல்லுத் தண்டம் அடங்காமை காப்பின்
அடும் [illegible] அரசு. 18

பெண்களுடன் கொள்ளும் இன்ப உறவும், தேடிய பொருளைப் பாதுகாக்காது அழித்தலும், விலங்குகளை வேட்டை ஆடுதலும் கேடுதரும் கள்ளுண்ணுதலும், சூதாட்டத்தில் ஆழ்ந்தும் ஆதாட்டமும் கடுசொல்லும், துன்பத்திற்கு இடமான கோபத்தால், போர் செய்தலும் ஆகிய செயல்களுக்கு இடம் கொடாமல் அவற்றிற்குத் தான் ஆளாகாமல், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் அரசனோடு மற்ற அரசர்கள் சினம்கொண்டு போர்செய்ய மாட்டார்கள்.

போகம் - கூடுதல். வேழ் - அழிவு. மான் - விலங்குகளைக் குறிக்கும் பொதுப்பெயர். வேட்டம் - வேட்டை ஆடுதல். சோகம் - துயரம். சொல்வன்மை - வன்சொல். தம் - துன்பம். தண்டம் - போர். அடங்காமை காத்தல் - அதற்கு ஆளாகாமல், அல்லது அந்த குணங்கள் தன்னிடம் தோன்ற இடம் தராது, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதல். அடும் - போரிடும்.

பெரியோர்க்குப் பெருமை இவை

கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்மனைமேல்
செல்லான் சிறியார் இனம்சேரான் - சொல்லும்
மறையில் செவிஇலன் தீச்சொற்கண் மூங்கை
இறையில் பெரியாற்கு இவை. 19

தான் ஓர் உயிரைக் கொல்லாதிருத்தல், உயிர்களை மற்றவர்கள் கொல்லுதலையும் விரும்பாமை, பொய் சொல்லாமை, மாற்றான் மனைவியை விரும்பாமை, இழிமக்களுடன் சேராமை, மறையின் கூறும் சொற்களுக்குக் காதுகொடாமை, தீயசொற்கள் பேசுதலில் ஊமை ஆகிவிடுவது இவை தலைமைத் தன்மையில் உயர்ந்தோர்க்கு உரிய பண்புகளாம். செவிஇலன் என்பதற்கு இங்கே காது கொடுத்து கேட்காதவன் என்பது பொருள். எதைக் காது கொடுத்து கேட்காதவன் என்றால், மற்றவர்கள் மறைவாகப் பேசிக் கொள்வதை. இதேபோல் தீயசொற்களைப் பேசுதலில் ஊமை என்றால், தீய சொற்கள் பேசாதவன் என்பது பொருள்.

மூங்கை - ஊமை. இறையில் - தலைமைப் பண்பில்

மனித இயல்புகள் இவை

மின்நேர் இடையார் சொல்தேறான் விழைவு ஓரான்
கொன்னே வெகுளான் கொலைபுரியான் - பொன்னே
உறுப்(பு) அறுத்தன்ன கொடை உடையான் தன்னின்
வெறுப்(பு) அறுத்தான் விண்ணகத்தும் இல். 20

பொன்னே - பொன் போன்றவளே! மின்னலைப் போன்ற மெல்லிய இடை உடைய பெண்களின் சொற்களைக் கேளாதவன், அவர்களோடு கூடி மகிழ்வதை விரும்பாதவன், வீணாகப் பிறர்மேல் கோபம் கொள்ளாதவன், உயிர்க் கொலையை விரும்பாதவன், தன் உடல் உறுப்பு ஒன்றையே அறுத்துக் கொடுக்க வேண்டிய நிலைவரினும் அதனை செய்யத் தயங்காத கொடை கொடுப்பதில் விருப்பம் உடையவன், தன் உள்ளத்துள் தோன்றும் வெறுப்பை விட்டொழித்தவன் விண்ணுலகத்திலும் இல்லை. அதாவது, பெண்கள் பேச்சைக் கேட்பது,

அவரோடு கூடி மகிழ ஆசைப்படுவது. கோபம் கொள்ளாதிருப்பது. கொலைத்தொழில் செய்யாதிருப்பது உயிரைத் தந்தாவது கொடை கொடுக்க விரும்புவது பிறர்மீது கொள்ளும் வெறுப்புக் கொண்டிருப்பது ஆகியவை பொதுவாக மனித இயல்புகள், வானுலகத் தேவர்களும் இதற்கு விலக்கல்ல என்பது பாடல். பொருள் விழைதல் - விரும்புதல். கொன்னே - வீணாக. வெகுளி - கோபம். பொன் - அழகு. ஒளி இவற்றிற்கு உவமையாகச் சொன்னது. உறுப்பு - உடல்பகுதி. கொல்லவந்த பருந்துக்கு அஞ்சித் தன்னிடம் தஞ்சம் அடைந்த புறாவுக்காகத், தன் தொடைச் சதையை அறுத்துக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியின் செயலை இதுகுறித்தது.

கொடை - பயன் கருதாது பிறர்க்கு செய்யும் உதவி. உவப்பு - விருப்பு. வெறுப்பு - பகை உணர்வு. அறுத்தான் - விட்டொழித்தவன். விண்ணகத்து - வானுலகில் இல்லை.

வாழும் முறை இது

இளமை கழியும் பிணி மூப்பு இயையும்
வளமை வலிஇவை வாடும் - உளநாளால்
பாடே புரியாது பால்போலும் சொல்லினாய்
வீடே புரிதல் விதி. 21

'பால்போல இனிக்கும் மொழி பேசும் பெண்ணே!' என்று ஒரு பெண்ணை விளித்து பின்வரும் நல்லுரைகளைச் சொல்வதாக அமைந்துள்ளது பாடல்.

வாழ்வில் இளமைப் பருவம் நிலையானதல்ல. விரைந்து போய்விடும். நோய் (பிணி) முதுமைப் பருவம் (மூப்பு) இவை வந்து சேரும். செல்வமும் உடல் வலிமையும்கூட சிறிது சிறிதாகக் குறைய நேரும். எனவே, இளமையோடும், பிணிமூப்பு இன்றி செல்வம் செல்வாக்கு இருக்கும்போதே; பிறருக்குத் துன்பம் தரும் செயல்களைச் செய்யாமல், வீட்டின்பம் பெறுதற்கு ஏற்ற நற்செயல்களை மேற்கொண்டு ஒழுகுதலே வாழ்வாங்கு வாழும் முறையாகும்.

வளமை - செல்வம். வலி - உடல்வலிமை. தேம்பு. வாடும் - குறையும். உளநாளில் - இளமையும் செல்வமும் உடல்வலிவும் இருக்கும் காலத்திலேயே. வீடு - முத்தி. புரிதல் - விரும்புதல். விதி - முறை. உளநாளால் என்பதற்கு, எஞ்சியுள்ள நாளில் எனவும் பொருள் கொள்ளலாம். பாடு - என்பதற்குத் துன்பம் என்பது பொருள் என்றாலும், தன் வயிற்றுப்பாட்டையே பார்த்துக் கொண்டிராமல் (பாடே புரியாது) என்றும் பொருள் கொள்ளலாம்.

அஞ்சாமை ஆறு

வாள் அஞ்சான் வன்கண்மை அஞ்சான் வனப்பு அஞ்சான்
ஆள்அஞ்சான் ஆம்பொருள்தான்அஞ்சான் - நாள்எஞ்சாக்
காலன் வரவுஒழிதல் காணின் வீடுஎய்திய
பாலின் நூல் எய்தப்படும். 22

ஒருவன் எதற்கும் அஞ்சாதவனாக இருக்கலாம். ஆனால், மரணம் ஒருநாள் வந்தே தீரும் என்பதற்கு அஞ்ச வேண்டும். எனவே அறிவு நூற்கள் கூறும் நல் ஒழுக்கங்களை, மேற்கொண்டொழுக முயல வேண்டும் என்பது பாடல் பொருள்.

கருநெய்தல் மொட்டின் அளவுடையதாக இருக்க வேண்டும். அவன் அக்குடுமியைக் கழுவாது இருத்தல் ஒரு மாத காலம் ஆகும். மாணவர்கள் செய்ய வேண்டியது. ஆசிரியனை வலமாக வந்து வணங்கிப் படித்தலும், படித்து ஆசிரியன் சொல்வதைக் கேட்பதும் ஆகும்.

உய்தல் - ஒழிதல். திங்கள் - முப்பது நாட்கள். நுணங்கு - நுட்பமான. நூல் - அறிவுநூல். ஓதுதல் - படித்தல். வலம் கொண்டு - வலமாகச் சுற்றிக் கொண்டு.

கருநீல நெய்தல் மொட்டளவு குடுமி வைத்துக் கொள்ளுதல், திங்களுக்கு ஒருமுறை அதைக் கழுவுதல், ஆசிரியரை வலம்வந்து வணங்குதல். அவரிடம் பாடம் கேட்டல், படித்தல் இவை மாணவர்கள் செய்தற்குரியன.

குறையில்லா மனிதர் இல்லை

ஒருவன் அறிவானும் எல்லாம் யாதுஒன்றும்
ஒருவன் அறியா தவனும் - ஒருவன்
குணன்அடங்கக் குற்றம் இல்லானும் ஒருவன்
கணன்அடங்கக் கற்றானும் இல். 30

எல்லாவற்றையும் அறிந்த ஒருவனும், ஏதுமே அறியாத ஒருவனும், நல்ல உயர்பண்புகள் இல்லாத ஒருவனும், குற்றமே செய்யாத ஒருவனும், எல்லா நூல்களையும் முற்றாகக் கற்றுணர்ந்த ஒருவனும் உலகில் எங்கும் இல்லையாகும். நற்குணம் முழுவதும் இல்லாதவன் (குணன் அடங்க இல்லாதவன்)

கணம் - நூல் தொகுதி. அடங்க - முற்றுமாக.

எல்லாம் அறிந்தவனும், ஏதும் அறியாதவனும், நல்லி யல்பே இல்லாதவனும், குற்றமே புரியாதவனும் எல்லா நூல்களையும் கற்றுத் தேர்ந்தவனும் உலகில் எங்கும் இல்லை.

தவம் இனிது

உயிர்நோய் செய்யாமை உறுநோய் மறத்தல்
செயிர்நோய் பிறர்கண் செய்யாமை - செயிர்நோய்
விழைவு வெகுளி இவைவிடுவான் ஆயின்
இழிவன்று இனிது தவம். 31

இன்னொரு உயிர்க்குத் தீங்கு செய்யாதிருத்தல், தனக்கு வந்த துன்பத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தன்னுள் மறைத்துக் கொள்ளுதல், பிறருக்குச் சினம் உண்டாக்கும் துன்பத்தை அவர்களுக்கு இழைக்காமல், கோபத்தைத் தூண்டும் துன்பத்தால் உண்டாகும் ஆசை, ஆத்திரம் இவற்றை ஒருவன் விட்டு விடுவானாகில், தவம் இழிவுடையதல்ல, இனியதே ஆகும்.

உறுநோய் - தனக்கு வந்த துன்பம். செயிர் - சினம் நோய் துன்பம். விழைவு - ஆசை. வெகுளி - அச்சம். இழிவன்று - தாழ்ந்ததாகாது.

ஒருயிர்க்கும் துன்பம் செய்யாமை, தனக்கு நேர்ந்த துன்பத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமை, சினமுற்றுப் பிறர்க்குத் துன்பம் செய்யாமை, குற்றம் செய்யத் தூண்டும் நோயைத் தரும் ஆசை, கோபத்தை விடுதல் செய்யின், தவம் இனிதே.

வைப்பான் - செல்வத்தைச் சம்பாதித்துச் சேர்த்து
ர்க்கு உதவ) வைப்பவன் வள்ளல் ஆவான்.
ாருளைப் பிறருக்கு வழங்குபவன், வணிகன் -
ாபாரம் செய்பவன் ஆவான். மேல்நிலைக்கு ஒருவன்
ர்வதற்கு உதவ, அவனுக்குக் கல்வி புகட்டி
ர்த்துபவன் ஆசிரியன் ஆவான். உயிர் என்னும் வேலி
மைத்துப் பாதுகாக்கப்படும் உடம்பை, அந்த உயிராகிய
லியை நீக்கி, அவ்வுயிரைக் கொல்லாமலும், கொன்ற
யிரின் உடல் சதையைத் தின்னாமலும் இருப்பவன்
யர்கதி அடைதல் உறுதி.

உய்த்தல் - உயர்நிலையில் செலுத்துதல். ஆர் -
ாருந்திய. ஒருப்படுத்து - நீக்கி. ஊன் - சதை. ஆர -
ன்ன. துணிவு - உறுதி.

சேமித்து வைப்பவன் வள்ளல். பிறருக்குக் கொடுத்து
தவுபவன் வணிகன். உயர்கதிக்கு உய்ப்பவன் ஆசான்.
யிரைக் கொல்லாமலும், கொன்ற ஊன்தின்னாமலும்
இருப்பவன் உயர்கதி அடைவான்.

வணக்கம் வாழ்வு தரும்

வைததனால் ஆகும்வசை வணக்கம் நன்றாகச்
செய்ததனால் ஆகும் செழுங்குலமும் - செய்த
பொருளினால் ஆகுமாம் போகம் நெகிழ்ந்த
அருளினால் ஆகும் அறம். 34

ஒருவரை ஏசிப் பேசுவதால் ஒரு நன்மையும்
உண்டாகாது. பழிதான் வந்து சேரும். மற்றவரைப்
பணிந்து வணங்குவதால் ஓர் இழப்பும் உண்டாகிவிடாது.

நன்மையே வந்து சேரும். குலப்பெருமை மேலோங்கும். உழைத்துச் சேர்த்த பொருளால் இன்பம் உண்டாகும். அன்புள்ளத்தோடு நெஞ்சு நெகிழ்தல் நற்செயல்கள் செய்வதற்கு இடமாகும்.

வசை - பழி. வணக்கம் - பணிவு. போகம் - இன்பம். அருள் - இரக்கமனம். அறம் - நற்செயல்.

வைதால் வசைவரும். வணங்கினால் வளம் சேரும். குலம் விளங்கும். பொருளால் இன்பம் உண்டாகும். அருளால் அறம் விளையும்.

வீடு தரும் ஞானம்

இல்இயலார் நல்லறமும் ஏனைத் துறவறமும்
நல்இயலின் நாடி உரைக்குங்கால் - நல்இயல்
தானத்தால் போகம் தவத்தால் சுவர்க்கம்
ஞானத்தால் வீடாக நாட்டு. 35

இல்லற வாழ்வில் இருந்து ஒழுகுவோர் செய்யும் நற்செயல்கள், மற்றும் பற்றெல்லாம் விட்டொழித்துத் துறவை மேற்கொண்டொழுகுபவர்கள் செய்கின்ற நற்செயல்கள் என்னும் இரண்டின் தன்மையையும் ஆராய்ந்து சொல்வோமானால், நல்வினையாகிய கொடைக்குணத்தால், இன்பம் உண்டாகும். துறவு மேற்கொண்டு செய்த தவத்தால் சுவர்க்கம் வாய்க்கப் பெறும். நல்ல நூற்களைக் கற்றறிந்து பெற்ற ஞானம் - நல்லொழுக்கத்தால் வீடும் கிட்டும் என்பதை உறுதி செய்வாயாக.

இல்இயல் - இல்லற ஒழுக்கம். துறவறம் - துறவு ஒழுக்கம். உரைக்குங்கால் - சொல்லுமிடத்து. நல்இயல் - நற்செயல். தானம் - பிறருக்குக் கொடுத்து உதவுவது. போகம் - இன்பம். சுவர்க்கம் - வானுலகம். ஞானம் - ஆன்ற விந்தடங்கிய நல்லறிவு. வீடு - பிறவித் துன்பத்திலிருந்து விடுபடுதல்.

இல்லற வாழ்க்கை, துறவற ஒழுக்கம், கொடைக் குணம், தவம், ஞானம் இவற்றால் முறையே இன்பமும் நல்வினையும், செல்வமும், சுவர்க்கமும், முத்தியும் அடையலாகும்.

அழகெனப்படுவது

மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும் - செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு. 36

நீண்ட கருங்கூந்தல், தலைமுடியின் அழகும், கண்ணைக் கவர்ந்திழுக்கும் மென்மார்புகளின் அழகும், செம்பஞ்சூட்டிய நகங்கள் உள்ள விரல்களின் அழகும், வளைந்த காதுகளின் அழகும் குறைசொல்ல இயலாதபடி வரிசையுற அமைந்த முத்துப் போன்ற வெண்ணிறப் பற்களின் அழகும் ஒருவர்க்கு அழகல்ல. ஒருவருக்கு உண்மையான அழகெனப்படுவது, பல நூல் கற்ற கல்வியால் பெறும் சொல் ஆற்றலால் வரும் அழகே ஆகும்.

வனப்பு - அழகு. உகிர் - நகம்.

மைக்கூந்தல் அழகும், மார்பழகும், விரல் அழகும் வெண்முத்துப் பல்லழகும் அழகல்ல. கற்றநூல் தரும் சொல் அழகே அழகாகும்.

இதே கருத்துடைய, நாலடியார் பாடல் ஒன்றுண்டு. அது:

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு."

பெரியோர் குணம்

தொழீஇ அடஉண்ணார் தோழர்இல் துஞ்சார்
வழீஇய பிறர்பொருளை வெளவார் - கெழீஇக்
கலந்தபின் கீழ்காணார் காணாய் மடவாய்
புலந்தபின் போற்றார் புலை. 37

தொழீஇ - தொழுத்தை, அடிமைப் பெண். இவள் சமைத்த உணவை அறிவில் சிறந்த பெரியோர் உண்ணமாட்டார்கள். நண்பர்கள்வீட்டில்தனியே போய்த் தூங்கமாட்டார்கள். மறந்தும் பிறர் பொருளைத் திருட மாட்டார்கள். ஒருவருடன் நட்புக் கொண்டு பழகி விட்டால், பிறகு அவரிடம் குறைகாணார். பெண்ணே! தெரிந்துகொள், இத்தகைய பெரியோர்கள், (முன்பு நண்பராக இருந்தவர்) பகைவர் ஆகிவிட்ட நிலையில், அப்பகைவர் (பழைய நண்பர் என்பதற்காக) தவறுகளைத் தட்டிக் கேட்காது இருக்கமாட்டார்.

தோழர்இல் - நண்பர் வீடு. துஞ்சதல் - தூங்குதல். வழீஇய - தவறியும். வெளவுதல் - கவர்தல். கெழீஇ - நண்பராகி. கீழ் - குறைகளை. புலந்தபின் - பிணங்க நேர்ந்த நிலையில். புலை - குற்றம். மடவாய் காணாய் - இளமை பொருந்திய பெண்ணே! இதனை அறிவாயாக என்று விளித்துச் சொன்னது.

அடிமை சமைத்த உணவை உண்ணார், நண்பரில்லம் தனியே சென்று தங்கார், பிறர் பொருளைத் திருடார், நண்பரிடம் குறைகாணார், நட்டபின், பகைவர் ஆனவர் என்றாலும், அவர் தவறைத் தட்டிக் கேட்காமல் இருக்க மாட்டார்பெரியோர்எனப்பட்டவர்கள். அடிமை சமைத்த உணவை உண்ணார் என்றது அவர்கள் சமைத்த உணவு தூய்மை உடையதாக இருக்காது எனும் கருத்திலாகும்.

இவை நல்ல நல்ல

பொய்யாமை நன்று பொருள்நன்று உயிர்நோவக்
கொல்லாமை நன்று கொழிக்குங்கால்- பல்லார்முன்
பேணாமை பேணும் தகைய சிறிதெனினும்
மாணாமை மாண்டார் மனம். 38

பொய் சொல்லாதிருப்பது நல்லது. உழைத்துப் பொருள்தேடுவது நல்லது. வருந்தித்துன்புறும் வண்ணம் பிற உயிர்களைக் கொல்லாதிருப்பது நல்லது. எண்ணிப் பார்க்கும் இடத்து. (கொழித்தல் - தெள்ளுதல், ஆராய்தல்) பலரிருக்கும் ஒரு கூட்டத்தில் (பல்லார்முன்) தன் மனம் விரும்பும் ஒன்றுக்கு ஆசைப்படாதிருப்பது நல்லது. பெருமைக்கு உரியவர்கள் உள்ளம் ஒரு சிறிதும் தற் பெருமை பாராட்டிக் கொள்ளாதிருப்பது நல்லது.

பொய்யாமை - பொய்சொல்லாதிருப்பது. நோவ - வருந்த. பேணாமை - விரும்பாமை. பேணும் நசைய - ஆசைப்படுவது. மாணாமை - பெருமைப்பட்டுக் கொள்ளாமை. மாண்டார் - மாட்சிமைக்குரிய பெரியோர்.

பொய்யாமை, பொருளீட்டல், கொல்லாமை, ஆசைப்படாமை தற்பெருமை கொள்ளாமை இவை நல்ல பண்புகளாம்.

கள்வனைக் காவல் வைக்காதீர்

பண்டாரம் பல்கணக்கு கண்காணி பாத்துஇல்லார்
உண்டார் அடிசிலே தோழில் - கொண்டாராய்
யாக்கைக்குத் தக்க அறிவுஇல்லார் காப்படுப்பின்
காக்கைக்குக் காப்படுத்த சோறு. 39

பண்டாரம் - காப்பறை. பொருட்கள் பாதுகாப்பாகச் சேமித்து வைக்கும் இடம். பல்கணக்கு - பலவகை வரவு செலவுக் கணக்குகள். கண்காணி - கண்காணிப்பவர், அதாவது மேற்பார்வையிட்டுப் பாதுகாப்பவர். பண்டாரத்தில் உள்ள பொருள்களின் காவலுக்கும், பொருள் சம்பந்தப்பட்ட கணக்குகளை மேற்பார்வை இடுவதற்கும், இல்லத்தரசிகள் பாதுகாப்புக்கு என்றும், வயிறு நிறையும்படி உண்ணும் உணவிற்கும், உடன் பழகும் நண்பர்களில் நல்லவர் என்று எண்ணிக்கொண்டு வயதுக்கு ஏற்ற அறிவு இல்லாதவரைப் பார்த்துக் காவலுக்கு வைத்தால், அவர்கள் காப்பில் வைத்த பொருள்கள் எல்லாம், உண்ணும் சோற்றுக்குக் காகத்தைக் காவல் வைத்தது போலாகிவிடும். அதாவது காகம் காவல் செய்யாது. சோற்றை அதுவே தின்றுவிடும் என்பது பொருள். பாத்து - பலரும் பங்கிட்டு. உண்டுஆர் - உண்டு வயிற்றுப் பசி அடங்கப் பெறும். அடிசில் - உணவு. கொண்டார் - காவலுக்கு ஏற்றவர்கள் என்று எண்ணிக் கொண்டவர்கள். யாக்கை - உடம்பு. யாக்கைக்குத் தக்க அறிவில்லார், என்பதற்கு உடம்புக்கு ஏற்ற அறிவில்லார் எனப் பொருள் கூறலே சரி என்றாலும், உடம்புக்கு ஏற்ற அறிவு என்பதைவிட (உடம்பெடுத்த) வயதுக்கு ஏற்ற அறிவு எனப் பொருள் கூறப்பட்டுள்ளது.

கா - காவல். படுப்பின் - வைத்தால். காக்கைக்கு - காகத்துக்கு. காப்படுத்த - காவல் செய்ய வைத்த. கள்வனையே காவலனாக்கக் கூடாது என்பது பாடலின் பொருள்.

பண்டாரம், வரவு செலவுக் கணக்கு கண்காணித்தல், பெண்களின் கற்பு, உண்ணும் உணவு இவற்றிற்குக் கள்வர்களைக் காவல் வைக்கக் கூடாது.

நல்ல வீரர்க்கு அழகு

உடைஇட்டார் புல்மேய்வார் ஓடுநீர் புக்கார்
படைஇட்டார் பற்றேதும் இன்றி - நடையிட்டார்
இவ்வகை ஐவரையும் என்றும் அனுகாரே
செவ்வகைச் சேவகர் சென்று. 40

உடுத்த உடையை இழந்தவர்கள், உண்ணுதற்கு உணவின்றிப் போனதால், புல்லை மென்று தின்பவர்கள், தப்பிப் பிழைக்க ஓடும் நீரில் புகுந்து மறைந்து கொண்டவர்கள், காத்துக் கொள்ள இருந்த ஆயுதங்களை எல்லாம் இழந்து நிற்பவர்கள், பக்கத்துணை - ஆதரவு

எதும் இல்லாது, தப்பி ஓடவும் இயலாது, நடக்கவும் முடியாமல் தள்ளாடுபவர்கள் ஆகிய ஐந்து வகையினரையும், எக்காலத்திலும் சிறந்தவராகிய போர் வீரர்கள் நெருங்கமாட்டார்கள்.

உடை - உடுத்தும் ஆடை. இட்டார் - தவறவிட்டவர். மேய்தல் - தின்னுதல். புக்கார் - புகுந்தவர். படை - ஆயுதம். இட்டார் - இழந்தவர். பற்று - ஆதரவு. நடை இட்டார் - நடை தளர்ந்தவர்கள். அணுகார் - நெருங்கார். செவ்வகை - சிறந்த. சேவகர் - வீரர்.

உடைபோகவிட்டவர், உணவின்றிப் பசிக்குப் புல்லைத் தின்பவர், உயிர்பிழைக்க ஓடும் நீரில் குதித்தவர், ஆயுதம் இழந்தவர், பக்கத்துணை இல்லாது ஓடவும் இயலாது நடை தளர்ந்து நிற்பவர் ஆகிய ஐந்து வகையினரையும், சிறந்த போர்வீரர்கள் (போரிட) நெருங்கமாட்டார்கள். இவை போர்க்களத்தில், தோற்ற மன்னன் படைவீரனிடம், வெற்றி பெற்ற மன்னர் படையில் உள்ள வீரர்கள் நெருங்கி மீண்டும் தாக்க நினையார், நினைக்கக் கூடாது எனும் கருத்தில் சொல்லப்பட்ட பாடலாகக் கொள்ளலாம்.

பெரியோர்க்கு அழகு

பூவாதாள் பூப்பும் புறங்கொடுத்தாள் இலிங்கி
ஓவாதாள் கோலம் ஒருபொழுதும் - காவாதாள்
யாப்பள் பிறர்மனை ஆனாள் உள்ளிட்டிவ் ஐவரையும்
சாரார் பகைபோல் சலித்து. 41

பருவம் அடையாத கன்னிப்பெண், மாதவிடாய் நின்றுபோன முதிர்பெண், பெண்துறவி, தன்னை

எப்போதும் அலங்கரித்துக் கொண்டிருக்கும் (பிற ஆடவரைக் கவர) கற்பைப் போற்றிக் காத்துக் கொள்ளாதவள், எவர்க்கும் மனையாளாகும் விலை மகளிர் என்றுள்ள ஐவரையும், பெரியோர் பகைவரைப் போல் வெறுத்தொதுக்குவர்.

பூவாதாள் - பருவம் அடையாதவள். பூப்பும் புறம் கொடுத்தாள் - மாதவிடாய் நின்று போனவள். இலிங்கி - பெண்துறவி. ஓவாதாள் - விலக்காதவள். ஒப்பனை - அழகு. காவாதாள் - கற்பொழுக்கம் காக்கத் தவறியவள். யார்யார் - யாவர்க்கும். பிறர்மனை ஆனாள் - பெண்டானவள். சாரார் - நெருங்கார். சலித்து - வெறுத்து.

பருவம் அடையாத இளம்பெண், மாதவிடாய் நின்றுபோன முதுபெண், பெண்துறவி, பரத்தை, விலைமகள் என்னும் ஐவரையும் சேராமல் பெரியோர் பகைவரைப் போல வெறுத்தொதுக்குவர்.

பெண்களுக்கு அழகு

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்து விருந்தோம்பித் - திருவாக்கும்
தெய்வதையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர்க் சிறப்பு. 42

கணவனுடைய செல்வம் - பொருள் வரவின் தன்மை அறிந்து, அதற்கு ஏற்ற வகையில் செலவு செய்யத் தெரிந்து, இல்லறம் நடத்துவதுவும், உறவினர்கள் மீது கடுசொல் வீசி அவர்கள் அஞ்சி நடுங்கச் செய்யாமலும், விருந்தினரை உபசரித்தும், புகழும் செல்வமும் கிடைக்கச்

செய்யும் தெய்வ வழிபாட்டை எந்த நாளும் தவறாது மேற்கொண்டும் ஒழுகுவதே நல்ல பெண்களுக்கு அழகாகும்.

வருவாய் - வரும் பொருள். வழக்கறிந்து - செலவிடும் வகை அறிந்து. சுற்றம் - உறவினர். வெருவாமை - அஞ்சாதபடி. வீழ்ந்து - விரும்பி. ஓம்பி - பாதுகாத்து. திருஆக்கும் - செல்வம் கிடைக்கச் செய்யும். தெய்வதை - தெய்வம். என்றுமொன்றும் - எப்போதும். தேற்ற - தெளிவாக. வழிபாடு - துதித்தல்.

வருவாய் அறிதல், அதற்கு ஏற்பச் செலவு செய்தல், சுற்றம் வெருவாமை, விருந்தோம்பல், தெய்வ வழிபாடு இவை பெண்களுக்குப் பெருமை தருவனவாகும்.

நாளும் பொழுதும் நல்லதாக...

நாள்கூட்டம் மூர்த்தம் அவற்றோடு நன்றுஆம்
கோள்கூட்டம் யோகம் குணம்உணர்ந்து - தோள்கூட்டல்
உற்றானும் அல்லானும் ஐந்தும் உணர்வானால்
பெற்றான் நாள்கொள்கை பெரிது. 43

நாள் பொருத்தம், நல்ல முகூர்த்த வேளை இவற்றோடு நன்மை தருவதாகிய நட்சத்திரப் பொருத்தம், யோகம், இவற்றின் நன்மை அறிந்து, திருமணம் மற்றுமுள்ள நல்லனவற்றைச் செய்ய இந்த ஐந்தும் பொருந்திய உகந்த நாளைத் தெரிவு செய்து கொள்வது மிகவும் நல்லதாகும். நாள் - ஞாயிறு தொடங்கிச் சனி முதலாக வாரநாட்கள். செவ்வாய், சனிக்கிழமைகளைத் திருமணம் போன்ற நல்ல காரியங்கள் செய்யத்

தேர்ந்தெடுக்க மாட்டார்கள். கூட்டம் - பொருத்தம் மூர்த்தம் - முகூர்த்தம். முகூர்த்தம் என்பது மூன்றே முக்கால் நாழிகைப் பொழுது, ஒன்றரை மணிநேரம்.

கோள் கூட்டம் - நட்சத்திரப் பொருத்தம். யோகம் - பொழுது. (அமிர்தயோகம், சித்தயோக நன்று. மரணயோகம் தீது என்பர்.) குணம் இவற்றின் நன்மை தீமைகள். தோள்கூட்டம் - இருவர் தோள் பொருந்தும் திருமணம். உற்றான் - அடைபவன். அல்லான் - மற்ற நல்லனவற்றை மேற்கொள்பவன். பெற்றான் நாள்கொள்கை - நல்ல நாளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது. பெரிது - மிகவும் நல்லது.

திருமணம் முதலான நல்லனவற்றைச் செய்யும் போது, நாள், நட்சத்திரம், திதி, யோகம், நேரம் என்னும் ஐந்தும் பொருந்தி வரும் நல்ல நாளைத் தேர்வு செய்து கொள்வது நல்லது.

திருமகளுக்கும் இது பொருந்தும்

பேண்அடக்கம் பேணாப் பெருந்தகைமை பீடுடைமை
நாண்ஒடுக்கம் என்றைந்து நன்றாகப் - பூண்ஒடுக்கம்
பொன்வரைக் கோங்குஏர்ப் பூந்திருவே ஆயினும்
தன்வரைத் தாழ்த்தல் அரிது. 44

சுற்றத்தார்களைப் பேணிப் போற்றுதல், அடக்கம் உடையவளாய் இருத்தல், பிற ஆடவரை விரும்பாத பெருந்தன்மை, பெண்மைக்கே உரிய பெருமை, வெட்கத்தால் வரும் ஒடுக்கம், என்ற ஐந்து பண்புகளையும் பெண்கள் கொண்டிருப்பதே (நன்றாம்) நன்மை தருவதாகும். இவை இல்லாதவள் பொற்பூண் பூண்டு

இருக்கும், கோங்க மலர்போலும், அழகுடைய தாமரை மலரில் வாழும் திருமகளே ஆனாலும், கணவரைத் தாழ்த்தாது தன் கணவனுக்கு அடங்கி இருத்தல் நல்லதாகும்.

பேண் - பேணிக்காத்தல். அடக்கம் - மன அடக்கம். பேணா - விரும்பாத. பீடு - பெருமை. நாண் - வெட்கம். ஒடுக்கம் - சொல், செயல் இரண்டாலும் அடங்கி இருக்கும் உள்ள அமைதி. பூணொடுக்கம் - பொற்பூண் உள்ளடங்கி இருக்கும். பொன்வரை - பொன்மலை. கோங்குஏர் - கோங்கம் பூப் போன்ற அழகு. பூந்திரு- தாமரைப் பூவிலிருக்கும் திருமகள். தன்வரை - தன்னவரை. தாழ்த்தல் - தாழ்த்துதல்.

சுற்றம் பேணுதல், அடக்கம், பிற ஆடவரை விரும்பாமை, பெருமை, நாண் ஒடுக்கம் ஐந்தும் திருமகளுக்கும் தேவைப்படும் பண்புகள்.

இது உயர அது உயரும்

வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான்று உயரவே நெல்உயரும் - சீர்சான்ற
தாவாக் குடிஉயரத் தாங்கரும்சீர்க் கோஉயரும்
ஓவாது உரைக்கும் உலகு. 45

நீண்டு அடர்ந்த கருங்கூந்தல் உடைய பெண்ணே! வயலில் வரப்பு நாளும் உயருமானால் வந்து பாயும் நீரின் அளவும் உயரும். நீர்மட்டம் வயலில் உயர்ந்திருந்தால், அதில் விளையும் நெற்பயிரும் உயர்ந்தோங்கி வளரும்.

இதைப் போலவே சிறப்புடைய, குறைஇல்லாக் குடிமக்கள் உயர்ந்தால், மற்றவர்களால் தாங்குதற்கு அரிய மன்னன் உயர்வான் என்பதே, உலகம் ஓயாது உச்சரித்துக் கொண்டிருக்கும் ஓர் உண்மையாகும். குடிஉயரும் என்பதற்கு நெல்விளைவிக்கும் குடியானவர் உயர்வர் என்றும் பொருள் கூறுவர்.

வார் - நீண்ட. வரப்பு - வயல்கரை. வைகலும் - நாள்தோறும். நாள்தோறும் வரப்புயர வேண்டும் என்றது நடப்பதால் அழுந்தியும் அகன்றும் வரப்புதாழும். இதனால் நீர் நிற்கும் அளவு குறையும் என்பதால். நீர்சான்று - தண்ணீர் மிகுதியாகப் பாய்ந்து. சீர்சான்ற - சிறப்புப் பொருந்திய. தாவா - கேடில்லாத. குடி - குடிமக்கள், குடியானவர். சீர் - சிறப்பு. கோ - அரசன். ஓவாது - ஓய்வில்லாமல். உரைக்கும் - கூறும்.

வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல்உயரும், நெல்லுயரக் குடிஉயரும், குடிஉயரக் கோன் உயரும் என்பது பாடல் பொருள். அதியமான் நெடுமான் அஞ்சியைக் காணவந்த புலவர்கள் அவனைப் பலபடப் பாராட்ட, அவ்வை மூதாட்டி 'வரப்புயர' என்று மட்டும் சொல்லி வாழ்த்தினாள். "வரப்புயர்ந்தால் நீர் உயரும், நீர் உயர்ந்தால் நெல்உயரும், நெல் உயர்ந்தால் குடிஉயரும், (குடிமக்கள் பசித்துன்பம் இல்லாது வாழ்வர்) குடி உயர்ந்தால் கோல் உயரும்" - என்ற கருத்தில், சிறுபஞ்சமூலம் பாடல் இது கூறுவதும் அப் பொருளே!

இவை நன்று

அழியாமை எத்தவமும் சார்ந்தாரை ஆக்கல்
பழியாமை பாத்தல் யார்மாட்டு - ஒளியாமை
கன்றுசாவப் பால்கறவாமை செய்யாமை
மன்று சார்வாக மனை. 46

எந்தவிதமான தவமாக இருப்பினும், அதைச் செய்பவர்களாயினும், அவர்களுக்குத் தீங்கு செய்யாது இருத்தல், தம்மைத் தஞ்சம் என்று வந்தடைந்தவரை உயர்வடையச் செய்தல், பிறர் தம்மைப் பழிகூற இடம் கொடாதிருத்தல், எவரிடத்தும் எதையும் மறைக்காமலும், பகுத்துண்டு வாழ்தலும், கன்றுக்குட்டி இறந்த பசுவிடம் பால் கறவாமை, நீதிமன்றங்கள் பக்கம் வீடு கட்டாமை ஆகிய இவை எல்லாம் நல்லன என்பர் பெரியோர்.

அழியாமை - கெடுக்காமை. ஆக்கல் - உயர்வடையச் செய்தல். பாத்தல் - பகுத்து உண்ணல். யார்மாட்டும் - எவரிடத்தும். ஒளியாமை - மறைக்காமை. கன்று - கன்றுக்குட்டி. மன்றுசார்வை - நீதிமன்றம் பக்கத்தில். மனை செய்யாமை - வீடு எழுப்பாதிருத்தல்.

தவம் அழியாமை, சார்ந்தவரை உயர்த்தல், பழி ஏற்காமை, பகிர்ந்து உண்ணுதல், எதையும் மறைக்காமை, கன்றிறந்த பசுவிடம் பால்கறவாமை, மன்றருகில் மனை எழுப்பாமை நன்றாம்.

கோடி கொடுத்தாலும் கொல்லார்

நசைகொல்லார் நச்சியார்க்கு என்றும் கிளைஞர்
மிசைகொல்லார் வேளாண்மை கொல்லார் - இசைகொல்லார்

பொன்பெறும் பூஞ்சணங்கின் மென்முலையாய் நன்குணர்ந்தார்
என்பெறினும் கொல்லார் இயைந்து. 47

நச்சியார்க்கு நசை என்றும் கொல்லார் - தம்மை விரும்பினவர்கள் விருப்பத்தை நிறைவேற்ற என்றும் தயங்கார். தங்களின் உறவினர் உண்ணும் உணவிற்குத் தீங்குவரச் செய்யார். அடுத்தவருக்குச் செய்யும் உதவியைக் கெடுக்கமாட்டார். வரும் புகழைக் கெடுக்க நினைக்கமாட்டார். பொன் போலும் நிறமுடைய தேமல் படர்ந்த, மென்மையான மார்பை உடையவளே! நல்லவை நிலைகளை நன்கு ஆராய்ந்து உணர்ந்த பெரியோர், எந்தவகைய அரிய பொருளை, அதற்கு ஈடாகத் தருவது என்றாலும், தாமாக விரும்பி ஓர் உயிரையும் கொல்ல மாட்டார்.

நசை - விருப்பம். நச்சியார்க்கு - தம்மை விரும்பியவர்க்கு. கிளைஞர் - உறவினர். மிசை - உணவு. இசை - புகழ். பூஞ்சணங்கு - அழகிய தேமல். என்பெறினும் - எதற்காகவும், எது கிடைப்பதாக இருந்தாலும். இயைந்து - மனம் விரும்பி. கொல்லார் - கொலை செய்ய மாட்டார்கள்.

விரும்பியவர் விருப்பத்தை நிறைவேற்றுவர், உறவினர் உண்ணும் உணவுக்குக் கேடு செய்யார், பிறருக்குச் செய்யும் உதவியைத் தடுக்கமாட்டார், புகழுக்குக் கேடு செய்யார், பெரியோர் கோடி கொட்டிக் கொடுத்தாலும் ஓர் உயிரைக் கொல்லமாட்டார்.

எள்ளல் - இகழ்தல்;
நிரயம் - நரகம்

38. நரகம்போக நான்

பொய் குறளை வெளவல் அழு
ஐயர்தீர் காட்சியார் சிந்தியார், சி
ஐயம் புகுவித்து அருநிரயத்து
தெய்வமும் செற்று விடும்.

பொய் பேசுதல், கோள்
பொறாமைப்படுதல் ஆகிய நா
திரிபு அறக்கற்றுத் தெளிந்த

51. ஒளி கெடாதிருக்க

மின் ஒளியும் வீழ்மீனும் வேசையர்கள் கோலமும்
தம் ஒளி வேண்டுவோர் நோக்கார் பகல் கிழவோன்
முன்னொளியும் பின்னொளியும் அற்று.

மின்னல் ஒளியையும், உதிர்ந்து விழுகின்ற எரி நட்சத்திரங்கள் ஒளியையும், விலை மகளிர் அலங்காரம் என்னும் அழகு ஒளியையும், தம் உடல் வனப்பு - என்னும், உயிர் ஒளி கெடாதிருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள். அதே போல் சூரியனின், காலை நேரக்கதிர் ஒளியும், மாலை நேரக் கிரணங்களும் கூடக், கண்ணில் படக்கூடாது.

●

52. நல்லவர் உள்ளம்

படிறும் பயனிலவும் பட்டி உரையும்
வசையும் புறனும் உரையாரே என்றும்
அசையாத உள்ளத்தவர்.

பொய் பேசமாட்டார்கள். பயனற்ற சொல் கூற மாட்டார்கள். வீண் வார்த்தைகளை விளம்பமாட்டார்கள். வையமாட்டார்கள். புறங்கூற மாட்டார்கள் -என்றும் நடுவு நிலைமை தவறாத நல்ல உள்ளம் உடையவர்கள்.

படிறு - பொய்;
பட்டி உரை - வீண்வார்த்தை;
புறம் - கோள்.

●

53. செய்யக் கூடாத சில...

தெறியொடு கல்லேறு வீளை விளியே
விகிர்தம் கதம்கரத்தல் கைபுடை தோன்ற
உறுப்புச் செருத்தலோடு இன்னவை எல்லாம்
பயிற்றார் நெறிப் பட்டவர்.

ஒரு பொருளை எத்தி எறிதல், கல் எடுத்து வீசுதல், கனைத்தல், சத்தம் போட்டு எட்ட உள்ள ஒருவரைக் கூப்பிடுதல், ஒருவரின் நடத்தையை, பேச்சைச் சொல்லிக் காட்டி; தானும் அதுபோலச் செய்து பழிக்கக் காட்டுதல், கோபித்தல், ஒளிந்து கொள்ளுதல், கைதட்டிப் பேசுதல், கூப்பிடுதல், உடலுறுப்புகளால் சைகை காட்டுதல் போன்றவற்றைச் செய்யமாட்டார்கள் ஒழுக்கம் உடைய சான்றோர்கள்.

தெறிதல் - எத்துதல்; ஏறு - எறிதல்; வீளை - கனைப்பு; விளி - கூப்பிடல்; விகிர்தம் - பழிக்கக் காட்டுதல்; கதம் - கோபம்; கைபுடை - கை தட்டுதல்; செருத்தல் - சைகை; பயிற்றுதல் - செய்தல்; நெறி - ஒழுக்கம்.

●

54. விருந்தினர்க்கு விரும்பிச் செய்ய வேண்டியவை

முறுவல் இனிதுரை கால்நீர் மனை பாய்
கிடக்கையோடு இவ்வைந்தும் என்ப தலைச்சென்றார்க்கு
ஊணொடு செய்யும் சிறப்பு.

விருந்தென வருவோரை சிரித்த முகத்தோடு வரவேற்க வேண்டும். அவரோடு இன்சொல் பேசவேண்டும். கால்கழுவ நீரும், இருக்க மனையும், படுக்கப் பாயும், தங்க